# குமாரத்தி

சிறுகதைகள்

அன்ரன் செல்வகுமார்



மணிமேகலைப் பிரசுரம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமாரத்தி

ஆசிரியர் : [illegible]

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமாரத்தி

ஆசிரியர் : அன்ரன் செல்வக்குமார்

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447
7. (ப.எண்.4) தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 2434 2926
தொலை நகல் : 0091 044 - 2434 6082
மின் அஞ்சல் : manimekalai@eth.net
www.manimekalaiprasuram.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | ➢ குமாரத்தி |
| ஆசிரியர் | ➢ அன்ரன் செல்வக்குமார் |
| மொழி | ➢ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ 2005 |
| பதிப்பு விவரம் | ➢ முதல் பதிப்பு |
| உரிமை | ➢ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ மேப்லித்தோ |
| நூலின் அளவு | ➢ கிரௌன் சைஸ் (12 ½ X 18 ½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ XVI + 144 = **160** பக்கம் |
| நூலின் விலை | ➢ **ரூ. 40.00** |
| அட்டைப்பட ஓவியம் | ➢ அரசு |
| லேசர் வடிவமைப்பு | ➢ எக்ஸ்பிரஸ் கம்ப்யூட்டர் சென்னை - 17. |
| அச்சிட்டோர் | ➢ கே யெம் பேக்கேஜிங் இன்டஸ்டிரிஸ் |
| நூல் கட்டுமானம் | ➢ தையல் |
| வெளியிட்டோர் | ➢ மணிமேகலைப் பிரசுரம் சென்னை - 17. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



என்னைப் பெற்றெடுத்து
தொட்டிலிட்டு
சீராட்டித் தாலாட்டி
நிலாக்காட்டி சோறூட்டி
தாய்ப்பாலுடன்
தமிழ்ப் பாலையும்
ஊட்டி வளர்த்து
என்னை ஆளாக்கிவிட்ட
என் அன்புத் தாயார்
அமரர் திருமதி மேரி மெக்டலீன்
தேவ சகாயம் பிள்ளை
(குமாரத்தி)
அவர்களுக்கு
இச் சிறுகதைத் தொகுப்பை
சமர்ப்பணம் செய்வதில்
பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்

அன்ரன் செல்வக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இனிய வாசக நண்பர்களுக்கு

என் இனிய வணக்கங்கள் பல!

நின்று

நிதானித்து

நிமிர்ந்து பார்க்கின்றேன்

எழுத்துலகில் காலடி எடுத்து வைத்து முப்பது வருடங்கள் பூர்த்தியாகி விட்டன "எழுத்தாளன் சுதந்திரமானவன் அவனது எண்ணங்கள் சுதந்திரமானவை. அவனை ஒரு வட்டத்துக்குள் அடக்க முடியாது" என்ற கொள்கையின் அடிப்படையில் எழுது கோலைத் தூக்கிய எனது கரங்கள் இன்று வரை அதன் நிலையில் நின்று சிறிதும் தளரவில்லை.

எனது பதினைந்தாவது வயதில் 'செவ்வந்தி' காலாண்டு சஞ்சிகையில் வெளியாகிய "புதிய பாடம்" எனும் சிறு கதையின் மூலம் இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்த நான் ஆரம்ப காலத்தில் புதுக் கவிதைகளையே எழுதிக் கொண்டிருந்தேன் எனது "கோடுகளும் கோலங்களும்" கவிதைத் தொகுப்பு 1984ல் யாழ் இலங்கை தொழில் கல்லூரி மாணவ மன்றத்தின் வெளியீடாக வந்து பெரும் பாராட்டை பெற்றது "வானத்துப் பெண் ஏன் கண்ணீர் வடிக்கின்றாள்" என்ற எனது கவிதைத் தொகுதி 1987ல் வெளிவந்து நல்ல வரவேற்பைப் பெற்றது. 2000ம் ஆண்டில் எனது "சமுதாயத் தோப்பில் சாய்ந்த தென்னைகள்" சிறு கதைத் தொகுப்பு வெளிவந்து உலகலாவிய புகழை தனதாக்கிக் கொண்டது. 2004 நவம்பரில் (6-11-2004) "அந்தரிக்கும் ஆன்மா" கவிதைத் தொகுதி மணிமேலைப் பிரசுரமாக வெளிவந்து இலக்கிய உலகில் சிறந்த வரவேற்பைப் பெற்றது. "பேய் மழை பெய்யும் போது நிலமெல்லாம் ரகசியமாக ஒளிந்து கொண்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றுக்கள் கண் திறந்து விடுவது போல இந்த மாதிரியான அங்கீளகாரங்கள் தான் ஒரு படைப்பாளியை இன்னும் உற்சாக மாக்குகின்றன." பகலெல்லாம் வேலைகள் இரவெல்லாம் இலக்கியம் என்று என்னை நானே தினம் தினம் புதுப்பித்துக் கொள்ளுகிறேன். புத்தகங்கள் வாசிப்பதை நான் எப்போதும் நிறுத்தியதே இல்லை. முப்பது வருடங்களாக இலக்கிய உலகில் சஞ்சரித்தாலும் காலமும் உலகமும் என்னை எவ்வளவோ பக்குவப்படுத்திய பிறகு வெற்றிகளின் ருசியும் தோல்விகளின் வலியும் என்னை அனுபவ நதிக்கரையில் துவைத்தெடுத்த பிறகும் இலக்கியம் எனக்கு இன்னும் இனிக்கிறது. இலக்கியத்தில் வடக்கு, கிழக்கு தெரியாத ஒரு அப்பாவியாக நுழைந்த எனக்கு முகம், முகவரி, பொருள், புகழ் எல்லாம் தந்தது இலக்கியம் தான். பள்ளி நாட்களில் சின்ன சிறுவனாக அரைக் காற்சட்டையுடன் இளவாலை எனும் அழகிய கிராமத்தில் நான் ஓடி ஆடி விளையாடிய வீதி, நான் குளித்த சேந்தாங்குளம் கடற்கரை, சித்திரமொழி வயல்வெளி, ஐந்துகண் மதவு, பணங்கூடல், உதைபந்து விளையாடிய இளைவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி விளையாட்டு மைதானம், நண்பர்களுடன் நீந்தி விளையாடிய கீரி மலைக் கேணி, பஸ் விட்டும் கார் ஓட்டியும் விளையாடிய அன்னமுன்னா மரமும், மஞ்சுமுன்னா மரமும் எந்தன் அடி மனதில் இன்றும் இனிக்கிறது நொச்சி இலை போட்டு ஆவி பிடிக்கும் போது மூக்கடைப்பு நீங்கி விடுவது மாதிரி இளவாலை கிராமத்துக் காற்றில் என் மன அடைப்பெல்லாம் தெளிவாகி விடுவதை இப்போதும் உணர்கின்றேன். "எல்லோரும் என் கவிதை மனசை நேசிப்பது மாதிரி நான் பழகும் எல்லோரிடமும் அவர்களிடம் இருக்கிற உயர்ந்த குணங்களை நேசிக்கிறேன்" சங்க இலக்கியம் முதல் சாத்ரே வரை படைப்பு என்னென்ன செய்திருக்கின்ற படிப்பு வேண்டும். நவீன உலகம் நாளை என்னென்ன செய்யும் என்று தேடித் தெரிந்து கொள்ளுகிற துடிப்பு வேண்டும். இவை இரண்டையும் உணர்ந்தவனே இங்கே படைப்பாளியாக நிலைத்திருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முப்பது வருட கால எனது எழுத்துத் துறையில் நானும் என் எழுத்தும் எவ்வளவோ மாறியிருக்கின்றோம். என் அன்புத் தாயாரை இழந்திருக்கின்றேன். என் தாயை இழந்த சோகத்தை என்னால் ஜீரனிக்க முடியாமல் தினறி இருக்கின்றேன். நிறைய நிறையவே மற்றவர்களின் கதைகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் படித்திருக்கின்றேன். சிறு குழந்தையின் சிரிப்பில் இருந்து பெரியவர்களின் கயமைவரை உணர்ச்சிகளின் முழுநிறமாலையையும் அனுபவித்து இருக்கின்றேன். சிறந்த பேச்சாளர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், இலக்கியவாதிகள், சிறந்த மனிதர்கள், பானங்கள், ஆறுகள், ஏரிகள், மலை வாஸ்தலங்கள், குற்றமற்ற சுக வாழ்வின் அத்தனை சந்தோசங்களையும் பார்த்திருக்கிறேன் பல நாடுகளுக்குச் சென்றிருக்கின்றேன். மெல்ல மெல்ல வாழ்வின் கடைசி அர்த்தத்தை வியர்ந்திருக்கின்றேன் துரோகத்துடனும் நிஜ நட்புடனும் பொறாமையுடனும் பரிச்சயம் பெற்றிருக்கின்றேன். ஆனால் இத்தனை பார்த்த பின்னும் என் தனித்தன்மை, என் பாணி, கலாசார அடையாளம் என்னை விட்டு விலகாமல் அப்படியே இருக்கின்றது.

இது வரையில் என்னால் எழுதப்பட்ட 72 சிறுகதைகளில் எத்தனையோ மனுள்ளே எத்தனையோ விதங்களில் பாதித்து விட்டதால் இன்று நான் எழுதும் சிறு கதைகள் ஆரவாரமில்லாமல் சொல்லப்படுகின்றன. தமிழ விடுதலைப் போராட்டத்தில் என் கவிதைகளும், என் சிறு கதைகளும் அதீத பங்கு வகித்திருக்கின்றன. என் பேனாவால் தமிழ் விடுதலைக்காகப் போராடியிருக்கின்றேன். ஈழ விடுதலை. போராட்டத்தில் போராளிகள் பலரின் உயிர் தியாகங்களைப் பார்த்திருக்கின்றேன். ஈழ விடுதலை போராட்டத்தில் என் நண்பர்கள் பலரை இழந்திருக்கின்றேன். அவர்களை இழந்த சோகம் தாங்க மாட்டாமல் குலுங்கி குலுங்கி அழுதிருக்கின்றேன். ஈழ விடுதலைப் போராட்டத்தில் மரணித்துப் போய்விட்ட மாவீரர்களை மதிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்காக ஏற்றப்படும் "தியாகச் சுடர்" புனிதமாக உணர்ச்சிபூர்வமாக மதிக்கின்றேன். அவர்கள் "தமிழ் மண்ணில் புதைக்கப்பட வில்லை விதைக்கப்பட்டிருக்கிறார்கள்" என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிருக்கின்றேன். நீண்ட வாழ்வின் இறுதியில் உள்ள சோகங்கள் சற்றே துரித்தி நிற்கின்றன. என் வானவில் கனவுகள் நிறமிழந்து விட்டது தெரிகின்றது. யதார்த்தத்தை எதிர்கொள்ளும் போது குறைகளும் மேம்பாடுகளும் நான் முந்தி நீ முந்தி என்று என் கதையில் இடம் பிடிக்க தவிக்கின்றன. இவற்றைக் கலந்துதான் சொல்ல வேண்டி இருக்கின்றது.

வாழ்வெனும் போராட்டத்தில் பல சங்கதிகள் உள்ளன. don't give upon life and rectitude என்பதுதான் என் கதைகளில் அடி நாதமாக வருகின்றன. என் கதைகளில் வரும் பாத்திரங்கள் இன்னாரைப் பற்றித்தான் எழுதியிருக்கிறான் என்று சொல்ல முடியாதபடி இவர் கொஞ்சம் அவள் கொஞ்சம் அது கொஞ்சம் இது கொஞ்சம் என்று என் சொந்தக் கற்பனையையும் கலந்து அமைக்கப்பட்ட கதைகள். அதனால் கதாபாத்திரங்கள் யாரைப் போலவும் இருக்காது. எல்லோரையும் போலவும் இருக்கும். இந்த வித்தை ஒரு எழுத்தாளனின் தொழில் ரகசியங்களில் ஒன்று. மற்றது எனது எழுத்து நடை.....

எழுத்துலகில் இடம்பிடிக்க நான் நடந்து வந்த பாதைகளில் மேடுகள் சில பள்ளங்கள் பல. எடுத்த முயற்சிகளில் பல முறை தளர்ச்சி. சிலமுறை உயர்ச்சி. சில பிரசுரமாகின பல பிரசுரமாகாமலே திரும்பி வந்தன. ஆனால் எனக்குள்ளே முகைவெடித்து வளர்ந்த இலக்கிய ஆர்வத்தை, எழுத்தாற்றலை, கலை உணர்வை, அழகியலை வெளிக்கொணர என்னை நானே தினம் தினம் பட்டை தீட்டிக் கொண்டேன் "நீ ஒரு கவிஞனாகவோ எழுத்தாளனாகவோ நாடக நடிகனாகவோ மிளிர வேண்டும் என என் மூளைக்குள் மின்னல் கீற்றுப்போல புகுத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் மறைந்த வித்துவான் திரு. அ.சந்தியாப்பிள்ளை, திரு.பி.ஏ.சி. ஆனந்தராஜா ஆகிய இருவரினதும் நினைவில் என் நெஞ்சம் நிறைகின்றது.

எனது சிறுகதை, கவிதைகளுக்கு "களம்" அமைத்துத் தந்த ஈழநாடு, தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, தினக்குரல், சுடர்ஒளி, மின்னல், களம், களத்தில், தொடுவானம், எரிமலை, இளந்தென்றல், முல்லை, கோழிக்குஞ்சு, ஞாயிறு, கலையரசி, கரும்பு, ஈழமுரசு, தமிழர் செந்தாமரை, ஆதவன், ஞானம் தொழிநுற்ப இளைஞ்சன், சிந்தியா ஆகிய சஞ்சிகைகளுக்கு என் இதயம் கலந்த நன்றிகள்.

நான் எடுத்த எடுப்பிலேயே எழுதிவிட மாட்டேன். சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ள மக்களில் இருந்து அதி உயர் பீடம் வரை உள்ள மக்களிடமும் நான் நெருக்கமாக பழகுபவன் என்பதால் என் கதைகளுக்கான கரு அங்கேயே கிடைக்கிறது. துருவித் துருவி ஆராயும் என் விழிகளுக்கும் செவிகளுக்கும், ஏற்ற கரு கிடைத்தால் அதை என் மனதுள்ளே வைத்து அசை போடுவேன். நாலைந்து நாட்கள் இலலையேல் நாலைந்து வாரங்கள் அன்றேல் நாலைந்து மாதங்கள் ஏன் நாலைந்து வருடங்கள் கூட என் மனதுள்ளே வைத்து நன்றாக அசைபோடுவேன். சரியானதொரு இலக்கிய வடிவம் கிடைத்து விட்டது என்ற திருப்தி என் அடி மனதில் வந்ததும் அதை ஒரே மூச்சில் எழுத்தில் வடித்து விடுவேன்.

அதனால்தான் எனது சிறு கதைகள், கவிதைகள் யதாத்தமானவையாக அமைந்து விடுகின்றன.

இச் சிறுகதைச் தொகுப்பிற்கு மதிப்புரை நல்கிய பிரதேசத்தின் மூத்த எழுத்தாளரும், பொறியியலாளரும், தொழிலதிபருமாகிய திரு. சுதாராஜ் அவர்களுக்கும் அழகாக பிரசுரித்து உதவிய திரு. ரவிதமிழ்வாணன் (மணிமேகலைப் பிரசுரம்) அவர்களுக்கும் என் அன்பு கலந்த நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கிறுக்கல் எழுத்துக்களையெல்லாம் அவ்வப் போது தன் அழகான கையெழுத்தில் எழுதித் தந்து அதைப் பின்பு கணிணியில் பதிவு செய்து தரும் என் அன்பு மனைவி திருமதி சிந்தியா ரஜனி அன்ரன் அவர்களுக்கும் என் அளப்பரிய நன்றிகள்.

தனது பல்கலைக்கழக படிப்புகளுக்கு மத்தியிலும் தேசியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், வெளிநாட்டுப் பத்திரிகைகள் என்பவற்றில் ஆங்காங்கே பிரசுரமாகிய எனது சிறுகதைகளை தேடி எடுத்து "குமாரத்தி" சிறுகதைத் தொகுப்பு உருவாகுவதற்கு பெரும் துணை புரிந்த எனது இலக்கிய ரசிகையும் இனிய சினேகிதியும் என் மனைவியின் அன்பு மைத்துனியுமாகிய செல்வி மேரி ஜெசிந்தா ஜெனேந்திபன் (Economics and Socialogy Department) யாழ் பல்கலைக் கழக இரண்டாம் வருட மாணவி அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்,.

*2000 முதல் 2005-ஆம் ஆண்டு வரை பல்வேறு தேசிய பத்திரிகைகளில், வெளிநாட்டுப் பத்திரிகைகளில் வெளி வந்த சிறுகதைகளின் தொகுப்பு இந்நூல்.*

எனது "குமாரத்தி" சிறுகதைத் தொகுப்பு நம் சமுதாயத்திற்கு நல்லதொரு வழி காட்டும் எனத்திடமாக நம்புகின்றேன்.

மீண்டும் சந்திப்போம்

அன்புடன்

**அன்ரன் செல்வக்குமார்**

Resi : T.Anton (Selva Kumar)
22/17, Lane No.1
Sara Textile Road,
Puttalam, Srilanka
Tel : No. 09432 - 22 65 810

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

அன்ரன் செல்வக்குமார் அவர்களின் இரண்டாவது சிறுகதைத்தொகுப்பு இந்நூல். ஏற்கனவே "சமுதாயத் தோப்பில் சாய்ந்த தென்னைகள்" எனும் சிறுகதைத் தொகுப்பு வெளிவந்து இலக்கிய ஆர்வர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றமை குறிப்பிடத் தக்கது. நண்பர் அன்ரன் செல்வக்குமார் சிறந்தொரு சிறுகதை ஆசிரியராகப் பரிணமித்துள்ள போதும் ஒரு கவிஞராகவே எழுத்துலகில் பிரவேசித்தார். பதினைந்து வயதில் இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்து சுமார் முப்பது வருடங்கள் எழுத்துத் துறையில் ஈடுபட்டுள்ள அன்ரனின் முதலாவது கவிதைத் தொகுப்பு 1984ல் வெளிவந்து இருக்கிறது. பாடசாலை மாணவனாக இருந்த காலத்திலேயே பல கவிதைகளை ஆக்கியிருக்கிறார்.

சமுக நோக்கும் ரசனை உணர்வும் கொண்ட ஒருவனே இயல்பான ஓர் எழுத்தாளனாக முகிழ்ந்து வர முடியும். மனித நேயம், பிறர் உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், இயற்கையை அவதானித்து ரசித்தல் போன்ற சுபாவங்களையெல்லாம் அன்ரன் செல்வக்குமாரின் உணர்வுகளோடு கலந்திருக்கின்றன. இந்த குணவிசேடம் அவரது எல்லா சிறுகதைகளிலும் வெளிப்படுகிறது. தன்னைச் சூழ உள்ள மனிதர்களின் துன்ப நிலைகளையும், சமுக ஏற்ற இறக்கத் தன்மைகளையும் கண்டு மனம் பொங்குகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரத்தி எனும் இந்த தொகுப்பிலுள்ள பன்னிரெண்டு சிறுகதைகளில் எவையுமே புறந்தள்ள முடியாத சிந்தனைச் செறிவை கொண்டுள்ளன. வாசிப்பவர்களின் நெஞ்சைத் தொடுகின்றன. உணர்வுகளைத் தூண்டுகின்றன; அல்லது தீண்டுகின்றன. வாசகர்களின் மனநிலைகளையும் அவர்களது வாழ்க்கை முறைகளையும் மீழ் சிந்தனைக்குட்படுத்த உதவுகின்றன.

நண்பர் அன்ரன் செல்வக்குமார் தான் பிறந்து வளர்ந்த இளவாலை மண்ணையும், பின்னர் இடம் பெயர்ந்து வாழ நேரிட்ட புத்தளப் பிரதேசத்தையும், அதையொட்டிய மக்களையும் எவ்வளவு தூரம் நேசிக்கிறார் என்பது அவரது கதைகளில் புலப்படுகிறது. 2000 ஆண்டு முதல் *2005-ம்* ஆண்டுவரை எழுதப்பட்ட கதைகள் இத்தொகுப்பில் அடங்கியிருந்தாலும் இக் கதைகளில் பல, அதற்கு முந்திய காலப்பகுதி நிகழ்வுகளையும் பதிவு செய்கின்றன. யுத்த அனர்த்தங்கள், குண்டு வீச்சுக் கொடுமைகள், மக்களின் இடம் பெயர்வுகள், அலைச்சல்கள் மாறுபட்ட வாழ்வு நிலைக்கு முகம் கொடுக்க வேண்டிய இக்கட்டுக்கள் எல்லாவற்றையும் தனது மனதை பாதித்து புண்படுத்திய விதமாகவே வாசகர் களுக்கு தொற்ற வைத்திருக்கின்றார் அன்ரன். மனித உறவுகளின் பல்வேறு இன்ப துன்ப நிலைகளை அவர் தனது சிறுகதைகளில் கொண்டு வந்திருக்கின்றார். மனிதர்கள் எல்லோருக்குமே பொது உணர்ச்சியான காதலையும், காதல் உறவினால் ஏற்படுகின்ற சிக்கல்களையும் சுகங்களையும் தொட்டுக் காட்டுகின்ற சிறுகதைகளையும் எழுதி யிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில கதைகளில் சமூக ஏற்றத் தாழ்வுகளை மறை முகமாகவும் இன்னும் சில கதைகளில் வெளிப்படையாகவும் ஏளனம் செய்து விமர்ச்சிக்கின்றார். 'சொந்த மண்ணில் எனது இனம்' எனும் சிறுகதையில் ; இவ்வளவு தூரம் துன்ப துயரங்களையும் கஸ்ரங்களையும் நஸ்ரங்களையும் பட்டு வந்த தமிழ் இனம் வெட்ட வெட்ட தழைத்து வரும் தமிழ் இனத்திடையை இன்னும் வெட்ட வெட்ட சாகாது தழைத்துக் கொண்டு வரும் சாதி வேறுபாட்டை ஆதங்கத்துடன் தொட்டுக் காட்டுகின்றார். 'சொந்த மண்ணில் எனது இனம்' எனும் கதையின் தலைப்பே அவரது மன ஏக்கத்தை வெளிப் படுத்துகிறது.

அன்ரன் செல்வக்குமார் தனது கதைகளில் மானிட நடத்தைகளை சித்திரிக்கிறார். ஒழுக்கக் கேடுகளை சுட்டிக் காட்டுகிறார் தமிழ் பேசும் மக்களின் பழக்க வழக்கங்கள், வாழ்வு முறை, பேச்சு மொழி ஆகியவற்றை சிறப்பாக சித்திரிக்கிறார்.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்துறையில் புத்தளப் பிரதேச மண் வாசனையுடன் எழுதப்பட்ட அல்லது வெளிவந்த கதைகள் மிகக் குறைவு. புத்தளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பல எழுத்தாளர்களிடம் இதுபற்றிக் குறைபட்டு இருக்கிறேன். புத்தளத்திலேயே பிறந்து அங்குள்ள மக்களுடன் இரத்தமும் சதையுமாக இணைந்து பிணைந்து வாழும் எழுத்தாளர்களினால்தான் அந்த மக்களுடைய வாழ்க்கை முறைகளினையும், பிரச்சனைகளையும், பேச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியையும் வெளிக் கொணர முடியும் எனச் சொல்லி யிருக்கிறேன். ஆனால் புத்தளத்தை புகுந்த இடமாகக் கொண்ட அன்ரன் செல்வக்குமார் புத்தளத்து மண் வாசனை கொண்ட கதைகளையும் எழுதியிருக்கின்றார். இஸ்லாமிய சகோதரர்களின் பிரச்சனைகளையும், பேச்சு மொழியையும் சில கதைகளில் சிறப்பாகப் பதிவு செய்திருக்கிறார்.

இத் தொகுப்பில் உள்ள சிறுகதைகள் எல்லாமே மனித வாழ்க்கைக்குப் பொருந்தி வருகின்றன. 'குமாரத்தி' எனும் சிறுகதை அன்ரன் செல்வக்குமார் எனும் சிறு கதையாளனின் முதிர்ச்சி நிலையைக் காட்டுகிறது. ஒரு தாயாரின் மரணிக்கும் வேளை பற்றிய மன உணர்ச்சிகளை உருக்கமாக சொல்லி யிருக்கும் விதம் அக்கதையை வாசிக்கும் ஒருவாரு வாசகர் களின் குடும்ப உறவு முறைகளையும், பாசப் பிணைப்பு களையும் வலுப்படுத்தக் கூடியது. அக்கதைக்கு 'குமாரத்தி' எனத் தனது தாயின் பெயரையே இட்டு தனது தாயின் மீது கொண்ட பாசத்தை வெளிப்படுத்துவதுடன் அன்னாரது இழப்பினால் ஏற்பட்ட துயரையும் ஆற்றாமையையும் ஈடுகாட்ட முயன்றிருக்கின்றார். இந்நூலுக்கும் 'குமாரத்தி' எனப் பெயரிட்டு தனது தாயாருக்கு சமர்ப்பணம் செய்து நிறைவடைகிறார் அன்ரன்.

இந்நூலில் உள்ள ஒவ்வொரு கதைகளையும் தனித்தனியாக விமர்சிக்கும் நோக்கம் எனக்கில்லை. ஓர் எழுத்தாளன் தன் மனதைத் தொட்ட அல்லது பாதித்த விடயங் களை தனது மனமட்ட நிலையில் இருந்து எழுதுகிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது நேர்மையான சுபாவமும், விசாலமான மனமும், இரக்க சிந்தனையும் அவன் எழுதுகிற கதையில் ஒரு பாத்திரமாகவே மாறிவிடச் செய்கிறது. அந்த வகையில்தான் கதைகள் உயிர் பெறுகின்றன. அன்ரன் செல்வக்குமாரின் இந்தத் தொகுப்பில் உள்ள கதைகளும் உயிர்த்துடிப்புடன் விளங்குகின்றன அவற்றை வாசிக்கும் வாசகன் அக்கதைகளை தனது மனமட்ட நிலையிலேயே கிரகித்துக் கொள்கிறான். வாசகன் அக் கதையினூடாக எழுத்தாளனை தரிசிக்கின்றான். அக்கதையில் எழுத்தாளனைக் காண்கின்றான். இந்த மாதிரியான தொடர்பை அதாவது எழுத்தாளனுக்கும் வாசகனுக்கும் உள்ள தொடர்பை எனது விமர்சனம் குழப்பிவிடக் கூடாது என்பது எனது எண்ணம்.

நண்பர் அன்ரன் செல்வக்குமார் தனது எழுத்துப் பணிக்கும் மேலாக சமூக சேவையில் அதிக ஈடுபாடு கொண்டவர். வழி தெருவில் காணும் போது அவர் கையில், வேற யாராவது ஒருவரது அலுவல் அவர் கையில் இருக்கும். அரச காரியாலங்களில் சென்று அதிகாரிகளுடன் சினேக பூர்வமாகப் பேசி காரியங்களை கச்சிதமாக மேற்கொள்வதில் சமர்த்தர். இவ்வாறு பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்டவர். புத்தளத்தில் உள்ள பாடசாலைகளின் வளர்ச்சியில் குறிப்பாக சென்றமேரிஸ் மகா வித்தியாலயத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றுபவர். புத்தளத்தில் ‘சிந்தியா கலை இலக்கிய வட்டம்’ எனும் இலக்கிய ஆர்வலர் அமைப்பை உருவாக்கி அங்குள்ள இளம் எழுத்தாளர்களுக்கு இயன்ற வரை ஊக்கம் அளித்து வருபவர் அன்ரன் செல்வக்குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே 'அந்தரிக்கும் ஆத்மா'' எனும் அன்ரனின் கவிதைத் தொகுதியை மணிமேகலைப் பிரசுரத்தின் மூலம் வெளியிட்ட நண்பன் ரவி தமிழ்வாணன் அவர்கள் மனமுவந்து இந்நூலையும் வெளியிடுவது மகிழ்ச்சியளிக்கிறது. ரவி தமிழ் வாணன் ஈழத்து எழுத்தாளர் பலரது நூல்களை பல வித விமர்சனங்களுக்கு மத்தியிலும் சலியாது வெளியிட்டு அவற்றை தமிழ் பேசும் உலகெங்கும் எடுத்துச் சென்ற பரப்பும் சேவை பாராட்டுக்குரியது.

நிறைவாக இந்நூலின் ஆசிரியர் அன்ரன் செல்வக்குமார் எழுத்துத் துறையில் மென்மேலும் வளர்ச்சியடைந்து சிறப்பான நூல்களை தமிழ் இயலக்கியத்துக்கு தர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

அன்புடன்

**சுதாராஜ்**

58/3 அநுராதபுரம் வீதி
புத்தளம், இலங்கை
தொலைபேசி : 032 - 22 - 65965

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...

1. குமாரத்தி ---------------------------------------- 1

2. சொந்த மண்ணில் எனது இனம் -------------- 10

3. வீர மரணம் ------------------------------------ 29

4. தேடல் ------------------------------------------ 40

5. நூலைப் போல ---------------------------------- 47

6. மெழுகுவர்த்தி ---------------------------------- 57

7. தெளிவு -------------------------------------------- 74

8. புரிந்துணர்வு -------------------------------------- 88

9. புனித நாள் ---------------------------------------- 99

10. பால்ய சிநேகிதன் ---------------------------- 112

11. வன்னி மண் ------------------------------------ 121

12. அந்த அரபிக் கடலைத் தாண்டி ------------- 129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமாரத்தி

## 1

அடுப்பிலிருந்து கேத்தலில் கொதித்துக் கொண்டிருந்த சுடுதண்ணீருக்குள் தேயிலையைப் போட்டுக் கலக்கிய குமாரத்தி தேநீரைக் குடித்துவிட்டு அப்படியே திண்ணையில் சரிந்து படுத்தாள்.

நாற்பத்தியெட்டு மணி நேரத்தில் அவளது வாழ்வில் ஆதாரசுருதிகளான விருப்பங்கள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் எல்லாமே பொய்த்து வாழ்க்கை வெறுத்து இருந்தது. அவளுக்கு அதை நம்புவதும் மிகக் கஷ்டமாக இருந்தது. ஆனால் அது நிஜம்.

கொடூரமான தனிமையை இந்த 82 வயதுக்குள் அவள் அனுபவித்தது இல்லை. வீடுமட்டுமல்ல மொத்த ஊரும் வெறித்துப்போன தனிமை அது. புலம் பெயர்வுகளினால் ஏற்பட்டிருக்கின்ற தனிமை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடியும், மறுபடியும் தனது பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், மருமக்களைப் பற்றியே மனம் சுற்றத் தொடங்கியது. நாக்கும் வரண்டு வந்தது, தொடர்ந்து மூர்ச்சை அடைப்பது போல் திணறல்.

துடித்து நிமிர்ந்தாள் குமாரத்தி. என்ன இது? என்றைக்கும் ஏற்பட்டிராத உணர்வுகளாய் இருக்கின்றனவே....! சலம் சலமாய் அவளுக்கு வியர்த்து ஒழுகியது இல்லை. எனக்கு எதுவும் இல்லை. ஒன்றும் நேரவில்லை. என் உடல்நிலை நன்றாகவே இருக்கின்றது. நான் யார்? எனது தகப்பன் யார்? தாய் யார்...? மனதைத் தளர விடாமல் தைரியமாக்கி நான் துணிவோடு இருக்க வேண்டும் எனது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் திரும்பி வர கனகாலம் பிடிக்காது. அவர்கள் மீண்டும் இளவாலைக்கு வரும்போது அவர்களை வரவேற்க நான் இருக்க வேண்டும். நான் இந்த மக்களை, மண்ணை நேசிக்கிறவள். யுத்த நிறுத்தமொன்று ஏற்பட்டு நாட்டில் சமாதானம் ஏற்படும். அப்போது புலம் பெயர்ந்து போனவர்கள் எல்லோரும் திரும்பி இவ்வூருக்கு வந்து சேருவார்கள். என் பிள்ளைகளும் என்னைத் தேடி வருவார்கள். பிறகு தனிமை எனக்கு ஒருபோதும் இருக்காது...

தனக்குள்ளாய் சொல்லி அவள் தைரியப்பட முனைந்தாள். அவள் பிறந்த இடம் யாழ்ப்பாணமாக இருந்தாலும் திருமணமாகி வந்து விட்ட பிற்பாடு இளவாலையிலேயே நிரந்தரமாகக் குடியேறிவிட்டாள். இவ்வளவு காலமாக வராத சமாதானம் இனிமேலா வரப் போகின்றது...? இந்த இடப்பெயர்வுகள், புலப்பெயர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தீர்வும் இல்லாமல் நிரந்தரமானதாக ஆகிவிட்டால் என்ன செய்வது? ஆ! எனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் இருந்து கடைசிக்காலத்தை முடித்துக் கொள்கின்ற கொடுப்பனவு எனக்கு இல்லாமல் போய்விட்டதே. பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் மிகமிக வற்புறுத்திக் கேட்டபோதும் இந்த ஊரையும் மண்ணையும் விட்டுப் போக மனமில்லாமல் இருந்தேனே... நான் அவர்களோடு கூடிக்கொண்டு போயிருக்கவேணும். திண்ணைத் தூணுடன் சாய்ந்திருந்த குமாரத்தி பிரலாபித்துக் கொண்டாள்.

நத்தை நகர்வாய் அவஸ்தையுடன் பொழுது கழிந்து கொண்டிருந்தது. மிகுதியாய் இருந்தவர்களும் தென்மராட்சியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள் வன்னிக்குப் போவதாக கூட இருக்கலாம். மூட்டை முடிச்சுக்களை வண்டில் கட்டி ஏற்றிப் போய்க் கொண்டு இருந்தார்கள். அவளது உள்ளம் பரபரத்துக் கொண்டு இருந்தது. தான் மட்டும் தனியே ஆகிவிட்டோம் என்ற தவிப்பும் மேலிட்டது.

சாவு வருகின்றதென்று எங்குதான் ஓடிஒளிந்து கொள்வது? மரணத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முடியுமா? அவ்வாறு தப்பியவர்களுண்டா?

அவ்வளவு இயல்பானதாக மரணத்தை அவள் எண்ணியிருந்தாலும், தனிமையும், மரணத்தின் மீதான அச்சம் வந்து கொண்டேயிருந்தது. மரணத்துக்கு அவளாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவு படமுடியும். வாழ்க்கையில் முடிக்க வேண்டிய கடமைகள் என்று பெரிதாக எதுவும் இல்லை. எல்லாக் கடமைகளையும் முடித்துவிட்டாள். எல்லாப் பிள்ளைகளின் திருமணங்களையும் கண்டு களித்து விட்டாள் எல்லாப் பிள்ளைகளின் பிள்ளைகளையும் (பேரப்பிள்ளைகளையும்) பார்த்து விட்டாள்.

அவளால் இப்பொழுதும் இறந்துவிட முடியும். ஆனால் பிள்ளைகள் முன்னால் இல்லாத நிலையில் அப்படி இறந்து விட அவளால் முடியாது. பாசத்துடன் தண்ணீர் பருக பின்னால் ஈமக்கடமைகளை முடிக்க உறவுகள் பக்கத்தில் இருக்க வேண்டும். அப்படியான சாவுதானே ஒரு 82 வருட வாழ்க்கையின் அம்சமாக இருக்க முடியும்.

''நாட்டில் நடந்து கொண்டிருக்கின்ற 'போர்' சமாதானத்திற்கான யுத்தம்தான். இந்த சமாதானத்திற்கான யுத்தம் என்ற போர்வையில் எத்தனை உயிர்களை குண்டு போட்டு அழித்து விட்டனர். ஊரையே சுடுகாடாக ஆக்கிவிட்டார்கள். எந்த ஆசாபாசத்திலும் சிக்குண்டு உலகவாழ்க்கையில் பசையாக ஒட்டிக்கொள்ளாமல் பழுத்த பனம்பழமாய் உதிர்ந்துவிட வேண்டும்.

கடந்த வாரம் பொம்பரும் கிபிர் விமானம் ஒன்றும் தாழப்பறந்த ஹெலியின் அறிவுறுத்தலின் படி பொழிந்து விட்ட குண்டுமாரியில் குரும்பையும், நுங்கும் சீக்காயுமாய் மொட்டந்தலையாய் கருகிவிட்ட பனை மரங்களும், இலக்குத் தவறி விழுந்ததால் அழிந்து போன வீடுகளும், கோரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டவம் ஒன்றினால் இளசும், கிழடுமாய் மரணித்து விட்ட எம்மூர் மக்களும்... "யுத்தம் கொடூரமானது"

குமாரத்தியின் பிள்ளைகள் எல்லோரும் யாழ்நகரில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிக்குப் போய் தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து பெருத்த சிரமங்களுக்கு மத்தியில் பாஸ் எடுத்து வவுனியாவந்து வவுனியாவிலிருந்து புத்தளம் வந்து பின்பு அவர்கள் எல்லோரும் தனித்தனியாக வீடு எடுத்து புத்தளத்தில் குடி இருந்தார்கள்.

நாட்கள் பல நகர்ந்தன.

உயிருக்கு ஜீவன், ஆன்மா, ஆவி என்று பல நாமங்கள் உண்டு. உயிரின் இயல்புகளைக் கொண்டு பார்த்தால் அதற்கு ஆவி என்ற பெயரே மிகப் பொருத்தமானதாகத் தோன்றும். ஆவி காற்றில் கலந்துவிடுவதில்லை, ஆவி அழிவில்லாதது. மறுபடி பிறந்து இறந்து சுழலும் இயல்பானது.

குமாரத்தியின் எண்ணத்தை உறுதிப்படுத்துவது போல அவளின் இளம்பருவ காலக்காட்சிகள் சில ஞாபகக் கிடங்கில் இருந்து சடைத்துக் கிளர்ந்தன.

குமாரத்திக்கு அப்போது ஏழு வயது அம்மப்பா பாயில் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்றார். பாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்திலே அமர்ந்திருக்கிறாள். பாட்டியின் முகம் உட்பட அம்மா, அப்பா, சின்னம்மா, மாமா இன்னும் அங்கு கூடி நிற்கின்ற உறவுக்காரர்களின் முகங்களிலெல்லாம் கவலை படர்ந்து கிடந்து அம்மாவினதும், சின்னம்மாவினதும், மாமாவினதும் கண்களிலிருந்து கண்ணீர் வழிகின்றது குமாரத்தி எல்லோரையும் பார்த்து அழத்தயாரான நிலையில் தந்தையுடன் நின்று கொண்டிருக்கிறாள்.

ஒரு 'கேவல்' சத்தம் எல்லோருடைய பார்வைகளும் அம்மப்பா முகத்தில் ஒன்றுபடுகின்றன. அம்மப்பாவின் கண்கள் தெறித்துவிடுவன போல பிதுங்கிக் கொண்டு இருக்கின்றன. தலையை நிமிர்த்த முடியாமல் போகின்றது. தொடர்ந்தும் தாடை, தசைகள் அசைகின்றன. உதடுகளோ பிரிய மறுத்து இறுகிக் கிடக்கின்றன. ஏதோ சொல்ல முயற்சிக்கின்றார் என்பது குமாரத்திக்குக் கூட தெரிகின்றது.

'என்ன ஐயா! என்ன சொல்லவேணும்? என்ர ராசாவால் பேச இயலாமல் கிடக்கே... ம்... ம் எனக்கும் கனகாலம் இல்லை. நீங்கள் நிம்மதியாய் போய் சேருங்கோ. நானும் உங்கள் பின்னாலேயே வந்திடுகிறேன்' என்று கூறி பாட்டி தண்ணீர் பருகியபடி அவரது நெஞ்சை நீவி விடுகின்றாள்.

எதையோ உக்கிரமமாய் மறுப்பது போல் அம்மப்பா கையையும், தலையையும் அசைக்கின்றார் அம்மப்பா. எங்கே போகிறார்? பாட்டி துக்கமாக ஏன் அவரை வழியனுப்புகிறாள்? இப்பவே கூடப்போனால் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மப்பா கையை வீசி தலையைப் பலமாக ஆட்டி எதை மறுக்கிறார்? குமாரத்திக்கு எதுவும் புரியவில்லை.

சற்று நேரத்தில் அம்மப்பாவின் வாய் கோணுகிறது. நெஞ்சு உப்புகிறது. கண்ணோரங்களில் நீர் அரும்பு கட்டுகிறது. திடீரென மூச்சு நிற்பது போல் ஒரு......ச்....ச் ஓசை அவ்வளவுதான். அம்மப்பாவின் உடலின் இறுக்கங்கள் எல்லாம் தளர்கின்றன. இரண்டுநாள் அவஸ்தை முற்றுப் பெறுகின்றது. எல்லோரும் அம்மப்பாவின் உடலின் மேல் விழுந்து புரண்டு கதறி அழுகின்றார்கள்.

மரணம் என்றால் என்னவென்று தெரியாமல் குமாரத்தி சந்தித்துப் பார்த்த முதல் மரணம் அது. பிறகு இரண்டு வருடங்களின் பின்பு பாட்டியின் மரணத்தையும் பார்த்திருக்கின்றாள்.

ஒருநாள் மாலை நேரத்தில் அம்மா கெடுத்த தேநீரைக் கொண்டு போய் திண்ணையில் படுத்திருந்த பாட்டிக்குப் பக்கத்தில் வைத்து விட்டு குமாரத்தி பாட்டியை அழைக்கின்றாள்.

"பாட்டி எழும்பி தேத்தண்ணி குடியுங்கோ..."

பாட்டி விழிக்கின்றாள். கண்ணை மேலும் கீழுமாய் உருட்டி உருட்டிப் பார்க்கின்றாள். பின்னர் சிரிக்கின்றாள். சிரித்த சிரிப்பு மாறாமலே குமாரத்தியை தொட கையை நீட்டுகின்றாள். ஆனால் தொடாமலே கை துவண்டு விழுகின்றது. கழுத்து தொய்ந்து சரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா அம்மா பாட்டியை வந்து பாருங்கோ"

தாய் வந்து பார்த்து நிலைமையைத் தெரிந்து கொண்டு ஒப்பாரி வைக்கின்றாள். சின்னம்மாவும் மாமாவும் பக்கம் பக்கமாக இருந்த வீடுகளிலிருந்து ஓடி வருகின்றார்கள். ஊர் கூடுகின்றது. அம்மப்பா போன இடத்துக்குத்தான் அம்மம்மாவும் போய்ச் சேர்ந்து விட்டாள் என்று கூறி அம்மா குமாரத்தியின் வெருட்சியைத் தெளிவிக்கின்றாள்.

மரணம் பற்றிய ஒரு அனுமானம் நெஞ்சில் அன்றே குமாரத்திக்கு விழுந்து விடுகின்றது.

"ஒரு அவஸ்தையும் இல்லாமல் சீவன் பிரிஞ்சிருக்கு" யாரோ சொல்கிறார்கள்.

அன்று குருத்தோலை ஞாயிறு. கடந்த இரண்டு நாட்களாக குமாரத்திக்கு சுகமில்லை. நேரம் செல்லச் செல்ல குமாரத்திக்கு தலை அழுத்தம் அதிகமானது. கண்பஞ்சடைத்து காதில் நொய்ங்....நொய்ங.... என்று இரைச்சலெடுத்தது. புலன்கள் உஷ்ணமடைந்து கொண்டு வந்தன. நெஞ்சு திடும்.... திடும்.... என இடித்தது. தொண்டை வரண்டது. எடுத்த சகல முயற்சிகளும் மனதில் நம்பிக்கையை வரவழைக்கத் தவறின. ஒரு பிரமாண்டமான உருவகத்தின் காட்சி இறுதியில் மனதில் வியாபகமாகி நின்றது.

குமாரத்தியின் நெஞ்சின் மையத்தில் முறுக்கி முறுக்கி வலித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சுத்திணறியது.

"ஐயோ இதுதான் சுவாசக்குத்து என்பதா?"

ஊகம் அதுதானென்றது.

அப்படியானால் இறுதி வேளைதான்.

குமாரத்தியின் உடல் அசைவற்றுக் கிடந்தது. டாக்டர் வந்து பார்த்து விட்டு குமாரத்தியின் கண்களை மூடுகின்றார். குமாரத்தியின் இறுதி ஊர்வலத்திற்கான திருப்பலிப் பூசை நடைபெறுகின்றது. ஏராளமான கன்னியாஸ்திரிகளும் குருக்கள் மாரும் கலந்து கொள்கின்றார்கள்.

குமாரத்தியின் பூதவுடல் இறுதி ஊர்வலமாக சென் மேரிஸ் சேமக்காலையை நோக்கிப் போய்க் கொண்டு இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் எனது இனம்

## 2

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னான போர் ஓய்வும் சொந்த நாட்டில் சொந்த மண்ணில் கொண்டு வந்து எனது பிள்ளைகள் இருவரையும், எனது மனைவியையும், எனது இனம், எனது சனம் என்பவர்களுக்குக் காட்ட வேண்டும் என்று ஆவல் எழ பிள்ளைகளின் பாடசாலையின் விடுமுறையும் வந்து எனது குட்டித்தீவான இலங்கை நாட்டை என் பிள்ளைகளுக்குக் காட்டுவதற்காக விமான ரிக்கட்டுக்களை எடுத்துக்கொண்டு ஆரவாரமாக இலங்கைக்குப் புறப்பட்டோம்.

யாழ்ப்பாணம் - இளவாலை எனது சொந்த மண். லண்டன் வரமுந்திய இருபத்து நான்கு வருடங்கள் நான் புரண்டு உருண்டு விளையாடி பொழுதுபோக்கி நண்பர்களுடன் அரட்டை அடித்துத் திரிந்து புழுதி படர்ந்த மண் உரிமை கொண்டாட உறவினர்கள் உள்ள மண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரை பரம்பரையாக நாங்கள் வாழ்ந்த மண். இளவாலை மண்ணின் ஒவ்வொரு புல்லும் மண் துகளும் எனக்கு நன்கு பரீட்சையமானவை.

என் மனைவிக்கும் என் பிள்ளைகளுக்கும் என் மண்ணைப் பற்றியும் உறவினர்களைப் பற்றியும் அங்குள்ள இயற்கைக் காட்சிகளைப் பற்றியும் நேரமுள்ள நேரத்தில் கதைகதையாகச் சொல்லியிருக்கின்றேன். யாழ்ப்பாணத் தமிழரின் பண்பாடு, விருந்தோம்பும் சிறப்பு, கலாசாரம், தேச வழமை, ஊர்வழமை என்பன பற்றியெல்லாம் தகவல் களாக சொல்லிவைத்திருக்கின்றேன். பல்மெயிராட்றீஸ் பெடிபீஸ்ஸ், கோக்கனற் கார்டின், லவ்லி பீச், கீரிமலை சுவிமிங் பூல், பிக் சேர்ச், பிக் போய்ஸ் ஸ்கூல், பிக் கேர்ள்ஸ் ஸ்கூல், பிக் கொன்மென்ட்... ஹவ் லவ்லி இட் வில் பி....

குறிப்பிட்ட தினத்தில் லண்டன் கீத்திரோ எயார் போர்ட்டில் இருந்து ஸ்ரீலங்கன் விமானத்தில் கிளம்பி சிங்கப்பூர் வழியாக கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கினோம். அங்கிருந்து வெள்ளைவத்தையிலுள்ள என் மனைவியின் சகோதரனின் வீட்டில் தங்கி நின்றோம். வெள்ளவத்தைக் கடற்கரை, கோல் பேஸ் பீச், மௌன்ட் லெவனியா பீச், விகாரமகாதேவி பூங்கா, தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை... இப்படியே என் பிள்ளைகளுக்கு கொழும்பு மாநகரைச் சுற்றிக் காட்டினேன்.

டடி ஸ்ரீலங்கா - கொழும்பு வெரி பெஸ்ட் பிளேஸ் என்று என் பிள்ளைகள் துஷ்யந்தனும் சுஜித்திராவும் சொன்னார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனைவி வத்சலாவின் அண்ணன் வீட்டார்களுக்கும் அவர்களுடன் பழகும் நண்பர்களுக்கும் அயல் வீட்டார்களுக்கும் ஆங்கிலம் தெரிந்திருந்தது. அதனால் துஷ்யந்தன் சுஜித்திராவுக்கு நோ ப்ரோப்பிளம்.........

ஒரு வாரம் கொழும்பில் நின்ற நாங்கள் அங்கிருந்து வான் ஒன்றை புக் பண்ணி யாழ்ப்பாணம் புறப்பட்டோம். யாழ் வரும் வழியில் சிலாபம், புத்தளம், அனுராதபுரம், வவுனியா ஆகிய இடங்களில் தேநீர் குடிப்பதற்காகவும் சாப்பிடுவதற்காகவும் என சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டோம்.

தாண்டிக்குளத்தில் இராணுவத்தினரின் சோதனைச் சாவடியில் சோதனையை முடித்துக் கொண்டு ஓமந்தையில் விடுதலைப்புலிகளின் சோதனைச் சாவடியில் வெளிநாட்டவர்களுக்கான பிரத்தியேக காரியாலயத்தில் எங்கள் பாஸ் போர்ட், விமானப் பயணச்சீட்டு முதலிய வற்றைக் காட்டிய போது ஆயிரம் ரூபா பணம் மாத்திரம் எங்களிடமிருந்து பெறப்பட்டது. தமிழீழத்திற்குச் செல்வதற்கான பத்திரத்தில் கேட்கப்பட்ட முழுவிபரங்களையும் கொடுத்த பின்னர் வானை சோதனை செய்த போராளிகள் எமக்கு யாழ் செல்வதற்கான பாஸ் தந்தார்கள். ஏ-9 பாதையால் செல்லும் போது.....

வழிநெடுகிலும் இடிந்த வீடுகளையும் பாழடைந்து போயிருந்த கட்டடங்களையும் கூரையில்லாத கோயில்களையும் காணமுடிந்தது. ஆனையிறவு இராணுவ முகாம் இருந்த அடையாளமே எனக்குத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவாலையில் எங்கள் வீடு குடியிருப்பு குறைவான இடத்திலேயே இருந்தது. இராணுவத் தாக்குதல் ஷெல்லடி, சுற்றிவளைப்பு, சூரியக் கதிர் நடவடிக்கைகள் ஆகியவற்றினால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளின் போது சுற்றி யிருந்த மதிலையும், கேற்றையும் வீட்டு ஓடுகள் சீற்றுக்கள் முதிரை நிலைகள், வேம்புமரக் கதவுகள் எல்லாவற்றையும் எம் சொந்த மண் மக்களே இடம்பெயர்த்து எடுத்து விட்டிருந்தனர். யாழ்ப்பாணத்தில் இப்போது களவெடுப்பதற்கு ஏராளமான பொருட்கள் உள்ளன. முன்பு போல களவெடுக்கும் பொருட்கள் சைக்கிள், நகை, பணம் என்றில்லை. கையில் அம்பிட்ட எதையும் மக்கள் எடுத்துச் செல்கின்றனர்.

ஏனெனில் இங்கு ஏனென்று கேட்பதற்கு யாரு மில்லை .....

முற்றத்தில் நின்ற பெரிய வேம்புமரமும் மாமரமும்கூட தறிக்கப்பட்டு இடம்பெயர்த்து விட்டிருந்தார்கள். எங்கள் அம்மா பெரியம்மாவோடு இருந்ததால் நாங்களும் பெரியம்மா வீட்டுக்கே போய் இறங்கினோம்.

பெரியம்மாவின் மூத்த மகளும் அம்மாவும் தடல் புடலாக விருந்து சமைத்து புற்பாய் விரித்து தலைவாழை இலையில் தண்ணீர் தெளித்து விருந்து பரிமாறினார்கள்.

இரண்டு சுவீட், பொரியல், வடை, அப்பளம், வறுவல், ஊறுகாய், அப்புறம் பாயாசம்... பெரியம்மா வேறு ஒடியல் கூழ் மாதகல் முரல் மீன் சொதி, இறால் குழம்பு, மாங்காய் போட்டு வாளைமீன் குழம்பு, இறால் பொரியல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவாய்க் கறி என்று தினமும் சமைத்து அசத்த சந்தோஷமாகப் பொழுது கழிந்து கொண்டிருந்தது.

சேந்தாங்குளக் கடற்கரைக்கு என் மனைவியையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு போய் காட்டினேன். வாடையில் குமுறும் அலையொளியும் பாக் நீரிணை சோகத்தில் சோம்பிக் கிடந்தது. சேந்தாங்குளச் சந்தியில் இராணுவ அனுமதி பெற்றுக்கொண்டு கீரிமலைக்கு பிள்ளைகளையும் மனைவியையும் கூட்டிப்போனேன். கீரிமலைக் கேணியில் பிள்ளைகளைக் குளிப்பாட்டினேன்.

கீரிமலைக்கேணியில் குதிரை முகமாக கல்லில் செதுக்கப்பட்டிருந்த சிலையையும் நல்ல முகமாக கல்லில் செதுக்கப்படடிருந்த சிலையையும் பிள்ளைகளுக்கும் மனைவிக்கும் சுட்டிக்காட்டி அதற்கு ஆங்கிலத்தில் விளக்கம் கொடுத்தேன்.

டடி இட் இஸ் றியலி ஹெப்பின்ட்...? என்று பிள்ளைகள் கேட்டார்கள். வீ காண்ட் பிலீவ் இட்.... சுஜித்ரா சொன்னாள்.

கீரிமலையால் வரும்போதுதான் பார்த்தேன். கீரிமலையிலிருந்து கருகம்பானைக்குப் போகும் வீதியையே காணவில்லை. றோட் இருந்ததற்கான அடையாளமே தெரிய வில்லை. எனக்கு முன்பு ஆங்கிலம் படிப்பித்த கணபதிப் பிள்ளை மாஸ்டரின் வீட்டுக்குப் போகும் வழியெது?

சிறுபான்மை இனத்தவர்களை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்குள் போகவிடாமல் பந்தம் கொளுத்திச் சுட்ட குழுவுக்குத் தலைமை தாங்கிய கணக்கியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியரான அடங்காத் தமிழன் சி.சுந்தரலிங்கம் அவர்களது வீட்டுக்குப் பக்கத்தால் போகும் கருகம்பானைக் கான றோட்டு இருந்த தடையமே காணப்படவில்லை.

வலித்தூண்டல் என்ற மீன் பிடிக்கிராமம் இருந்த தடையமே இல்லாமல் புல்டோஸர் போட்டு அழிக்கப் பட்டிருந்தது. சம்மாட்டி செபமாலையின் வீடு இடிந்து போய் கிடந்தது.

வசந்தபுரம் என்ற தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருந்த குடியேற்றத்திட்ட வீடுகள் முற்றாக இடிந்தும் சிதைந்தும் பாழடைந்தும் போயிருந்தன.

எங்கள் வீட்டுக்குப் பக்கத்தேயுள்ள பனை வளவில் கந்தன் பனை மரத்தில் ஏறி நொங்கு வெட்டி என் பிள்ளை களுக்கும் என் மனைவிக்கும் அரிந்து கொடுத்தான்.

ம்...ம்...ம்... திஸ் இஸ் வெரி டேஸ்ட்.... என்று சப்புக்கட்டிக்கொண்டு துஷ்யந்தனும் சுஜித்திராவும் குடித்தார்கள்.

சித்திரமெழி வயல்வெளிக்குப் பிள்ளைகளைக் கூட்டிப் போய் பச்சைக் கம்பளம் விரித்தாற் போல் இருக்கும் வயல்வெளியைக் காட்டினேன்.

வயல் வரம்புகளில் நின்றபடியே பயறு பிடுங்கி தின்று காட்டினேன்.

ஊரில் பொதுக்கிணற்றடிக்குப் பிள்ளைகளைக் கூட்டிப் போனேன். ஒரு பகுதிச் சேலையை மார்பில் கட்டிக் குளித்தபடியே மறுபகுதிச் சேலையை தோய்க்கும் கல்லில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மிக் கும்மியடித்து ஊத்தை போக்கும் பெண்களைக் காட்டினேன்.

எனது ஊரில் எல்லாமே என் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் வேடிக்கையாகவே இருந்தது.

எங்கள் கிராமமான இளவாலைக்கு கொய்யகம் கட்டிவிட்டது போல் இருக்கும் குறிச்சிக்கு முள்ளானை என்று பெயர். அங்குதான் தனபாலன் வீடு இருக்கிறது. முள்ளானையைக் கடந்து இளவாலைச் சந்தியால் திரும்பி மேற்குப் பக்கமாக போகும் திசையில்தான் எங்கள் வீடு இருக்கிறது. அக்குறிச்சிக்கு மக்குவில் - தற்போது யூதாததேயு கோயிலடி என்று சொல்வார்கள். விளான் சந்திக்கும் சேந்தாங் குளத்திற்கும் இடையில் தூக்கிச் செருகிவிட்டாற் போல் இருக்கும் இடங்களுக்கு மனத்தாவத்தை, முள்ளானை, முயல்கடவை, போயிட்டி, நாவலடி, பத்தாவத்தை காபுவளை இந்தனை, மாரிசங்கூடல், சீந்திப் பந்தல் இப்படிப் பத்து ஊர்கள் ஒன்று சேர்ந்து மருவி இளம் பிள்ளைகள் கூடுதலாக வாழும் இடம் என்பதால் இளவாலை என்று காலப்போக்கில் வந்ததாக ஒரு கருத்து இருக்கிறது.

முள்ளானை வெள்ளாளர் சித்தரமெழி வீடுகளில் சம்பந்தம் செய்யமாட்டார்கள். வடக்கிளவாலை வெள்ளாளர் மாரிசங்கூடலில் பெண்ணெடுக்க மாட்டார்கள். வடக்கிள வாலை வெள்ளாளர் இந்துக்களாயின் புன்னாலைக் கட்டுவனிலும் கிறிஸ்தவர்களாயின் வசாவிளானிலும் தான் சம்பந்தம் செய்வார்கள். இல்லையேல் திருமணம் செய்யாமல் இருந்து விடுவார்கள். மற்ற இடங்களில் சம்பந்தம் செய்வதோ செம்பு தண்ணி எடுப்பதோ இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளானையிலிருந்த வெள்ளாளருக்கும் பெரிய நிலபுலன்கள் இருந்ததாகவோ கோட்டை கொத்தளங்கள் வைத்து ஆண்டதாகவோ சரித்திரம் கிடையாது. ஆனால் அவர்களிடம் பெருங்காய டப்பாவின் வாசனை போல சாதிப்பெருமை மட்டும் இன்னமும் விடாமல் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

தனபாலன் தான் என் நண்பன் என்பதிலும் என் 'கிளாஸ் மேட்' என்று சொல்வதுதான் மிகவும் பொருந்தும்.

அவனிடமும் சாதியம், மனித நேயம், பெண்விடுதலை ஆகியவற்றின் நவீன சிந்தனைப் போக்குகளின் வாடையே அறியாதவனாக இருந்தான். அதனால் அவனை எனது மனதிற்கு நெருக்கமானவனாகக் கொள்ள முடியாதவனாகச் சில மனத்தடைகள் எனக்குள் இருந்தன.

ஏனெனில் பதின்மூன்றாம் நூற்றாண்டு மனிதன் போல அவனுக்குள்ளும் சாதித் தடிப்பு இருந்தது.

சாதியத்தை இப்படிப் பற்றியிருக்கும் அவனின் திமிர் எனக்கு அறவே பிடிக்காது.

வடக்கு இளவாலையில் இருந்து வரும் மாணவி வகுப்பில் என்னுடன் மிகவும் நெருக்கமானவளாக இருந்தாள்.

என்னிடமும் அவளுக்கான மென்மையான பக்கங்கள் இருக்கத்தான் செய்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தனபாலன் அந்த மாணவியின் சகோதரனிடம் சொல்லி அதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்து விட்டான். எனது மனதிற்குள் அது ஒரு காயமாக இருந்தாலும் நான் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

கல்லூரியில் உயர்தர வகுப்பில் படிக்கும் காலங்களில் எனக்கு இரசாயனவியல் பாடத்தில் கொஞ்சம் ஆர்வம் இருந்தது. இதனால் யாழ்ப்பாணத்தில் பிறவுண் வீதியிலுள்ள ரி.சத்தீஸ்வரன் சீமெந்துக் கூட்டுஸ்தபானத்தில் பிரதான இரசாயனியாக இருந்த அவரிடம் ரியூட்டோரியல் வகுப்புக்களுக்குப் போய் ரியூசன் எடுத்துக் கொண்டிருந்தேன்.

அப்பாடக்குறிப்புக்கள் குறிப்பாக சேதன இரசாயன ரியூட்டோரியல் பாடக்குறிப்புக்கள் தனக்கும் வேண்டும் என தனபாலன் ஒருநாள் என் வீட்டுக்கு வந்தான். ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாகப் படித்துக் கொண்டு இருந்தோம்.

அக்கா இருவருக்குமாக தேநீர் கொண்டு வந்தார்.

தனபாலன் தேநீரைக் குடியாதிருந்தான்.

தேநீர் ஆறிவிடப்போகிறது குடி என்றேன்.

மூன்று நான்கு தடவைகள் சொல்லியிருப்பேன். நான் சொல்லுவது அவனுக்குக் காதில் விழுந்தமாதிரி தெரிய வில்லை. நான் சொல்லுவதில் கவனம் செலுத்தாமல் பாடத்தில் மிகவும் கவனமாக இருப்பது போல் இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு எப்போதுமே தேநீர் அல்லது கோப்பி சூடாக இருக்கையிலேயே குடித்துவிட வேண்டும். எனது கோப்பையைக் கையில் எடுத்துக்கொண்டே அப்பாவித் தனமாக "நல்ல அளவான சூடாக இருக்கப்பா குடியேன்" என்றுகூடச் சொன்னேன்.

அவன் அதை காதில் போடுவதாய் இல்லை.

ஆறின தேநீர்தான் பிடிக்கும் போல.... பிறகு குடிப்பான் என்று நினைத்தேன். கடைசிவரையில் அவன் குடிக்கவே இல்லை.

நான் தேநீர் குடிப்பதில்லை என்றோ குடிக்காததற்கு வேறு ஒரு காரணமோ அவன் சொல்லவில்லை. பின் குடிக்காமலே தன்பாட்டுக்கு எழுந்து போனான். அதை அவதானித்த அம்மா அக்காவைத்தான் ஏசினார். பெடியன் இஞ்ச் வந்ததே பெரிசு... தேத்தன்னியெல்லாம் எங்கள் வீடுகளில் குடிக்காயினம்... நீ ஏன் கொடுத்தனீ...? அம்மா அக்காவை ஏசினா...

ஏனாமனை குடிக்காயினம்...?

அது ஆரம்பத்திலிருந்தே அப்படித்தான்...

நான் தம்பியின்ரை 'கிளாஸ் மேட்றாச்சே' என்றுதான் கொடுத்தேன்...

"நான் என்ன அவனுக்கு வெத்திலையா வைச்சேன்... தனக்கு கெமிஸ்ரி நோட்ஸ் வேணுமென்று வந்தான். தேநீர் குடிக்காட்டிப் போறான். போகட்டும் நமக்கென்ன...?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் பள்ளிக்கூடத்தில் வெகுஇயல்பாக நட்பு ரீதியாக என்னுடன் பேசினான். எனக்கு அவனைத் தவிர்க்க வேண்டும் போல் இருந்தாலும் தவிர்க்க முடியாதபடி ஒரு நிர்ப்பந்தம். ஏனெனில் இரசாயனவியல் செய்முறை வகுப்புக்களில் என் ஆய்வுகூடப் பாட்னராக எங்களுக்கு இரசாயனவியல் படிப்பித்த சுந்தரேசன் மாஸ்டர் என்னையும் அவனையும் பிணைத்துவிட்டிருந்தார்.

வட்டவட்டமான கையெழுத்தில் அவன் தயாரிக்கும் பிறாக்டிக்கல் றெக்கோர்ட் மிகத்தெளிவாக அழகாக இருக்கும்.

தியாகி சிவகுமாரன் சயனைட் அருந்தி மரணித்த நேரம் பொலிஸாரைக் கண்டிக்கும் விதத்திலும் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்குமாறும் துண்டுப் பிரசுரங்களை மாணவர் அமைப்பு விநியோகித்த போது மாணவர்கள் பலர் கைதான போது தனபாலனும் கைதாகி சங்கானைப் பொலிஸில் மூன்று நாட்கள் றிமாண்டில் இருந்தான்.

அடுத்த நாள் காலைமை சங்கானையில் ஐயரின் தேநீர்கடையில் நான் வாங்கிக் கொண்டு போய் கொடுத்த 'ஒரேஞ்ச்' பார்லியையும் தோசையையும் சாப்பிட்டான்.

ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தாறாம் ஆண்டு ஏப்ரல் மாத பல்கலைக்கழப் புகுமுகப்பரீட்சை அண்மிக்க வார இறுதிநாட்களில் மாதகலில் திரு.லூர்து அன்ரனி மாஸ்டரிடம் பிரயோக கணிதம் மேலதிகமாகப் படித்துக் கொண்டிருந்தோம். ஒரு ஞாயிற்றுக்கிழமை எங்கள் பிரயோக கணித ஆசிரியர் திரு.லூர்து அன்ரனி மாஸ்டரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவுக்கு ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக திடீரென வகுப்பு நிறுத்தப்பட்டது. வகுப்பு 'கட்' ஆனது. நேரே அப்படியே கரை ரோட்டால் மாதகல் சந்தியில் இருந்து நேராக கீரிமலைக்கு எங்கள் சைக்கிள்கள் பறந்தன.

இடையில் கூவில் கள்ளு தவறனையில் ஆளுக்கு ஒன்று ஒண்டரை என்று புதுப்பனங்கள்ளும் அடித்துக் கொண்டு

**"கூவிலான் ஒன்றடித்தால்**
**கூவாத குயிலும் கூவும்**
**ஆடாத மயிலும் ஆடும்..."**

என்று பாடிக்கொண்டு கீரிமலை கேணிக்குள் 'பென்ரரோட' இறங்கினோம்.

கொஞ்சபேர் கீரிமலை கல்லு குத்தக் குத்த கடலுக்குள்ளும் இறங்கிக் குளித்தார்கள்

மதியம் திரும்பும் வரை குளித்தோம். கேணியில் தலை கீழாய், தலை குப்புற பாய்ந்து விழுந்து விளையாடி குளித்தோம்.

பனங்கள்ளும் கடற்குளிப்பும் சேர்ந்து கொண்டு இப்போது கண்கள் சிவப்பாகி சொருகத்துடங்க எல்லோரும் வீடு நோக்கி புறப்பட்டோம்.

வீடு போகும்போது கொல்லங்கலட்டி றோட்டால் போய் அம்பனைச் சந்தியில் ஏறி அளவெட்டி யூடாக விளானுக்குப் போனோம்.

விளான் சந்தியில் சில்லாலை பண்டத்தரிப்பு சண்டிலிப்பாய் நண்பர்கள் எங்களிடமிருந்து வெட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு போய்விட விளான் சந்தியிலிருந்த ரொட்டிக்கடை வாசனை மேற்கொண்டு சைக்கிளை நகர முடியாதபடி அழுத்திப் பிடித்தன.

கொத்து அடிக்காமல் என்னால அங்கால ஒரு அடி கூட போக இயலாது என்றேன் நான் கூடாது என்றேனா... என்னிடம் ஒரு சல்லி காசு கூட இல்லையென்றான் தனபாலன்...

என்னிடம் நோட்ஸ் புத்தகங்கள் வாங்குவதற்காக அம்மா முதல் நாள் தந்த ஐம்பது ரூபாய் இருந்தது.

என்னட்ட காசு இருக்கு... நோ பிரோப்பிளம். நாங்கள் மாதகலுக்கு டியூசனுக்கு போகும் போது டீ குடித்து சிகரட் பத்தும் கடைதான் அது. டபுல் கொத்தும் அடித்து பெப்மென்ட் டொபியும் வாய்க்குள் போட்டு கோர்லீப் சிகரட்டும் பற்றி இரண்டு புகைவிட்ட பின்புதான் உடலுக்குள் தெம்பு வந்தது போல் இருந்தது.

இளவாலை றோட்டு பட்டத்தின் வால் போல நீண்டுபோய் இருந்தது.

இப்போது நீண்ட இருபத்தி இரண்டு வருடங்களுக்கு பின் நான் வீட்டுக்கு வந்திருப்பதை கேள்விப்பட்டு நண்பன் தனபாலன் என்னை சந்திப்பதற்காக வந்திருந்தான்.

முன்னந்தலையில் கொஞ்சம் நரை விழுந்திருந்ததை தவிர அவனில் பெரிய மாற்றம் ஒன்றும் ஏற்பட்டிருக்க வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பல்கலைக்கலகத்தில் பி.எஸ்.சி பட்டம் பெற்ற பிற்பாடு அரச சேவையில் உள்ளாராட்சி சிறகத்திலே சேர்ந்து இவனோடு இருந்தவர்களெல்லாம் வெளிநாடு வெளிநாடு... என்று கழன்றுவிட சேவை மூப்பின் அடிப்படையில் சிறகத்தின் உயர் அதிகாரியாக இருந்தான்.

சர்வதேசம் உள்ளூர் என பல விசயங்களையும் பேசிக்கொண்டிருந்தோம். சூரியக்கதிர் தாக்குதலின் போது இடம்பெயர்ந்து வன்னி போய் மல்லாவியில் இருந்த தென்றும் மீண்டும் திரும்பியதாயும் சொன்னான்.

புறொக்டர் வன்னியசிங்கத்தின் மகளை மானிப்பாயில் திருமணம் செய்ததென்றும் 'செமை சீதனம்' என்றும் சொன்னான். நீ ஒரு தோட்டக்காரப் பெட்டையை கட்டினது என்று அறிஞ்சன் ஏன் இப்படிக் குறுக்காலை இழுத்தனீ...? என்றான்.

நான் மலைநாட்டுப் பிள்ளையை கல்யாணம் கட்டினது இத்தனை மலைகள் கடல்கள் பாலைவனங்கள் ஆறுகள் தாண்டி வந்திருக்கின்றது.

என் வத்சலா ஹட்டன் தமிழ்ப்பிள்ளை லண்டன் வந்து நேஸிங் படித்து அங்கேயே வேலை பார்த்து எனது பிளட்டுக்கு அருகில் குடியிருந்தவள். நான் ஒரு தமிழன் என்று அறிந்து சந்தோஷப்பட்டு நட்பாகி அந்த நட்பே நாளடைவில் காதலாகி மாறி என்னை மணம்முடித்து எனது இரு பிள்ளைகளுக்கும் தாயாகி பதினைந்து வருடங்கள் முடிந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தமிழர்களில் பலர் வெள்ளைக்காரிகளையும் மலையாளிகளையும் பாகிஸ்தானியர்களையும் நீக்கிரோக்களையும் மணம் முடித்திருக்கின்றார்களே... இது யாருக்கும் இங்கு தெரியவில்லையா...?

எங்கள் சம்பாஷனைக்கு இடையூறு இல்லாது தானே தேநீர் தயாரித்து எடுத்துக்கொண்டு வந்தாள் என் மனைவி வத்சலா.

இது தனபாலன் எனது "ஸ்கூல் நண்பன்" என்றே அறிமுகம் செய்து வைத்தேன்

வணக்கம் நமஸ்கரித்தாள்.

இப்படியொரு நண்பன் இருப்பது எனக்குத் தெரியாதே ஏன் நீங்கள் கடிதம் கார்ட்கூட போடுவதில்லையே... என்றவள் தனபாலனைப் பார்த்து ஏன் நீங்கள் உங்கள் மனைவி பிள்ளைகளைக் கூட்டி வந்திருக்கலாமே என்றாள் அப்பாவியாக....

அப்படியெல்லாம் லேசில் வந்திடுவார்களா இவர்கள்.

ஒரு இடைவெளி விட்டுத்தான் எங்களுடன் இவர்களால் பழக முடியும் என்பதே யாழ்ப்பாண சாதியத்தையும் அதன் உட்கட்டுமானங்களையும் அறிந்திராத அவளுக்கு எப்படிப் புரியப்போகிறது?

யார் புரிய வைப்பது...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளவு போராட்டம், அழிவு, மரணம், இடப்பெயர்வு ஏற்பட்ட பின்னரும் சாவகச்சேரியில் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் கிணறுகளில் தண்ணீர் அள்ள விடாமல் கிணற்றுக்குள் மலசலங்களை வீசியும் குப்பை கூழங்களைப் போட்டும் தடுத்த உயர்சாதிக்காரர்களைப் பற்றி இவளுக்கென்ன தெரியப் போகின்றது...?

ஏன் இவ்வளவு காலம் கழித்து என்னைப் பார்க்க வந்திருக்கின்றானே... ஒருவேளை என் கணிப்புக்கள் தவறாகக்கூட இருக்கலாம். இந்த நீண்ட இடைவெளி நிச்சயம் அவன் சிந்தனை ஓட்டங்களை.... கருத்துக்களை புடம் போட்டிருக்கலாம்...

உனக்கு "கண்கள் இரண்டும் என்று உன்னைக் கண்டு பேசுமோஃ காலம் இனிமேல் நம்மை ஒன்றாய்க் கொண்டு சேர்க்குமோ?" என்ற பாடல் ஞாபகமிருக்கா? என்று கேட்டேன். விழுந்து விழுந்து சிரித்தான்.

முழுக்கத்தான் சொல்லுங்களேன்... நானும் சிரிக்க... என்று ஆர்வமாய் கேட்டாள் என் மனைவி வத்சலா. அப்போ எம்.ஜி.ஆரின் மன்னாதி மன்னன் படம் மானிப்பாய் வெஸ்லி சினிமாவில் இருவருமாக பார்த்துவிட்டு சைக்கிளில் வந்து கொண்டிருந்தோம் அதில் வருகிற இந்தப் பாட்டின் பல்லவியை கண்ணை மூடியபடி.

**"கண்கள் இரண்டும் என்று**
**உன்னைக் கண்டு பேசுமோ**
**காலம் இனிமேல் நம்மை**
**ஒன்றாய்க் கொண்டு சேர்க்குமோ...?"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுவித்துப் பாடிக்கொண்டு வந்து விளான் சந்தியில் பட்டப் பகலில் நிறுத்தப்பட்டிருந்த பருத்தித்துறை போகும் தட்டி வானோடு அடிபட்டு...

பிறகு...,

பிறகென்ன தொபுக்கென்று விழுந்து மூக்கு உடைஞ்சு போச்சு.

பிறகு...?

பிறகென்ன மூக்கால் இரத்தம் ஓடத்தொடங்கி தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் போய் மருந்து கட்டினது தான்.

பின்பு

பாடசாலையில் நடைபெற்ற ஒரு நாடகப் போட்டியில் இந்த பாட்டை அவளுக்காக நான் பாட....

மொத்த மாணவ மாணவிகளுக்கும் என்மேல் ஒரு சந்தேகம். நான் யாரையும் ஒருத்தியை என் வகுப்பில் விரும்பு கின்றேன் என...

இப்படிப் பல சம்பவங்களை மீட்டுயிர்ப்பித்துப் பார்த்துச் சிரிக்கையில் கதைக்கையில் துஷ்யந்தனும் சுஜித்ராவும் வந்து சேர்ந்தார்கள்.

என் பேச்சின் இடையே தனபாலனுக்கு எத்தனை பிள்ளைகள் என விசாரித்து வாங்கி வந்திருந்த சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்புக்களை அவனுக்குக் கொடுக்க முன் வந்தாள். நானும் இரண்டு ரீ சேர்ட்டுக்களையும் இரண்டு ரவுஸர்களையும் சேவிங் லோசனோடு சேவிங் செட்டையும் சேர்க்க அவற்றோடு சேர்த்து கொஞ்சம் சொக்கலேட்டையும் ஒரு பையில் வைத்து வத்சலா அவனிடம் கொடுத்தாள். தனபாலன் வாங்கிக் கொண்டு விடை பெற்றுச் சென்றான். அவன் போன பின்னர் நாங்கள் முற்றத்தில் கொஞ்ச நேரம் பட்மின்ரன் விளையாடினோம்...

நன்றாக வியர்த்து ஒழுகியது.

"டவள் ஒன்று தாரும் குளிச்சிட்டு வாறன்" என்றேன். இதோ என்று வீட்டக்கள் போனவள் தடாரென திரும்பி வந்து என்னப்பா உங்கள் சிநேகிதன் பாவம் தேத்தண்ணி குடிக்கவில்லை மறந்திட்டார் போல... என்றாள்.

தேநீர் கிளாஸை எட்டிப்பார்த்த எனது பிள்ளைகளும் ஓம்... ஓம்... அப்பா அந்த அங்கிள் தேநீர் குடிக்கல்ல... என்கின்றனர்.

வத்சலாகூட ஒரு வேளை நிறவெறி, மதவெறி, சாதிவெறியின் கொடுமைகளை அனுபவித்திருக்கலாம். யாழ்ப்பாண சாதியத்தைப் பற்றி சிறிதளவாவது அறிந்திருக்கலாம். ஆனால் யாழ்ப்பாணத்து சாதியம்...? அதை உணரும் வயதும் பக்குவமும் என் பிள்ளைக்குப் பத்தாது.

யாழ்ப்பாணத்து சாதியம் முன்னரை விடவும் மிக நீண்ட வரலாறு உடையது. ஒரு சக மனிதனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்தோம்பும் உணர்வுகளைக்கூட சட்டைசெய்யாது வெளித்தோன்றாது வைரம் பாரித்திட்ட ஜென்மம் யாழ்ப்பாணத்து சாதியம். ஜென்மாந்திரங்களுக்கும் தொடர்வது ஜாதிய அநாகரிகங்கள், அவமானங்கள், அவமதிப்புகளின் நிழல்கூட என் பிள்ளைகளின் மேல் படவேண்டாம்.

அதன் அசிங்கமான முகத்தைக் கண்டால் இவர்களும் வெட்கப்பட வேண்டி வரும். ஆம் சிநேகிதன் மறந்து விட்டான் நீங்களும் மறந்து விடுங்களேன் என்றேன்.

உள்ளே சென்று எட்டிப்பார்க்கின்றேன். தேநீர் ஆடை கட்டி வெகுநேரமாகியிருந்தது

*நன்றி - எரிமலை*

*பிரான்ச்*

*2003 ஜுன், ஜுலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமரணம்

3

பலாலி இராணுவ முகாமிலிருந்து "ஷெல்" குத்தப்பட்டு வீரிட்டு பாய்கின்றது. நித்திரையிலிருந்து விழித்தெழுந்த நான் இருளினூடே வெளியே பார்க்கின்றேன். மாமரத்தில் படுத்திருந்த காகங்கள் அயர்வு நீங்கி சிறகுகளை பட பட வென அடித்துக் கொண்டது. தெரு நாய்கள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன.

மீண்டும் "ஷெல்" விழுந்து வெடிக்கின்றது.

அது கொல்லங்கலட்டிப் பக்கமாகத் தான் விழுந்து வெடித்திருக்க வேண்டும்...

"ஷெல்" விழுந்து வெடித்த சத்தத்தைக் கொண்டே விழுந்த இடம் கொல்லங்கலட்டியாகத்தான் இருக்க வேண்டும் என என்னால் அனுமானிக்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிதறுவாங்கள் தொடங்கிவிட்டாங்கள்"......

மனைவி நித்திரையிலிருந்தேபடியே ராணுவத் தினரைத் திட்டுவது எனக்கு கேட்டது.

எவர் தலைமீதோ...? எந்தக் குடிசை மீதோ...? இறந்தவர்கள் எத்தனை பேர்...? இடிந்த வீடுகள் எத்தனை...? காயப்பட்டோர் எத்தனை பேர்...? ஊனமுற்றோர் எத்தனை...?

எனக்கு நெஞ்சு கனக்கின்றது. ஏதோ இறுக்கமாக அழுத்துவது போல ஒரு உணர்வு.

விக்டர் எனது அன்பு மகன் பத்தொன்பது வருடங்களாக கண்ணுக்குள் எண்ணெய்விட்ட மாதிரி ஒவ்வொரு நிமிடமும் அவனைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்த வளர்த்தவன். பாடசாலை லீவு நாட்களில் கூட அவனை என் தொழிலான கடல் தொழிலுக்கு அழைத்துச் செல்லாமல் அவன் படித்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என அவனின் எதிர்கால நலனில் அக்கறை கொண்டவன். இளவாலையில் அந்த பிரபலமான ஆண்கள் பாடசாலையில் விக்டர் உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். சிறந்த உதைப்பந்தாட்ட வீரன். நல்ல உயரம். பொதுவான நிறம். திடமான இறுக்கமாக உடம்பு. எதையும் சாதிக்க துடிக்கும் கண்கள். எந்நேரமும் சுறுசுறுப்பாக திரியும் விக்டர். அவனில் எத்தனையோ பேர் கண் வைத்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரிமலைப் பக்கமாக மீண்டும் ஷெல் விழுந்து வெடிக்கும் சத்தம் காலைப் பனிக்குளிரில் பக்கத்தில் விழுந்து வெடித்தது போல கேட்கின்றது.

விக்டரைப் பற்றிய நினைவு துயரமாகத் தாக்குகின்றது. ஒரு சனிக்கிழமை யாழ்பாணத்திற்கு டியூடோரியல் வகுப்பொன்றுக்கு சென்ற விக்டர் பின்னர் திரும்பவில்லை. நண்பர்களிடம் ஓடிச் சென்று விசாரித்தபோது போராளிகளின் இயக்கத்தில் சேர்ந்துவிட்டதாக அவனின் நண்பர்கள் மூலம் பல நாட்களின் பின் பதில் கிடைக்கின்றது.

வீடே கலங்கிப் போய்விட்டது. என் மனைவியும் நானும் பதறிப்போய்விட்டோம். விக்டரின் உணர்வுபூர்வ மான முடிவு எங்களை கலங்க வைத்தது. இனிச் சுவரில் ஒட்டியிருக்கும் வீர வணக்கப் போஸ்டர்களில் விக்டரும் ஒருவனாகிவிடுவான்.

விக்டர் இயக்கத்தில் சேர்ந்து மூன்று வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அதன்பின் விக்டரை நானோ என் மனைவியோ கண்டதில்லை. விக்டர் வன்னியில் நிற்பதாக பலர் சொன்னார்கள். விக்டர் துவக்குடன் மோட்டார் சைக்கிளில் சென்றதைக் கண்டதாக சிலர் சொன்னார்கள். ஆனால் யாரும் நேரடியாக விக்டரை கண்டதில்லை.

வன்னிக்குப் போய் யாரிடம் கேட்பது.... வன்னியில் இருக்கின்ற உறவினர்களுக்கும் யாழ்ப்பாணத்திற்கு நினைத்தாற் போல வந்து விட முடியாது வன்னியில் இருந்து யாழ்பாணம் வருவது என்பது அப்படியொன்றும் சுலபமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியம் அல்ல. கட்டுப்பாடுகள், சோதனைச் சாவடிகள், பயண ஆபத்துக்கள் இவையெல்லாம் சேர்ந்து இப்போது உறவின் நெருக்கத்தையே குறைத்துவிட்டது. அன்று நேரம் போனதே தெரியவில்லை. இரவு வந்து வெகு நேரமாகி விட்டது. இடையிடையே "ஷெல்"கள் இன்னும் விழுந்து வெடிக்கின்றது.

நிலவு எறிக்கத் தொடங்கிவிட்டது யன்னலுக்கு வெளியே வானத்தில் நிலவு தொத்தி நிற்கின்றது. வளர் பிறைக் காலம். வானத்தில் நட்சத்திரங்கள் மிக மங்கிய ஒளிர்கற்றைகளாய் சிதறிக் கிடக்கின்றது.

மிகக் கிட்டியாக வீடொன்றில் யன்னல் உடைக்கப் படும் சத்தம் கேட்கின்றது. யாழ்ப்பாணத்தில் தொண்ணூற்று ஐந்துக்கு பின்னர் கள்ளர் பெருகிவிட்டார்கள். களவு முன் போல பணம், நகை, சைக்கிள் அல்ல. களவெடுப்பதற்கு ஏராளமான பொருட்கள் மலிந்துவிட்டன.

ஏனெனில் ஏனென்று கேட்பதற்கு இங்கு யாருமில்லை.

தூரத்தில் நாய்கள் குரைக்கின்றன. ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள இந்த இரவில் இராணுவத்தினரைத் தவிர வேறு யார் வீதியில் உலா வரப்போகினம்...

"பெடியள் உள்ளுக்குள் வந்துவிட்டாங்களோ...?

அடுத்த நாள் தெரு மயான அமைதியாக இருந்தது. இளவாலைச் சந்தியில் உள்ள பச்சைத் தண்ணி கடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு சாமான் வாங்கச் செல்கின்றேன். பச்சைத் தண்ணி கடை பூட்டிக்கிடக்கின்றது. எனது சைக்கிளை நிறுத்திய ஒரு இராணுவத்தினன் எனது "ஐ.சி" எங்கே....? எனக் கேட்கின்றான்.

அப்போது தான் பார்த்தேன். இளவாலை பெரிய கோயில் அன்னம்மாள் கோயில் மதிலோடு பலர் இரண்டு கைகளையும் உயர்த்தியபடி மதிலைப் பார்த்தபடி வெய்யிலில் நிறுத்தப்பட்டிருந்தார்கள்.

இன்று யாழ்ப்பாண வீதிகளில் ஒவ்வொரு தமிழ் மகனும் அவமானப்படுத்தப்படுகின்றான். சைக்கிளில் போனாலும் முழத்துக்கொரு முறை இறக்கிச் சோதனை.

அடையாள அட்டை இல்லையென்றால்....? அந்தோ கதிதான்.....

அடையாள அட்டையைக் காட்டுகின்றேன். அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்தவிட்டு "சுருக்கு போ" என்கிறான்.

தமிழ் அந்த இராணுவ வீரனின் நாவில்படும்பாட்டை சகித்துக் கொண்டு சைக்கிளை உருட்டியபடியே சூப்பி கடைக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் செல்கின்றேன்.

ஒழுங்கையெங்கும் இராணுவம் சுற்றிவளைத்து தேடுதல். வீடுவீடாகச் செக்கிங்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தினரைக் கண்டால் என் மனைவி கலங்கிப் போய் விடுவாளே....?

குடும்பப்படத்தைப் பார்த்து இந்தப் படத்தில் உள்ள உங்கள் மகன் எங்கே என்று கேட்டால்...?

நெஞ்சு திக்கு திக்கு என அடித்துக் கொண்டது. முயல்கடவைச் சந்தியில் என்னை மறித்துப் போட்டாங்கள். நான் சாமான் வாங்க கொண்டுப் போன எனது கூடையைப் பார்த்த இராணுவத்தினன் என்னை மட்டும் போக அனுமதிக்கின்றான்.

கொலேஜ் ரோட்டால் திரும்பி "பற்றிமா ஸ்டோர்ஸ்" இல் அரிசியையும் உருளைக் கிழங்கையும் நெத்தலி கருவாட்டையும் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு விரைகின்றேன்.

என்னைக் கண்டதும் இவ்வளவு நேரமும் எங்கே போனீர்கள்? என என் மனைவி கலக்கத்துடன் கேட்கின்றாள்.

"சந்தியில் மறித்துப் போட்டாங்கள்...

"அவங்கள் வந்து என்ன செய்தவங்கள்.....?

வீடெல்லாம் பார்த்துட்டு போராளிகள் வந்தார்களா எனக் கேட்டாங்கள்?

ஐசி, பாமிலிகாட் எல்லாம் பார்த்தாங்கள். சுவரில் தொங்கிக் கொண்டிருந்த மகனின் படத்தைக் காட்டி இவன் எங்கே என்று கேட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் செத்துப் போயிட்டான்" என்று சொன்னேன்.

நான் விக்கித்துப் போய் மனைவியைப் பார்க்கின்றேன்.

மனமறிந்து அத்தாய் பொய் சொல்லியிருக்கிறாள்.

நான் ஏன் அந்நேரத்தில் அப்படிச் சொன்னேன் என்று எனக்குத் தெரியாது. இப்ப மனம் கிடந்து சஞ்சலப் படுகின்றது. புனித பிலிப்பு நேரியாரே என்மகனுக்கு ஒன்றும் நேராமல் நீதான் காப்பாத்தவேனும். என் மனைவி கோயில் இருக்கும் திசை நோக்கி கையெடுத்துக் கும்பிடுகிறாள். விக்டரைப் பற்றி நினைவு என்னுள் பூக்கின்றது. அவனைக் கண்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டது. இப்போது நன்றாக வளர்ந்து இருப்பான். இளமை முறுக்கேறிய உடம்பின் இறுக்கமான பயிற்சியால் உடலில் நல்ல வலிமையும் பலமும் ஏற்பட்டு இருக்கும். நான் கண்டிப்பான தகப்பனாக இருந்தப்படியால் தான் அவன் ஒரு முறையேனும் வந்து எங்களைச் சந்திக்க வில்லை.

இளம்பிள்ளைகளின் மன உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டேன். அடக்கு முறைகளையும் அவமானங்களையும் சந்தித்து சந்தித்து எங்களை உடல்களும் உள்ளங்களும் மரத்துவிட்டன.

திறந்துவிடப்பட்ட சிறைச்சாலையொன்றில் வாழ்வது போன்ற உணர்வு....

எங்கு திரும்பினாலும் துப்பாக்கி ஏந்தியபடி இராணுவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்டர் இப்போது என்ன செய்து கொண்டிருப்பான். பெற்ற தாயை நினைப்பானே.!

கண்டிப்பு நிறைந்த என்னை நினப்பானோ. நல்ல இரவாகிவிட்டது அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டேன் நான். நாய் குரைத்துவிட்டு தெரிந்தவர்களை இனம் கண்டு கொண்ட திருப்தியில் மீண்டும் படுத்துவிட்டது.

திடுக்கிட்டு எழுந்த நான் மீண்டும் முனகிக் கொண்டிருக்கும் நாய்க்கிட்டே போகின்றேன். நாய் வேலியோரப் பக்கம் எனக்கு முன்னால் ஓடிப் போகின்றது. வேலியோரம் சலசலப்பு எழுகின்றது.

என் மனைவி என்னை நோக்கி குழறி அழுதபடி வந்தாள்.

என்னப்பா என்ன இருந்த இருட்டில்....

ஏன் மகனைப் பற்றி ஏதும் செய்தியோ...?

மகனைப் பற்றிய செய்தியல்ல... மகன்தான் வந்து போனான்....

வேலியோரம் என்னைறியாமல் ஓடிச் செல்கிறேன்.

இருளின் மங்கலான அசைவில் சற்றுத் தூரத்தில் ஒரு உருவம் அவசரம் அவசரமாக விரைந்து நகர்ந்தது

“விக்டர்” என் உதடுகள் அசையவில்லை. என் மனம் தான் கூக்குரலிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்டர் வந்தான். என் கையால் சாப்பாடு குழைத்து தரும்படி கேட்டான். குழைத்துக் கொடுத்தேன். என்னைப் பார்த்தபடியே சாப்பிட்டான் அப்பாவை எழுப்ப வேண்டா மென்றான். எனக்கு கண்ணீர் பெருக்கெடுக்கக் தொங்கி விட்டது. என்னால் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

"விக்டர் வரமாட்டானாம்." நிரந்தரமாகவே போய் விடுவானாம். போகமுன்பு அம்மாவின் கையால் ஆசையாக குழைத்து சோறு இரண்டு பிடி சாப்பிட வேண்டுமென்று வந்தானாம்...."

"நீ ஏன் என்னை எழுப்பவில்லை... என்னை அவன் விசாரிக்கவில்லையா?"

"ஆசையாகக் கேட்டான்"

"நான் செத்தால் நீக்கிலான் சவக்காலையில் என்னைக் கொண்டே தாழ்க்க வேண்டுமென்று நீங்கள் முன்பு அவனுக்கு சொல்லியதையும் சொன்னான்."

"என்னால் அப்பாவை பாக்க முடியாமல் போய் விட்டது, மன்னிக்கும்படி அப்பாவிடம் சொல் அம்மா" என்றான்.

கனரக வாகனங்கள் வீதியில் விரைகின்ற ஒலி கேட்கின்றது.

சாய் மனைக்கதிரையில் உட்கார்ந்து கொள்கிறேன் மனைவி கேவிக்கேவி அழுதபடி என் அருகில். திரு இதயச் செபமாலையை வாய்முறை முணுமுணுக்கிறது. ஒரு வாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடியிருக்கும். ஒரு ஞாயிற்றுக்கிழமை திருப்பலி பூசை முடிந்து வீடு நோக்கி வந்து கொண்டிருக்கின்றேன். என் கண் முன்னால் சுவரில் இருந்த பெரிய "வீரவணக்கம்" போஸ்டரில் விக்டரின் பெரிய படம்.

கீழேயுள்ள வாசகங்களை வாசிக்கும் நிலையில் நான் இல்லை. லெப். கேணல் விக்டர் என்பது மாத்திரம் தெரிகின்றது. கண் இருட்டிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் என் வீட்டில் கட்டிலில் படுத்திருக்கிறேன்.

மனைவி நெஞ்சைத் தடவியபடி கோப்பி பருக்குகின்றாள் ஓரளவு தென்பு வருகின்றது.

நிமிர்ந்து உட்கார்ந்து கொள்கிறேன். உதயன் பேப்பரில் முன்பக்கத்தில் செய்தி பெரிதாக போடப்பட்டிருந்தது.

லெப் கேணல் விக்டர், மேஜர் சூரன், மேஜர் சந்தனா, கப்டன் பாமினி ஆகியோருடன் கூடிய படகு கடுமையான கனரக தாக்குதல் தொடுத்து காங்கேசன் துறைநோக்கி இலங்கை இராணுவத்துக்கு உணவு வினியோகிக்கச் சென்று கொண்டிருந்த உகண விநியோகக் கப்பலை முழுமையாகத் தாக்கி அழிக்க முற்பட்ட வேளை கடற்படையின் பீரங்கிப் படகுகள் கப்பலை நெருங்கி வியூகம் அமைத்து கப்பலுக்கு பாதுகாப்பு வழங்கி சண்டையிட்டுக் கொண்டிருந்தன. முதலாவது தாக்குதல் மூலம் கப்பலை முழுமையாகத் தாக்கி அழிக்க முடியாது போகவே அடுத்த கட்ட தாக்குதல் நடத்த உத்தரவிடப் பட்டது. இன்னொரு போராளிகளின் படகு உகண கப்பலை நெருங்கித் தாக்குதல் நடாத்துவதற்கு ஏற்ற வகையில் கடற் படை கலங்களை அகற்றி பாதை அமைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க வேண்டிய பொறுப்பு அவர்களின் தாக்குதல் படகுகளுக்கு இருந்தன. அவர்களின் தாக்குதல் படகுகள் சுமார் இருமணிநேரத்திற்கு மேலாக சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

லெப் கேணல் விக்டரும், மேஜர் சந்தனாவும் பயணித்த தாக்குதல் படகு அதிவேகத்தில் சென்று உகண கப்பலின் மீது மோதியது. இத்தாக்குதலைத் தொடர்ந்து அது வெடித்து சிதறியது. கப்பல் மெல்ல மெல்ல கடலில் மூழ்கிக் கொண்டது. இத்தாக்குதலில் லெப் கேணல். விக்டர், மேஜர் சந்தனா ஆகியோர் வீரமரணம் அடைந்தனர் என்ற செய்தி உதயன் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. செய்தியைப் படித்து முடித்த செபஸ்தியாம் பிள்ளையின் கண்களில் கண்ணீர் கரைபுரண்டோடியது.

வீரமரணமடைந்த மகனுக்காக, இறந்த ஆன்மாக்களுக்கான செபதீதை செபஸ்தியாம் பிள்ளையும் மனைவி லூர்தம்மா கிறிஸ்து யேசுவுக்கு ஒப்புக் கொடுத்தனர். லேப் கேணல் விக்டர், மேஜர் சந்தனாவின் வீரமரணம் போஸ்டர்கள் யாழ் நகர வீதிகளின் சுவர்களில் ஒட்டப் பட்டிருந்தன.

நன்றி - தமிழ் செந்தாமரை
கனடா, 2002 ஆகஸ்ட் 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல்

4

பனி மென்மையாக கீழிறங்கி எங்கும் வியாபித்திருந்தது. ரோட்டெங்கும் ஈரம் மிதமாகி இருந்தது. இலேசான மழைத்தூறல் விழுந்து இருப்பதாகக் கூடத்தோன்றும். அவையும் கூடபணியினால் ஏற்பட்டது தான். தெரு விளக்குகள் மங்கலாக எரிந்து கொண்டு இருந்தன.

அவன் அந்த சொப்பிங் கொம்பிளக்சின் கீழ் சுருண்டு படுத்திருந்தான். அவனைப்போலின்னும் பலர் உடுத்தியிருந்த சாரத்தை போர்வையாக மாற்றிப் படுத்து இருந்தனர். அது தலைமுதல் கால் வரை மூடியிருந்தாலும் இடையிடையே கிழிசல்களின் வழியாக அங்கங்கள் தெரிந்து கொண்டிருந்தது. அன்று குளிர் கடுமையாகத்தான் இருந்தது. அதனால் அடிக்கடி உடம்பை சுருக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய பள்ளிவாசலில் இருந்து தொழுகைக்கான அழைப்பு சன்னமாகக் கேட்டது. வாகன நடமாட்டமும் கொஞ்சம் கொஞ்சமாகி ஜனநடமாட்டமும் அதிகரிக்கத் தொடங்கி விட்டது. அவன் எது வித பிரக்ஞையும் அற்றவனாய் புரண்டு, புரண்டு படுத்தவண்ணமிருந்தான். பொழுது மிகச் சன்னமாகி விடிய முயன்று கொண்டிருந்தது. இப்பொழுது மனித நடமாட்டத்தை விட மாடுகளின் நடமாட்டம் தெரிந்தது. மனிதர்களுக்கு மட்டுமின்றி மாடுகளுக்கும் தேடல் தொடங்கி விட்டது போலிருந்தது.

சூரியன் தன் மஞ்சள் ஒளியை இலேசாக விசிறியடிக்கத் தொடங்கியிருந்தான். இனியும் அவனால் அங்கு படுத்திருப்பது இயலாது எனத் தோன்றியது. மெதுவாக எழுந்து சப்பணமிட்டு உட்கார்ந்து ரோட்டை நோக்கினான். மனிதர்களும், வாகனங்களும், மாடுகளும் அதனதன் போக்கில் இயங்கிக் கொண்டிருந்தன. இவன் மட்டும் நகராமல் வெறுமனே அமர்ந்திருந்தான். சிறிது நேரத்தில் தலையணையாக வைத்திருந்த பழந்துணிப்பையை நகர்த்தி வைத்து விட்டு எழுந்தான். சொப்பிங் கொம்பிளக்சின் பின்னாக சென்று சிறுநீர் கழித்து விட்டு மீண்டும் அவ்விடத்தில் வந்து அமர்ந்தான். நகரத்தின் இயக்கம் சற்று சூடு பிடித்தது போல் இருந்தது. அருகிலிருந்த துணிப்பையில் கையை விட்டுத் துழாவி ஒரு பீடியை எடுத்துப் பற்றவைத்தான். இரண்டு ரூபா சில்லரைக் காசும் எடுத்துக்கொண்டு ஒரு தேனீராவது குடிக்கலாம் என்ற முடிவோடு பையை எடுத்து கக்கத்தில் வைத்துக்கொண்டு ரோட்டில் இறங்கி நடந்தான். மன்னார் ரோட்டில் இருந்த டீக்கடையை நாடிச் சென்றான் காசைக் கொடுத்து விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டீயை வாங்கிக் கொண்டான். முதல் வாய் உள்ளே இறங்கியதும் குடல் வெளியே வருவது போன்ற உணர்வு அலைக்கழித்தது. அப்போது தான் நேற்று முழுவதும் சாப்பிடாமல் இருந்தது நினைவுக்கு வந்தது. தேனீரைக் குடித்து முடித்து விட்டு நடந்து வந்து முன்பு படுத்திருந்த இடத்தை வந்தடைந்தான்.

எப்போதும் போலில்லாமல் அன்று எதுவும் செய்ய முடியாதவனாய் உணர்ந்து மருண்டான். பையை கீழே போட்டு அதன் மீது அமர்ந்து கொண்டு ரோட்டை வெறித்துப் பார்க்கத் தொடங்கினான்.

மனிதக் கூட்டங்களும் வாகனங்களும் ஒன்றை யொன்று போட்டி போட்டுக் கொண்டு விரைந்து கொண்டு இருந்தன. அத்துடன் மாடுகளும் தெருவில் அலைந்து கொண்டிருந்தன. ஒரு நாய் வேகமாக ஓடிவந்து இவன் இருப்பதையும் கவனிக்காது சொப்பிங் கொம்பிளஸ் சுவருடன் காலைத்தூக்கிக் கொண்டு தன் கடமையில் கண்ணாயிருந்தது.

இவன் உட்காந்திருக்கப்பிடிக்காமல் எழுந்து நடக்கத் தொடங்கினான். வானம் மேகமற்று நீலம் பாரித்துக்கிடந்தது புத்தளத்து வெயிலின் உச்சம் மிகக் கடுமையாக இருந்தது. காற்று வீசலுக்கான அடையாளமற்று மரங்கள் அசையாமல் நின்று கொண்டிருந்தது. அது போன்ற வெறுமை இவனையும் தாங்கிக் கொண்டிருந்தது.

கொழும்பு ரோட்டில் வனபரிபாலன இலாகாவிற்கு முன்னால் களப்புப்பக்கமாக காடு மண்டிக் கிடந்த இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது. நகரத்தையும் கடைகளையும் விட்டுத்தள்ளி அமைந்து இருந்த வனாந்திரமான பகுதி அது. அதைப் பார்த்ததும் அவன் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. தரையில் ஆங்காங்கே மறைந்து கிடக்கும் முள்ளுப்பற்றைகளை விலக்கிக் கொண்டு உள்ளே புகுந்தான். இடையில் சில பச்சைக் கிளைகள் பாதையை மறைத்துக் குறுக்கே நின்றன. அவற்றை ஒவ்வொன்றாய் விலக்கி விட்டு அவனது இடத்தை நோக்கிச் சென்றான்.

அந்த இடம் அவன் அடிக்கடி வந்து போகும் இடம் தான் என்றாலும் இப்போது சில நாட்களாக இங்கு வர அவனுக்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. அந்த இடத்தில் அமர்ந்து சுற்றி நோட்டம் விட்டான். காகிதங்களும் சருகுகளும் இறைந்து கிடந்தன. தீப்பெட்டியும் சிகரெட்டுப் பக்கெட்டும் கிடந்தது. எழுந்து அதை எடுத்துப் பிரித்தான். அதில் மூன்று சிகரெட்டுகளும் சிலதீக்குச்சிகளும் இருந்தன. அவனுடைய அந்த இடத்தை யாரோ வசதியான ஒருவன் இரவுக்குப் பயன்படுத்தியிருக்கிறான் என்று அறிந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை வந்து சோர்ந்து அவசரமாக மீளும் போது இவற்றைத் தவற விட்டிருக்கலாம்.

ஒரு சிகரட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு துணிப்பையை தலைக்குக் கொடுத்து மல்லாந்து படுத்தான். இப்போது வானத்தில் மேகங்கள் அங்குமிங்கும் காணப் பட்டன. புகையை இழுத்து மேல்நோக்கி ஊதினான். அது வளையம் வளையமாய் மேல் நோக்கி சென்றது. என்று மில்லாத வெறுமை இவனைச் சூழ்ந்து கொண்டது சில நாட்களுக்கு முன்பெல்லாம் அவன் இவ்வாறு இருந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. அவனுக்கும் ஒரு துணை இருந்தது. அதனால் பசி பட்டினி குளிர்கூட பெரிதாய்த் தெரியவில்லை.

மதிய வேளைகளில் அவனைப்பார்க்க முனியம்மா வருவாள். இவன் முனியம்மா, முனியம்மா என குழைவான் அவளிடமும் இவனைப் போல ஒரு கந்தல் பை இருக்கும். அதற்குள் இவனுக்காக ஏதாவது சாப்பாடு இருக்கும். அவள் கொண்டு வரும் உணவுப் பார்சலை எடுத்து அன்பாகக் கொடுக்க இவன் அதைப் பிரித்து அவளுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டே இவன் சாப்பிட்டு முடிப்பான்.

சாப்பிட்டு முடிந்ததும் இருவரும் நெடுநேரம் பேசாமல் ஒருவரை ஒருவர் பார்த்தபடி அமர்ந்திருப்பார்கள் அதற்குள் சூரியன் தன் கதிர்களை உள்ளுக்குள் இழுத்துக்கொண்டு மறைந்து விடுவான். இருட்டு மெல்ல மெல்ல நகரத்தை விழுங்கத்தொடங்கி விடும்.

இருவரும் எழுந்து அந்த வனாந்தரப் பகுதியை நோக்கிச் செல்வார்கள். இப்போது அவர்களிடம் பேசுவதற்கு ஒன்றுமிராது. இருட்டாகி இருப்பினும் அவ்விடத்தை அடைவதற்கு அவர்களுக்கு எவ்வித கஷ்டமும் இராது. வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை வருவதால் பாதை பழக்கமாக இருந்தது. அத்துடன் தொந்தரவுகள் எதுவும் இருக்காது நிம்மதியாக இருக்கும்.

இருவரும் அங்கே முயங்கித்தளர்வார்கள். சிறிது நேரம் சென்றதும் அவ்விடத்தை விட்டகன்று தத்தமது இருப்பிடம் நோக்கிப் பிரிவார்கள். இவன் ஒரு போதையோடு தனது இருப்பிடம் வந்தடைந்ததும் இனிமையான கனவுகளோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுளம்புக்கடியையும் குளிரையும் பொருட்படுத்தாது தூங்கிப் போவான்.

பகல் வேளைகளில் அவள் எங்கிருக்கிறாள் என்ன செய்கிறாள் என்பது இவனுக்குத் தெரியாது. அவளும் சொல்லவில்லை. இவனும் தெரிந்து கொள்ள முற்பட வில்லை. வாரத்தில் இரண்டு அல்லது மூன்று தரம் வருவாள். சில தருணங்களில் வாரக்கணக்கில் வராமலே போனாள்.

ஒரு நாள் திடீரென்டு கையில் அரைப் பாட்டிலோடு வந்தாள். கூடவே சோறும் கொஞ்சம் இதையும் குடித்து சாப்பிடு என்று சாராய பாட்டிலை முன்னே வைத்தாள். அன்று இருவரும் படு குஷியில் இருந்தார்கள். வழக்கத்தை விட அதிகமான உற்சாகம் கண்களில் மின்னியது.

இரண்டு தடவை முயங்கித் தணிந்தார்கள். அவன் அங்கேயே தூங்கிவிட்டான். விடிந்துதான் எழுந்தான். பக்கத்தில்அவளைக்காணவில்லை. இவனுக்கு முன்னே அவள் இடத்தை காலிசெய்திருந்தாள்.

தலையைப் பயங்கரமாக வலித்தது. தலையிலிருந்து சுருள் சுருளாய் ஏதோ வெளியேறுவது போலிருந்தது. என்ன ஆயிற்று என்னவோ அவள் வருவதை திடீரென நிறுத்தி விட்டாள். எங்கு தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை. காரணம் என்னவென்றும் அறிய முடியவில்லை அவள் நினைவையும் இவனால் மறக்கமுடியவில்லை. மனதில் எழும் எண்ணம் எல்லாம் கண்ணில் நீராய் பொங்கி எழுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தில் நாய்கள் ஒன்றையொன்ற கடித்துக் குதறுகின்றது. அந்த சப்தம் புகைவண்டிச் சப்தமாய் நீண்டு ஒலித்துக்கொண்டிருந்தது. திடுக்கிட்டு விழித்து எழுந்து கொண்டான். நச்சுப் புகையாய் வெறுமைதாக்கியது. நடை தளர்ந்து சோர்ந்தாலும் இருப்புக் கொள்ளவில்லை. எழுந்து மெதுவாக நடக்கத்தொடங்கினான். நேராக பஸ்ரேன்டை நோக்கி நடந்தான். நடுநிசி. பஸ்ரேன்டில் அவளைக் காணவில்லை. தபால் கந்தோர் சந்தி அதையொட்டிய பெட்டிக்கடை எல்லாம் பார்த்தான். ஒரு இடமும் முனியம்மாவைக் காணவில்லை. நெடுநேரம் அலைந்து கால்கள் வலி கண்டது தான் மிச்சம். அவன் கண்களில் தேடல் குத்திட்டு நின்றது. விறு விறு வென நடந்து சொப்பிங் கொம்பிளக்சில் வழமையாக தங்குமிடத்துக்கு வந்தான். கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது. கந்தல் பையை தலைக்கு அணையாக வைத்து அதன் மீது மல்லாந்து படுத்தான். இப்போது அடர்ந்த மரங்களையும் செடி கொடிகளையும் மட்டுமே அவனால் காணமுடிந்தது. அவற்றுக்கிடையே நின்றுகொண்டு முனியம்மா இவனை வா வா என அழைப்பது போல ஒரு குரல் ஒலித்தது. திடீரென முனியம்மா தோன்றி மறைந்தாள். அடுத்த நாள் காலையில் துப்பரவு செய்ய வந்த நகர சுத்தி தொழிலாளர்கள் அந்த தாடிப்பிச்சைக்காரன் இறந்து போனான் என்று சொன்னது சன்னமாய் அப்பகுதியில் கேட்டுக்கொண்டேயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலைப் போல

## 5

நோன்புப் பெருநாள் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆயிஷாவுக்கு ஏகப்பட்ட கிராக்கி. குறிப்பிட்ட சில வீடுகளுக்குச் சென்று மா இடித்துக் கொடுப்பது, சமையல் வேலை செய்வது பாத்திரங்களைத் தேய்த்துச் சுத்தம் செய்து கொடுப்பது, துணி தோய்த்துக் கொடுப்பது என்பவற்றில் இருந்து கிடைக்கும் பணத்தில் வாழ் நாளைக் கழித்து வரும் ஆயிஷாவை பெருநாள் வரப் போவதால் வீடுவாசல் கழுவவும், மாவு மசாலா மிளகாய்த்தூள் இடிக்கவும் பலர் அழைத்தனர்.

நோன்பு நோற்றப்படி சளைக்காமல் அழைத்தவர்களின் வீடுகளுக்கெல்லாம் சென்று வஞ்சகம் இல்லாமல் வேலை செய்தாள். அதற்காக நோன்பு இருபத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாம் நாளான 'லைலத்துல்கதர்' அன்று ஆயிஷாவுக்குத் துணிமணிகள், பணம், சாப்பாடு என்பன தருவார்கள்.

புத்தளம் நகரில் கங்காணிக்குளம் றோட், மரைக்கார் றோட், வான்வீதி, வெட்டுக்குளம் வீதி, கடுமையான்குளம் வீதி என்பவற்றில் ஆயிஷாவுக்கு ஒரு தனிக் கௌரவம், மதிப்பு.

பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர் கணவர் உவைஸ் இறக்க முன்பு இப்படி வீடு வீடாக அல்லல் படுவோம் என ஆயிஷா எதிர்பார்க்கவே இல்லை. அவளை வீட்டுக்கு வெளியே அனுப்பாமல் வீட்டு வேலைக்கென்று ஆள்வைத்து ஆயிஷாவை ஒரு மென்மையான பூவைப்போல் வைத்துப் போற்றி வளர்த்த கணவன் உவைஸ் இவ்வுலக வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு நெஞ்சுவலியில் 'திடுதிப்' என இறந்து விட்டான்.

உவைசும் ஆயிஷாவும் அன்பாக அன்னியோன்னியமாக வாழ்ந்த பரிசாக மகள் றிஹானா பிறந்தாள். மகள் றிஹானாவைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புக்கு ஆளான ஆயிஷா வீட்டை விட்டு வெளியே வந்தால் தான் சீவிக்கலாம் என்ற துணிச்சலுடன் அடியெடுத்து வைத்து பத்து ஆண்டுகள் முடிந்து விட்டன.

ஆரம்பத்தில் அவள் வீடுகளுக்குப் பாத்திரம் கழுவப் போகின்றாள், துணி துவைக்கப் போகின்றாள் என அறிந்த அக்கம் பக்கத்து வீட்டார்களும், உறவினர்கள் சிலரும் ஏளனத்துடன் அவளைப் பார்க்கத் தொடங்கினர். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிஷா தான் களவெடுக்காமல், பொய் சொல்லாமல், வேஷத்தனம் செய்யாமல் நேர்மையாக வேலை செய்து தானே பணத்தைச் சம்பாதிக்கின்றேன் எனச் சொல்லிக் கொண்டு யாரின் வசைவுகளையும் தன் காதுக்குள் போட்டுக் கொண்டு மனசைப் போட்டு குழப்பிக் கொள்ளாமல் வேலை செய்தாள்.

மரைக்கார் வீதியில் ஹில்மியா வீட்டுக் கல்யாணத்திற்கு மாவு இடிக்க ஆயிஷாவை அழைத்து இருந்தார்கள். நோன்புப் பெருநாள் கழித்து ஹில்மியாவின் மகள் நதீராவிற்கு வெட்டுக்குளம் றோட்டிலுள்ள மொஹமட் ராபியின் மகன் சனூன் தான் மாப்பிள்ளை. சவூதி அரேபியாவில் ஒரு மின் தொழிற்சாலையில் பைக்கர் வேலை.

ஆயிஷா வீடு திரும்பும் போது மாலை வேளை நெருங்கிக் கொண்டிருந்தது. பெரிய பள்ளியில் வழங்கிய நோன்புக் கஞ்சியையும் பேரீச்சம் பழத்தையும் வாங்கிக் கொண்டு வந்திருந்தாள். அந்திநேரத் தொழுகைக்கு 'நகரா' அடித்து தொழுகைக்கு அழைப்பு விடுத்ததும், பேரீச்சம் பழத்தைத் தின்று கஞ்சியைப் பருகி நோன்பை முடித்த ஆயிஷாவிடம் ஹில்மியா வீட்டில் இருந்து வந்த அழைப்பை றிஹானா தெரிவித்ததும், சில கணங்கள் மலைத்து நின்றாள் ஆயிஷா.

ஹில்மியா வீட்டிற்கா...! பொதுவாக மங்களகரமான வேலைகளை பெரும்பாலும் 'தாலி'க்காரிகளிடம் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புவிப்பார்கள். அப்படி ஒரு பழக்கம் உண்டு. ஹில்மியாவின் அக்கா கிஃபாயா வீட்டு சடங்கில் வழியச் சென்று வேலை கேட்டபோது அவள் ஒரு விதவையென்று ஓரங்கட்டியவர்கள் இப்போது திருமணவீட்டு வேலைக்காக கூப்பிடுகிறார்களென்றால்...?

இந்தத் திருப்பம் எப்படி அமையப் போயிற்று? தம்மை விரும்பிக் கூப்பிடுகின்ற இடத்தில் வேலை செய்தால் போதும் என்ற திருப்தியில் ஹில்மியா வீட்டு அழைப்பைத் தட்டிக் கழித்து விட்டாள் ஆயிஷா.

மறுநாள் ஹில்மியாவின் அம்மா ஜென்பிராத்தா ஆயிஷாவின் வீடு தேடி வந்தாள். என்ன ஆயிஷா நேற்று மகள் ஹில்மியா உன்னைக் கூப்பிட்டு அனுப்பினாளாமே ஏன் வரவில்லை?

நோன்பு நேரம் ஆங்காங்கே பல வேலைகள் அவர்கள் எல்லாம் வழக்கமாக என்னைக் கூப்பிடுறாங்க... வேதனையை உள்ளடக்கிக் கொண்டு சாந்தமாக ஆயிஷா பதில் சொன்னாள்.

இருக்கட்டுமே....! நம்ம வீட்டுக்கும் முழுதுமா இந்தக் கலியாண வீட்டு வேலைகளை நீ வந்து செய்யக் கூடாதா? ஹில்மியாவின் மகள் நதீராவும் உம்மகள் றிஹானாவும் ஒன்னா மதரசாவில் ஓதினவங்க இரண்டு பேருமே தோழிகள். நதீரா உன்னைத் தான் விரும்புகின்றாள். தன் தோழியோட உம்மா கிட்டேதான் தனது திருமண வீட்டு வேலைகளை ஒப்படைக்கும்படி பிடிவாதமாக நிற்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவாட்டுக்கடை சலீம் முதலாளி வீட்டிலே ஓட்டு மாவும், இறால்பண்ணை முதலாளி நிசாம் வீட்டிலே மஸ்கெட்டும், நஷீர் முதலாளி வீட்டிலே அல்வாவும் செய்யச் சொல்லி இருக்காங்க. வர்ர 'லைலத்துல்கதர்' நூர்ப்பள்ளி வாசலுக்கு நேர்ச்சையா கொடுக்க சமூசாவும் ஜாங்கிரியும் செஞ்சிக் கேட்டாங்க. ஹில்மியா சாச்சா வீட்டிலே ஆறு நோன்பு கழித்துத்தானே திருமணம்... இன்னும் நாள் இருக்குல்லே....

நீ வந்தால் போதும் ஆயிஷா... இன்ஷா அல்லா பார்க்கலாம்... ஜென்பாராத்தா போய் விட்டாள்.

ஏம்மா தோழியின் அம்மா கூப்பிட்டதிற்கு பிடிகொடுத்துப் பதில் சொல்லல்லே...? உனக்குத் தெரியாது றிஹானா. போனதடவை அவங்க மூத்தமகள் வீட்டு திருமணத்திற்கு வேலைக்கு போன போது என்னை விரட்டினாங்க. அதே மரைக்கார் வீதியில் றியாஸ் மரைக்கார் மகளின் திருமண வீட்டு வேலை முழுவதையும் என்னை கூப்பிட்டு என்கிட்டே தான் தந்திருந்தாங்க. இன்னைக்குப் பாத்தியா றியாஸ் மரைக்கார் மகள் நதீன் கொம்பனித் தெருவில் சொந்த வீடும் வாங்கி ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பெற்று சந்தோஷமாக வாழ்கின்றாளாம். அவள் கணவன் வியாபாரத்திலே சக்கை போடு போடுகிறானாம்.

அப்படியா...?

அந்த ஹில்மியாவின் அக்கா மகள் பஸ்மியாவுக்கு இன்னும் பிள்ளைக்குட்டி இல்லையாம். மாப்பிள்ளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரன் அக்குறனையில் இரண்டாம் கலியாணம் கட்டப்போறானாம். அத்தோடு நாலஞ்சு வியாபாரம் பார்த்தும் ஒன்றும் சரிபட்டுப் போகலையாம். அநியாயமாக இந்த ஆயிஷாவை ஓரங்கட்டப் போய் தான் இத்தனையும் நம்ம மகளுக்கு ஏற்பட்டதென்று அக்கம் பக்கம் பேச்சு இருக்கிதென்று லைலா சொன்னாள்.

ஆயிஷா கைராசிக்காரி. றியாஸ் மரைக்கார் பொண்ணு நல்லாக வாழுதுன்னு சொல்லிக் காட்டுறாங்களாம். இவ்வளவு தூரம் கைராசி தெரிஞ்சிக்கிட்டு வந்து கூப்பிடுறாங்களே.... ஒத்துக்கேங்கோம்மா....

நானா....? இந்த ஆயிஷாவா...? ஒருத்தி தாலி அறுத்திட்டா எப்படி நொந்து இடிஞ்சு போயிருப்பான்னு பொண்ணாகப் பொறந்த அந்த ஹில்மியாவின் அக்காள் நினைத்துப் பார்த்தாளா? என் மனச அன்றைக்கு எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும்... எவளையும் வைத்து கலியாண வீட்டு வேலையைப் பார்க்கிறாள்... இல்லை சும்மா கிடக்கிறாள்....

விரத்தியாய் வார்த்தைகள் ஆயிஷாவிடமிருந்து வெடித்தது. இதற்கு மேல் உம்மாவிடம் பேசி ஒரு பிரயோசனமும் இல்லையென்று றிஹானாவுக்குத் தெரியும்.

இரண்டு நாள் கழித்து இயல்பான நிலைக்குத் திரும்பியதும் ஆயிஷாவிடம் ஹில்மியா வீட்டுத்திருமணம் பற்றி ஞாபகப்படுத்திய போது வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகவே முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தளம் நகரில் ஞாயிறு 'பொல' சந்தையில் றிஹானா விரும்பிச் சாப்பிடும் குருணாகல அன்னாசிப்பழங்கள் குவிந்து கிடந்தன. மகள் ஹிஹானா நோம்பு திறக்கப் பயன்படும் என்று செந்நிற அன்னாசிப்பழமொன்றை வாங்கினாள் ஆயிஷா. தேனீருக்காக கற்பிட்டிப் பனங்கட்டியும் யாழ்ப்பாணத்து கறுத்தக் கொழும்பான் மாம்பழம் இரண்டும் 'பொல' ஞாயிறு சந்தையில் வாங்கிக் கொண்டு வெகுவேகமாக வீடு நோக்கி வந்தாள்.

றிஹானா... றிஹானா... வழக்கம் போல குரல் கொடுத்தபடி ஆயிஷா கதவைத் தட்டினாள். கதவு தானாகத் திறந்து கொண்டது. உள்ளே.... றிஹானாவைக் காணோம். கொல்லைப்புறம் போயிருப்பாள் என நினைத்து வெளிக்கதவைத் திறக்க முயன்ற போது உட்புறம் தாழ் போடப்பட்டிருந்தது. றிஹானா எங்கே...? பக்கத்து வீட்டுத் தமிழ் ஐயா பரமேஸ் வீட்டில் விசாரித்த போது.. றிஹானாவைக் காலையிலிருந்தே காணலியே... நீ தான் உதவிக்கு எங்காச்சும் கூட்டிப் போயிருப்பாய் என்று நெனைச்சிட்டு இருக்கோம்... என்று சொன்னார்கள்.

இன்னும் ஐந்தாறு மாதத்திலே றிஹானாவைக் கட்டிக் குடுத்திடன்னு தானே இத்தனை காலமாய் பாடுபடுகிறேன்... அது அவளுக்குத் தெரியாதா? எங்கே நான் இப்படியே வீட்டோடு இருந்திடுவேனென்னு நினைச்சு... எவன் கூடவோ ஓடிட்டாளோ...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நானா கமாலின் மகனுக்குத் தான் றிஹானாவைக் கட்டிக் கொடுப்பதாக ஏற்கனவே கதைத்து வைத்துள்ளோமே, கமால் நானாவின் மகன் றியாஸ் ஓமானில் 'லூலூ ஷொப்பிங் சென்டரில்' சேல்ஸ்மேன் ஆக வேலை செய்கிறான்.. அவன் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு றிஹானாவைக் கட்டுறதுக்கு மறுத்து விட்டால்...?

றிஹானா குனிந்ததலை நிமிராத பெண்ணாச்சே... அந்நிய மனிதர் யாருடனும் முகம்கொடுத்துப் பேசமாட்டாளே. எந்தச் சண்டாளன் நான் இல்லாத நேரங்களில் வந்து மாய்மாலம் பண்ணி பின்பு இன்று றிஹானாவைக் கடத்திப் போனானோ...? சிலையாக நின்றாள் அயிஷா.

அந்தி நேரம் நகரா முழங்கும் ஓசை அவள் சிந்தனையைக் குலைத்தது. மனம் சுரத்தின்றி நோன்பைத் திறந்து கஞ்சியைக் குடித்தாள்.

'உம்மா...' றிஹானா வீட்டிற்குள் நுழைந்தாள். மகிழ்ச்சி ஒரு புறமும் கோபம் ஒரு புறமுமாக ஆயிஷா மகளை நிமிர்ந்து பார்த்தாள். என்னைக் காணவில்லையென்று கண் கலங்கி கவலை அடைஞ்சிட்டியாம்மா...? எங்கேடி போனே...? என் வயத்திலே நெருப்பைக் கொட்டிட்டு.

ஏம்மா வயதுக்கு வந்து வீட்டில் தனியாக இருக்கிற பெண்கள் எல்லாம் தவறு செஞ்சி விடுவார்களோ என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயப்படுகின்றீர்கள்...? வயதுக்கு வந்த பெண் எப்ப தவறு செய்யக் காலங் கிடைக்கும் என்று காத்திருப்பதைப் போல நினைக்கின்றீர்கள்? நீங்கள் மட்டுமில்லே உம்மா. உன்னைப் போல பல அம்மாக்கள் இப்படித்தான் நினைக்கிறார்கள்.

ஏம்மா உணர்ச்சிவசப்படுறே...? நான் உனக்குப் பிறந்தவளாச்சே... பாதை விலகிப் போயிடுவேனா...? எனக்காக நீ மட்டும் மாஞ்சு மாஞ்சு இப்படி இந்த வயதிலே உழைச்சுத் தேயலாமா? அதுக்காக நான் துணிஞ்சிட்டேனம்மா...

என்ன றிஹானா சொல்றே...? இது பெருநாள் நேரம் நிறைய இடங்களிலேயே வேலை இருக்கும். உன் ஒருத்தியாலேயே அத்தனை இடங்களுக்கும் போயி ஈடுகொடுக்க முடியுமா...? நான் என்ன குபேரன் வீட்டு குமரிப்பெண்ணா? உண்ணுவதற்கும் பஞ்சனையில் படுப்பதற்குமா நான் இருக்கேன்? இந்தக் காலத்திலேயே நாமும் உழைச்சால் தானம்மா காலந்தள்ள முடியும்.

நான் சொல்லலையே நான் இருக்கும் போது நீ ஏன் றிஹானா... கஸ்டப்பட வேணும்...? இதுலே என்னம்மா கஸ்டம் சும்மா வீட்டில் இருக்கிறது தான் கஸ்டம் அந்த ஜென்பாராத்து மாமி வந்தாங்க. ஹில்மியா கல்யாணவீட்டு வேலைகளுக்கு கூப்பிட்டு நீங்கள் மறுத்திட்டீங்க நான் சம்மதிச்சிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹில்மியா ராத்தாவின் மகள் நதீரா எனக்குத் தோழியாச்சே... உங்கள் கைராசி எனக்கு இருக்கத்தானேம்மா செய்யும். தாயைப் போல பிள்ளைன்னா எல்லா அம்சமும் பழக்கமும் கைராசியும் இருக்கும் தானேம்மா. என் தோழி நதீரா செழிப்போடு வாழனும்னு எனக்கு ஆசை. இந்த புனித ரம்சான் மாதத்திலே பிறருக்கு உதவுறது சிறப்பாச்சே... நம்மிடம் என்ன பணம், பொருளா இருக்கு வாரிக்கொடுப்பதற்கு... அதனாலே என் உழைப்பையே நான் அவங்களுக்கு அர்ப்பணிச்சிட்டேன். நான் செய்ற வேலைக்கு கூலி வாங்கப் போறதில்லையென்னு...

ஆயிஷா மகள் றிஹானாவைப் பார்த்து ஒன்றும் பேச மாட்டாதவளாய் மலைத்து மகிழ்ந்து நின்றாள்.

நன்றி – நவமணி
7-3-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மெழுகுவர்த்தி'

6

அழகிய நீண்ட கூந்தலும், பொதுநிறமும் கொண்ட சோமாவதியின் கண்களின் துறுதுறுப்பு பார்ப்போரை வசீகரித்து விடும். அவளின் கண்களில் இருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தைக் கொண்டே நான்கு நாளுக்கு மின்சாரம் இல்லாமல் மின்குமிழ் பாவிக்க முடியும். அவ்வளவு பளபளப்பு அவள் கண்களில். தெதுறு ஓயாவில் உற்பத்தியாகும் நீர் நிக்கவ ரெட்டியவையும் தொட்டுச் செல்வதால் விவசாயிகளுக்கு மூன்று பருவங்களும் நெல் சாகுபடி செய்யக்கூடிய வசதியிருந்ததால் நிக்கவரெட்டி மக்கள் விவசாயத்தையே தங்கள் முக்கிய தொழிலாகக் கொண்டவர்கள். பத்தாம் வகுப்பு வரை நிக்கவரெட்டிய சிங்கள மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்ற சோமாவதி படித்து முடித்த பிற்பாடு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் மூலம் பணிப் பெண்களுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கை நெறியை கற்றுக் கொண்டிருந்தாள். அவளை தங்கள் வலையில் சிக்கவைப்பதற்காக எத்தனையோ இளைஞர்கள் போட்டி போட்டார்கள். அவர்களில் அவளின் மனதைக் கவர்ந்தவன் ஹேரத்பண்டா. அவனுடைய முதல் பார்வையிலேயே சோமாவதி தன்னை இழந்துவிட்டாள் என்றுதான் சொல்ல முடியும். அவனுடைய அந்தப் பளபளக்கும் கண்களும் அந்தப் புன்னகையும் அவளுக்கு ஒரு கிளர்ச்சியை ஊட்டுவதைப் போல இருந்தது. எத்தனையோ இனிமைகள் எல்லாம் உணர்வில் பூச்சொரிவது போல் இருந்தது. வறுமையோ குடும்ப கஷ்டங்களோ இளமைப் பருவத்துக்கு, கனவுகளுக்கு குறுக்கே நிற்பதில்லையே. வசந்தமான எண்ணங்கள். இனிமையான கனவுகள் எல்லாம் எத்தனை எத்தனை நெஞ்சில் குவிந்து கிடந்தன. வயது வந்த பருவத்தில் பழுத்து நிற்கும் ஒரு பெண்ணின் மனம் எதையெல்லாம் எண்ணுமோ மனதில் கற்பனை பண்ணுமோ அப்படித்தான் சோமாவதியின் மனமும் கற்பனையில் மிதந்தது, காதலைப் பற்றி எண்ணியது.

ஹேரத் பண்டாவுடன் உறவாடி, கூடிக்களித்து இன்பத்தை பரிமாறிக்கொள்வதைப் போல் நினைத்து இருவரும் கெஞ்சுவதும் கொஞ்சுவதும் பொய்யாக சண்டை பிடிப்பதும் இருவரும் தம்பதியினராய் நண்பர்கள், உறவினர் வீடுகளுக்கெல்லாம் ஜோடியாகச் சென்று சந்தோசத்தை அனுபவிக்கும் வாழ்க்கையை எண்ணிப்பார்த்தது. இளமைப் பருவம் என்பது வாழ்க்கையின் வசந்த காலம். அந்த இருபத்தியொரு வருட வாழ்க்கையின் வசந்த காலத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறட்சி தரும் கோடைகாலமாகவோ அன்றேல் பனிமூடும் குளிர்காலமாகவோ மாற்றிக்கொள்ள சோமாவதி விரும்ப வில்லை. ஹேரத் பண்டாவுடன் தங்கள் குடும்ப நிலைவரம் குறித்தும் இடைத்தரமக்களின் பிரச்சினை குறித்தும் அவள் மனம் திறந்து உண்மைகளைச் சொல்லும் போது ஹேரத் பண்டா அவளுக்கு அவள் விரும்பும் வாழ்க்கையை கொடுக்க வேண்டும் என்று தனக்குள் நினைத்துக் கொண்டான். தன் குடும்பத்தின் வறுமை நிலையை மனதில் கொண்டு வாழாமல் தனக்கென சில கொள்கைகளை வைத்து அவள் வாழ்ந்தது அவனுக்குப் பிடித்தது. நாளாந்தம் நிக்கவரெட்டியவில் இருந்து வாரிய பொலைக்கு பணிப் பெண்களுக்கான கற்கை நெறியை படிக்கச் செல்வதிலும் பின்பு மாலை வாரியப்பொலையி லிருந்து நிக்கவரெட்டியவுக்கு பஸ் வண்டியில் செல்வதிலும் முழு நேரமும் ஓடி விடும். வீடு செல்லும் போது நிக்கவரெட்டிய மத்திய பஸ் நிலையத்திற்கு அப்பால் உள்ள குழந்தை இயேசு ஆலயமும் இரவு நேரத்தில் செவ்வொளி பரப்பும் அந்தச் சிலுவையும் ஒரு அர்த்த புஷ்டியோடு அவளுக்குள் ஒரு நம்பிக்கையைக் கொடுத்துக் கொண்டிருந்தன.

வருடம் ஒன்று ஓடி மறைந்தது. வீட்டின் குடும்ப நிலையும் மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது. வயல்காட்டில் வேலை செய்து வந்த தந்தையும், நோய்வாய்ப் பட்டதன் காரணமாக வேறு வருமானமின்மையால் குடும்பமும் வறுமை நிலைமைக்குத் தள்ளப்பட்டது ஹேரத் பண்டா குருநாகலையில் இயங்கும் ஒரு வெளிநாட்டு வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பு நிறுவனத்தில் ஆட்களை பிடித்துக் கொடுக்கும் ஒரு இடைத்தரகராக ஒரு இரண்டாம் மூன்றாம் தர முகவராக அந்த நிறுவனத்தில் வேலை செய்து கொண்டு இருந்தான். இரு வீட்டார்களின் பூரண சம்மதத்துடன் ஹேரத் பண்டா சோமாவதியின் திருமணம் எந்தவித ஆடம்பரமும் இல்லாமல் இனிதே நிறைவேறியது.

ஒருநாள் திடீரென மதியம் ஒரு மணிபோல் வேலையில் இருந்து திரும்பி வந்தவன் சவுதி அரேபியாவில் ஒரு நிறுவனத்திற்கு 15 பணிப்பெண்கள் உடனடியாக தேவைப்படுகிறார்கள். நீயும் போகின்றாயா? என்று கேட்டான். கலியாணமாகி 6 மாதங்களும் கழியாத நிலையில் கணவன் இம்மாதிரி ஒரு கேள்வியைக் கேட்டதும் சோமாவதிக்கு நெஞ்சிலே நெருஞ்சி முள் குத்துவது போல் இருந்தது. ஒரு நிரந்தர வேலையில்லாமல் இருக்கும் தன் கணவன் தன்னை நிரந்தரமாகவே வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்புவதை அதுவும் பணிப்பெண்ணாக அனுப்ப முடிவெடுத்ததை எண்ணி அவளின் மனம் துணுக்குற்றது. ஆனாலும், ஒரு நடு இரவில் விமானம் ஏறி சவுதி அரேபியாவின் தஹரான் விமான நிலையத்தில் வந்திறங்கிய அவளைப்போன்ற பதினைந்து பேரை சவுதி அரேபியாவின் வெளிநாட்டு நிறுவனம் கையேற்றுக் கொண்டது. கண்களில் நீர் குளம் கட்டி நிற்க வீட்டுக் கவலையும் சேர்ந்து எண்ண முடியாத ஏக்கத்தைக் கொடுத்தது.

அடுத்த நாள் மத்தியானம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்திடம் இருந்து சோமாவதியை ஸ்பொன்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்த ஷேக் அல்பாபா அத்தானி அவளை தனது வீட்டுக்கு தனது லான்சர் வாகனத்தில் அழைத்துச் சென்றார். பிரமாண்டமான மாளிகை போன்ற வீடு. பளிங்கு போன்ற சலவைக் கற்களால் பதிக்கப்பட்ட தரை என இரண்டு மாடி கட்டிடங்களைக் கொண்டதாக இருந்தது. வீட்டின் மேல்மாடியில் இரண்டாவது மனைவியுடனும் கீழ் மாடியில் முதலாவது மனைவியுடனும் குடித்தனம் நடத்தி வரும் பொஸ் பார்வைக்கு நல்லவர் போல் தோன்றினார். மேல்மாடியில் உள்ள இரண்டாவது மனைவியின் வீட்டில் சோமாவதியின் பணிப் பெண் வேலை. காலையில் அவர்கள் நித்திரை விட்டு எழுவதே 9 மணிக்கு பிற்பாடு தான். அதிகாலையில் எழுந்து வீடு முழுவதும் கூட்டி சுத்தம் செய்து காப்பற்றுக்கு வக்கியூம் கிளீனர் பிடித்து தரை மொப் செய்து குழந்தைகளின் உடுப்புகளை வோசிங் மெஷினில் தோய்த்து எடுத்து காய வைத்து மதியம் சமையல் செய்து முடியவே இரண்டு மணித்தியாலங்கள் ஆகிவிடும். மதிய உணவின் பின்பு இரண்டு மணித்தியாலங்கள் ஓய்வு. பின்பு ஐந்து மணியில் இருந்து வீட்டைச் சுற்றியுள்ள மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி இரவில் மற்றும் ஒரு சமையல் செய்து சாப்பிட்டு அவள் நித்திரைக்குச் செல்லும் போது இரவு பதினொரு மணி தாண்டிவிடும். பொஸ்ஸின் இரண்டாவது மனைவி கொஞ்சம் இளமையானவள். சோமாவதியிடம் அன்பாகப் பழகுவாள். சமையல் வேலைகளுக்கு பெரிதாக உதவி செய்யாவிட்டாலும் சோமாவதியை அன்புடனும் பண்புடனும் நடத்துவாள். இதனால் அந்த வீட்டில் சோமாவதி கொஞ்சம் நிம்மதியாக இருக்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே வீட்டின் கீழ்மாடியில் பொஸ்ஸின் முதலாவது மனைவியுடன் ஒரு இந்தோனேசியப் பெண். அவளுக்கும் ஒரு இருபத்தியெட்டு வயதுக்குள் தான் இருக்கும்.

வந்து 6 மாதங்களுக்குள் சோமாவ'தி அரபு மொழியை கதைக்கும் அளவிற்கு வந்து விட்டாள். ஆரம்பத்தில் இந்தோனேசியப் பணிப்பெண்ணுடன் கைப்பாஷையில் கதைத்து வந்தவள் அரபு மொழியை நன்றாக கதைக்கத் தொடங்கி விட்டாள்.

பொஸ் பெரிய சொப்பிங் கொம்பிளக்ஸ் வைத்து நடத்துவதாக அறிந்து கொண்டாள். ஆறு மாத்தில் 400 றியால் சம்பளம். பொஸ்ஸின் இரண்டாவது மனைவியின் சிபாரிசில் 500 றியால் ஆக்கிக் கொண்டாள்.

அன்று ஹேரத் பண்டாவிடம் இருந்து கடிதம் வந்தது. வேலை செய்த வேலை வாய்ப்பு நிறுவனத்தில் இருந்து வேலையால் நிற்பாட்டி விட்டார்கள் எனக்கு இப்ப வேலை இல்லை. நான் இனி சுயமாக பிஸ்னஸ் செய்யப் போகிறேன். நீ என்ன செய்வியோ தெரியாது. எனக்கு இரண்டு இலட்சம் ரூபா காசு ஒரு கிழமைக்குள் அனுப்பி வை.

கிட்டத்தட்ட 10,000 சவுதி றியால் யாரிடம் மாறுவது. யார் தரப்போகின்றார்கள்?

பொஸ்ஸின் இரண்டாவது மனைவி கொஞ்சம் விபரம் தெரிந்தவள். சோமாவதியின் முகத்திலிருந்து அவள் ஏதோ சஞ்சலத்தில் இருக்கின்றாள் என்று தெரிந்து கொண்டாள். சோமாவதி இயல்பு நிலைக்குத் திரும்புவதாயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிடையில் இரண்டாவது மனைவியும் தாய் - தந்தை வீட்டுக்கு சவூதி அரேபியாவின் தலைநகரான றியாத்திற்கு சகோதரியின் திருமண வீட்டிற்கு ஆயத்தப் படுத்த முதலே செல்ல வேண்டும். அதற்கு முதல் சோமாவதியை திருப்திப்படுத்தி பொறுப்பை சோமாவதியிடம் ஒப்படைத்து விட்டுச் செல்ல வேண்டும், ஆறுதலாக ஆதரவாகக் கூப்பிட்டு என்ன முகவாட்டம் என்று கேட்டாள். கணவனது வேலை பறிபோனது பற்றியும் சுயமாக பிஸ்னஸ் பண்ண இரண்டு இலட்சம் அனுப்ப வேண்டும் என்றும் சொன்னாள்.

சரி ஒன்றுக்கும் கவலைப்படாதே. நீ மாசா மாசம் வேலை செய்கின்ற சம்பளத்திலேயே கழித்துக் கொள்ளலாம். நான் பாபாவுடன் கதைத்து உனக்கு காசு ஒழுங்கு பண்ணுகின்றேன். சமத்தாய் நல்ல பிள்ளையாய் நான் வரும் வரை வீட்டை ஒழுங்காகப் பராமரித்து பொஸ்ஸிற்கு சமைத்துக் கொடு என்று சொல்லிவிட்டாள்.

சோமாவதிக்கு இப்போது மனதில் நிம்மதி. விமான நிலையத்தில் இரண்டாவது மனைவியை றியாத்திற்கு தாய் வீட்டுக்கு பிலைட்டில் அனுப்பிவிட்டு சோமாவதியுடன் வந்து கொண்டிருந்தார் பொஸ். பணம் பெறும் தானியங்கி இயந்திரத்தின் முன்னே தனது லாண்ட் குறூஸ்ஸரை நிறுத்தி அவர் ATM காட் மூலம் காசைப் பெற்றுக் கொண்டார். அப்படியே Western Union Money Transfer மூலம் அனுப்பும்படி Habib Bank இன் முன் நிறுத்தினார். வங்கியின் உள்ளே போன சோமாவதி பொஸ் கொடுத்த முழுக்காசையும் Speed Cash

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் அனுப்பினாள். பணம் பத்தே நிமிடத்தில் நிக்கவரட்டியவில் கிடைத்தது.

பாங்கை விட்டு வெளியில் வந்தவள் கண்ணீருடன் இரண்டு கைகளையும் எடுத்து "பொஸ்" ஸைக் கும்பிட்டாள். என் உயிர் உள்ளவரை இந்த உதவியை மறக்க மாட்டேன் என்று சொன்னாள்.

"இப்போது சந்தோசம் தானே. உனது மெடம் சொன்ன தொகையையும் விடக் கூடத் தந்திருக்கிறேன். சரி சரி கண்ணைத் துடைத்துக் கொண்டு உள்ளே ஏறி உட்கார்."

இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா மொத்தமாக கணவரின் கையில் கிடைக்கும் போது கணவரின் கண்களில் பொங்கும் சந்தோஷத்தை கற்பனை பண்ணிப் பார்த்தாள். அவள் மனது சந்தோஷத்தில் ஆனந்த நாட்டியம் ஆடியது.

அன்று வெள்ளிக் கிழமையாதலால் ஜும்மா தொழுகைக்கு பிற்பாடு பொஸ் கடைக்குப் போகவில்லை. சாப்பிட்டு விட்டுப் போய் மாடியில் உள்ள தன் அறைக்கு தூங்க போய்விட்டார் மதிய சாப்பாட்டிற்குப் பிறகு சிறிது ஒய்வெடுத்தாள். மாலை ஐந்து மணிக்கு எழுப்பி வழமை போல் பாத்திரங்களை தேய்த்து கழுவிக் கொண்டிருந்தாள்.

'பொஸ்' ஸின் அறைக்குள் இருந்து "சோமா... சோமா..." என்று பொஸ்ஸின் தடித்த குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைக்குள் ஓடிச் சென்றாள் சோமாவதி. "சோமா உனக்குத்தான் போன்"

'ஹலோ' சொன்னான் எதிர் முனையில் கணவன்.

ஆயிரம் வாட்ஸ் மின் குமிழின் பிரகாசம் அவள் முகத்தில். குழந்தை போல துள்ளிக் குதித்து முன் ஹோலுக்கு ஓடிப்போய் சோபா செற்றில் உட்கார்ந்து கணவனுடன் முகம் மலர உற்சாகமாக பேசத் தொடங்கினாள்.

"என்ன சுகமாக இருக்கின்றீர்களா?" அவள் குரலில் இருந்த மகிழ்ச்சிக்கு மாறாக இறுக்கம் எதிர் முனையிலிருந்து...

நான் போன முறை ஒரு கடிதம் அனுப்பியிருந்தேன் கிடைத்ததா உனக்கு?

ஓம் ஓம் கிடைத்தது எல்லா செய்தியும் தெரிந்து கொண்டேன்.

பணம் இரண்டு இலட்சம் கேட்டு எழுதியிருந்தேனே.... "என்ன பணத்திற்கு ஏற்பாடு பண்ணினியா?"

தலைகால் புரியாமல் சந்தோஷத்தில் இருந்த சோமாவதி கணவனின் அவநம்பிக்கை தொனித்த குரலை கேட்டதும் அவனை மீண்டும் சீண்டிப்பார்க்க எண்ணினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி முடியும் இரண்டு இலட்சம் புரட்டுவது என்பது சும்மா லேசுபட்ட வேலையா? எங்கட பொஸ் கொஞ்சம் நல்லவராக இருக்கப்போய் அவரின் இரண்டாவது மனைவியும் கொஞ்சம் நல்லவளாக இருக்கறபடியால் நான் வந்த சம்பளத்தை விட, கூடத் தருகிறார்கள். ஏன் நான் மாதம் மாதம் அனுப்பும் பணத்தில் இருந்து உங்களுக்கு தெரியும் தானே...?

இப்போ இரண்டு இலட்சம் அனுப்புவது என்றால் நான் எங்கே போவேன்..? "பொஸ் ஸின் இரண்டாவது மனைவியும் ஊருக்கு போய்விட்டா. இப்போ வீட்டில் பொஸ்ஸுும் நானும் மட்டும் தான். கொஞ்சம் பொறுங்கோ பொஸ்ஸின் மனைவி ஊரில் இருந்து திரும்பி வந்ததும் கதைத்துப் பார்க்கிறேன்.

எனக்கு நிறையக் கதைக்கிற எண்ணமில்லை. நீ என்ன செய்வியோ, ஏது செய்வியோ எனக்கு தெரியாது. எனக்கு உடனடியாக பணம் இரண்டு இலட்சம் வேண்டும். எப்படியும் ஏற்பாடு பண்ணு, உங்க பொஸ்ஸுக்கு உன்னை நல்லாய் பிடிச்சிருக்கு தானே, அப்போ கொஞ்சம் கொஞ்சமாக அட்ஜஸ்ட் பண்ணாமல் மொத்தமாக அட்ஜஸ்ட் பண்ணி போட்டு இரண்டு இலட்சம் பணத்தைக் கேளு. மறுக்க மாட்டான். மொத்தமாக இரண்டு இலட்சமும் தந்திடுவான்.

எங்கோ மூளையில் அபஸ்பரம் தட்டுப்பட குழம்பினாள் சோமாவதி. இதற்கு மேலும் கணவனுடன் வார்த்தை ஜாலங்களினால் விளையாடினால் அவனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம் புறப்பட்டு மொத்த மகிழ்ச்சியும் சிதறிப் போகலாம். உற்சாகம் சற்று இறங்கியவளாய்.. கோபப்படாதீங்க, உங்க அதிர்ஷ்டம் எங்கட பொஸ்ஸின் இரண்டாவது மனைவி தனது தாய் வீட்டுக்கு றியாத் தலைநகருக்கு போகமுன் பொஸ்ஸிடம் சொல்லிவிட்டு போனதாலே பொஸ் அப்படியே மனைவி சொல்லியதையும் விட இருபத்தையாயிரம் கூடவே தந்தார். அதை அப்படியே பொஸ்ஸுடன் காரில் பாங்கிற்கு போய் வெஸ்டன் யூனியன் மணி ரான்சர் மூலம் நிக்கவரெட்டியவில் உள்ள செலான் பாங்கிற்கு உங்கள் பெயரில் அனுப்பியுள்ளேன். ஒரு மணித்தியாலத்தில் பணம் உங்கள் கைக்கு கிடைக்கும் ஐ.சி.ஐ மறந்திடாமல் கொண்டு போங்கள். இந்தாங்க இரகசிய நம்பர் என்று இந்த நம்பரை கசியரிடம் கொடுத்தீர்கள் என்றால் உடனே இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் கிடைக்கும். நீங்கள் கேட்டதை விடவும் இருபத்தையாயிரம் கூடத்தான் அனுப்பியுள்ளேன். இப்ப சந்தோஷம் தானே... என்று மறுபடி வலிந்து கூடிய உற்சாகத்துடன் சொல்லி முடித்தாள். எதிர் முனையில் நீண்ட மௌனம் என்ன... நான் சொல்வது கேட்கிறது தானே...

அப்போ உன்ட பொஸ்ஸோட படுத்து முடிச்சிட்டி யாக்கும். இது உச்சம் தலையில் விழுந்து உள்ளிறங்கினால் போல் இருந்தது. சோமாவதி... நீ செஞ்சதில் எந்த பிழையும் இல்லை. இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் புரட்டுவது என்ன இலேசுப்பட்ட வேலையா? அதுவும் உன்னைப் போல மாதம் எண்ணாயிரம் சம்பளம் வாங்கும் வீட்டுப் பணிப்பெண்களுக்கு இவ்வளவு தொகையை நம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பார்களா? நிறமும் நல்ல வெள்ளை உன் அதிர்ஷ்டம் நீ அழகாய் பிறந்து விட்டாய். பொஸ்ஸுக்கு உன்னை பிடித்துப் போச்சு. என்னாலேயும் உனக்கு ஒரு சுகமும் இல்லைத்தானே. இனி என்னாலே உனக்கு எந்த கரைச்சலும் வராது. பிரச்சினைக்கு என்று நான் உன்னிடம் பணம் கேட்டது சுத்த பொய். வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் சைப்பிரஸுக்கு ஆட்களை அனுப்புகிறார்கள். கணவன் மனைவியாகத்தான் அனுப்புகிறார்கள். என்னுடன் ஒரு பெண்ணையும் அனுப்புகிறார்கள் அவ அந்த வீட்டு பணிப்பெண் நான் அந்த வீட்டிற்கு வாகன ஓட்டுநர். இரண்டு விசாக்களும் ரெடி. இரண்டு இலட்சம் கொடுத்ததும் டிக்கட் புக் பண்ண வேண்டியது தான் பாக்கி. எஜன்சிக்கு கொடுக்கத்தான் இரண்டு இலட்சம் பணம். நீ இருபத்தையாயிரம் போனஸாக வேறு அனுப்பியிருக்கிறாய், நன்றி. உன்னை உங்கட பொஸ்ஸக்கு நல்லாய் பிடிச்சிட்டுது போல, அது தான் போனஸ் வேறு போட்டு கொடுத்திருக்கிறான் நல்லது.

இந்தக் கிழமை நாங்கள் சைப்பிரஸ் பயணம். நீ இனி இங்கு வர வேண்டாம். உங்கட பொஸ் கூடவே சந்தோஷமாக இரு, என்னையும் மறந்துவிடு. மன்னித்துவிடு,

பித்து பிடித்து பெரும் குரல் எடுத்து அழும் சோமாவதியை பார்த்து பதறிப்போன சேக், சொல்லு சோமா என்ன பிரச்சினை? விக்கி விக்கி அழுத வண்ணம் தட்டுதடுமாறி கணவனின் சைப்பிரஸ் பயணத்தை சொல்ல சேக்கும் தலையில் அடித்தபடியே மலைத்து சோகமாகிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனார். எனக்கு எப்படியும் ஸ்ரீலங்கா போக வேண்டும். நாளைக்கே என்னை அனுப்பி வையுங்கள் பிளீஸ்... அவரும் சைப்பிரஸ் போய் விட்டால் நான் அநாதையாகி விடுவேன்.

நீ மறுபடியும் அவசரப்படுகிறாய். முதலில் நீ பூரணமாக ஓய்வெடுத்து தூங்கு. முதலில் போய் தூங்கு.

மறுபடியும் அரைமணி நேரம் கழித்து சேக் வந்த போது சோமாவதி மொட்டை மாடி கதவில் சாய்ந்து நிற்பது தெரிந்தது.

மெல்ல சோமாவதி அருகே சென்றார் சேக்.

சோமாவதியின் கண்களிலிருந்து தாரை தரையாக தண்ணீர் வெள்ளியாக வழிந்தது. மூச்சு காற்று பரஸ்பரம் உணர்கிற அளவிற்கு நெருங்கினார் சேக். சோமா, சோமா நான் சொல்வதை கவனமாக கேள். எல்லாம் கடவுள் சித்தப்படித்தான் நடக்கும். அவனுக்கு உன் மேல் துளிகூட காதல் இல்லை. உண்மையான காதல் இருந்தால் கலியாணம் முடித்த ஆறு மாதத்திற்குள்ளேயே உன்னை இங்கு அனுப்பி யிருக்கமாட்டான். வேலை இல்லை என்றாலும் மூட்டை தூக்கியாவது உன்னை காப்பாற்றியிருக்க வேண்டும். அவனுக்கு உன் மேல் துளிகூட காதல் இல்லை. திருமணம் நடந்திருக்கலாம். அதனால் என்ன இப்ப அவனாகவே உன்னை விட்டு விலகப் போகிறான். இனி நீ ஒரு சுதந்திரப் பறவை. நீ யாரும் அற்ற அநாதை என்று எண்ணிவிடாதே.

உனக்கு நான் இருக்கிறேன். இதை அனுதாபப்பட்டு சொல்லவில்லை. உன்னை, உன் அழகை, உன் இளமையை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் சுறுசுறுப்பை, உன் நல்ல மனத்தை நான் மிகவும் நேசிக்கிறேன். இத்தனை நாளாக புதையலாக பூட்டி வைத்திருந்த என் மனதின் ஆசைகளை இன்று தான் வெளிப்படுத்துகிறேன்.

என்ன தவறாக எண்ணாதே.

நான் பணம் தந்ததால் உன்னை பலவீனப் படுத்திக் கொள்ளவில்லை. எனக்கு பணம் திரும்ப தர வேண்டியதும் இல்லை. என் இரண்டு மனைவியுடன் மூன்றாவதாக உன்னையும் வைத்திருப்பேன். என்னை முழுதாக நம்பு. என்னை ஏற்றுக் கொள். எனக்கு நீ வேண்டும், எதுவும் முழுக்க காதில் விழாமல் காதில் விழுந்ததையும் முழுக்க கிரகித்துக் கொள்ள முடியாமல் பிரமை பிடித்தது போல் நின்ற சோமாவதியை சேக் இன்னும் கிட்டே நெருங்கி நெஞ்சு முழுக்க மிகுந்த சோகத்துடனும் தாபத்துடனும் நெருங்கி இழுத்து இறுக்கி... அணைத்து... தழுவி... தனது கையால் அவளின் முடி கோதி பின்புறம் தடவி தழுவி.. இறுக்கி... அணைத்து... உதடு பொருத்தி அதிஜாலமாய் முத்தமிட்டு இழைத்து சட்டென்று விலகித் தன் அறைக்குள் போனார் சேக்.

அதிர்ந்து நின்றாள் சோமாவதி. மொத்தமனசும் நடுங்கியது. தேகமோ இனம் புரியாத இன்பப் பரவசத்தின் விளிம்பில் நின்று தவித்தது. அவளின் உடல் அவளை இன்பவதை செய்தது. அரண்டு போனாள் சோமாவதி. உறங்கிக் கிடந்த இளமை திடீரென விழித்துக் கொண்டதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய அராபி வீடுகளில் பணிப்பெண்களுக்கு நடக்கும் பாலியல் சேட்டைகளை, தொந்தரவுகளைப் பற்றி இங்கு வந்த பிற்பாடு விலாவரியாக கேட்டுத் தெரிந்து வைத்திருந்தாள்.

நல்ல வேளையாக இந்த வீட்டில் இந்தத் தொந்தரவுகள் இல்லையென்று நிம்மதியாக தூங்கியிருக்கின்றாள். இன்று பொஸ்ஸின் மனைவி வேறு இல்லை என்ன கேவலம்.

கடைசியில் புருஷன் சொன்னது சரியாகத் தான் போய்விட்டது.

கண்ணீர் வழிய வழிய தேகமும் ஒரு சுயாதீன நிலைக்கு வந்தது. சேக்கின் கை பட்ட உடம்பின் ஒவ்வொரு பாகமும் வெட்கித் தலை குனிந்தது. மனம் கதறிக் கதறி மன்னிப்புக் கேட்டது. ஆனாலும், நுரையீரலுக்குள் புகுந்த மூச்சுக்காற்று பாக்கி உள்ளதே... உதடுதாண்டி.... வாயினுள் இழைந்த அவனது ஈரம் இன்னும் உள்ளே படர்ந்துள்ளதே... அருவருப்பின் உச்ச உணர்வோடு பல்கணியின் இரும்புக் கேற்றை பிடித்துக் கொண்டு எம்பி எம்பித் துப்பினாள். ஆவேசத்துடன் உமிழ்ந்து துப்பினாள். மறுபடியும் மறுபடியும் மனசு சாந்தமாக மாட்டாமல் மொத்த வேகத்தையும் கூட்டி ஆக்ரோசமாக உமிழ்கையில் சமநிலை தவறிப் போனாள் சோமாவதி. சரிய வேண்டிய கட்டாயம். ஆனால் அணிச்சையாக பாதங்கள் சுவரில் தட்டுப்பட சமாளித்துக் கொண்டாள். ஆனாலும் எதற்காக இந்த உயிர்? ஒரு வேளை இன்றிரவு சேக் என்னை முற்றும் முழுதுமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிக்கலாம். தேவைதானா இந்த உடல்... மனதில் அந்த முடிவை எடுத்து விட்டாள். பாதத்தைத் தளர்த்தினாள். பற்றியிருந்த கேட்டிலிருந்து கைகளை விடுவித்துக் கொண்டாள். தலை கவிழ்ந்து தன் பாணியில் கண்களை மூடிக்கொண்டாள்.

கண்கள் மூடியிருந்தாலென்ன காட்சிகள் எல்லை விரிகின்றன. அட எங்கட கொல்லைப்புறத்தில் உள்ள முருங்கை மரத்தடி. கொத்து மல்லிகை எவ்வளவு அழகாய் பூத்திருக்கு... அட தேன் பலா மரத்திலே மஞ்சள் குருவிக் கூட்டிலே மூன்று குருவிகளோ...? இரண்டென்றல்லவோ நினைத்திருந்தேன்.

மேலேயிருந்து பார்க்கையில் எங்கட நிக்கவரட்டியா புத்த விகாரை, குழந்தை இயேசு ஆலயம், கந்தசுவாமி கோயில் எவ்வளவு அழகாக இருக்கும். இவை மட்டுமா எங்கட வயல்... எங்கட வளவு... எங்கட வீடு... பூத்து நிற்கும் ரத்து ரோஜா...

ஏன் எங்கட நிக்கரெட்டியா ஊருந்தான் எவ்வளவு அழகாக விளங்குது. மனுசர்கள் எவ்வளவு சந்தோஷமாகத் திரிகிறார்கள் நம்மட ஸ்ரீலங்காவிலே யுத்தம் நிண்டு போய் நல்ல சுகம் பிறந்திட்டுது போல...

நமது முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் போராளிகளின் தலைவரும் கை குலுக்கிக் கொண்டதால் பெரியதொரு பூசல் அகண்டு சமாதானப்பூ பூத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் நின்று போய் சமாதானம் நிலைத்தால் எங்கட நாடு "Sri Lanka is a Paradise" தான். நான் கண்ணை மிச்சம் திறந்தால் எங்கள் மொத்த நாட்டு வடிவையும் ஏன் யாழ்ப்பாணத்தையும் அங்கு வாழும் தமிழ் மக்களையும் நாக விகாரையையும் நயினா விகாரையையும் முழுமையாய் பார்க்கலாம் தானே....

ஓம்... ஓம்... நான் கண்ணை திறக்க போறேனாக்கும் சோமாவதி கண்ணை திறந்தாள். திறந்த அந்த விழிகள் மறுபடி மூடவேயில்லை.

டமாமிலுள்ள கிங் அப்துல் அசீஸ் கொஸ்பிட்டல் மேச்சறிக்கு சோதனைக்கென வந்த சோமாவதியின் உடலை இலங்கை டாக்டர் செல்வி அசெம்ரா ஜெனேந்திரன் நிலைக்குத்தி நின்ற அந்த விழிகளை தன் கைகளால் மூடி விட்டு வெளியே வந்தார். பொல... பொல... வென டாக்டரின் கண்களில் கண்ணீர். சோமாவதி போல எத்தனை இலங்கைப் பெண்கள் தம் குடும்பங்களுக்காக, கணவன் மார்களுக்காக இந்த மத்திய கிழக்கு நாடுகளில் தம்மை மெழுகுவர்த்தியாக உருக்கி மற்றவர்களுக்கு வெளிச்சம் கொடுக்கிறார்களோ...????

*நன்றி - தினக்குரல் வார மலர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவு

## 7

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக அவன் அந்த நில அளவையாளர் திணைக்களத்தில் ஒரு கங்காணியாக வேலை செய்கின்றான்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு பிள்ளை பெறுவதற்காக ஆஸ்பத்திரிக்கு போன அவன் மனைவி திரும்பி வரவில்லை. பிள்ளையும் பிறந்த ஓரிரு தினங்களில் இறந்து போய் விட்டது. இறந்து போன மனைவியின் முகமும் உலகத்து இலையில் மழைத்துளியாக விழுந்து, இறந்து போன மகளும் சில வேளைகளில் நினைவுக்கு வந்து மனதிற்குள் குத்திக் குத்தி வலியெடுக்கும் நேரங்களில் நேராக கொழும்பு றோட்டில் உள்ள சாராய பாருக்குப் போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுவை உட்கொள்ள எல்லாமே சுத்தமாய் மறந்து விடும். வரும் வழியில் அவளைக் கண்டால், வீட்டுக்கு கூட்டி வந்து கடையில் வாங்கி வந்த சோற்றை உண்ணக் கொடுத்து அவளின் பசியை போக்க உதவிடுவான்.

அட்டகாசமான சிரிப்பு, சோளிக்குள் அடங்காமல் மேலே பிதுங்கி விழுந்து துருத்தி உதாசீனமாக நிற்கும் மார்புகள், இடுப்பில் சொருகிக்கட்டிய சேலை, முடியப் படாத அழுக்குக் கூந்தல், குட்டையான தலைமயிர், அழுக்கடைந்து வெட்டப்படாத நகங்கள் அவள் தான் மகேஸ்வரி. அவளைத்தான் இடையிடையே கூட்டி வந்து சோறு உண்ணக் கொடுப்பான் கெங்காதரன்.

அன்றும் அப்படித் தான் ஒரு பகல் அன்று அரைநேர வேலை முடிந்து சோற்றுப்பார்சலை “முருகன் கபே” யில் வாங்கிக் கொண்டு வரும் போது பைத்தியக்காரி மகேஸ்வரி நடுறோட்டில் நின்றிருந்தாள். இவன் அவளைப் பார்த்து வீட்டக்கு வா சோறு தருகிறேன் என்றவுடன் அவளும் இவன் பின்னாலேயே வீட்டுக்கு வந்து விட்டாள்.

அவள் உணவு உண்பதைப் பார்த்துக் கொண்டு வேறு சிந்தனையிலாழ்ந்து விட்டான் கெங்காதரன். பொங்கும் கண்களுடன் அவள் பற்களுக்கிடையில் உணவு சின்னாப் எபின்னமாக்கப் பட்டுக்கொண்டிருந்தது. அவளோ அவனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதும் புன்னகைப்பதும் மார்பை சொறிந்து விடுவதும் இலையில் உணவைச் சிதறுவதும் கால்களை வேறு வேறு நிலையில் அகலப் போட்டுக் கொள்வதுமாய் இருந்தாள்.

கெங்காதரன் நில அளவையார் திணைக்களத்திற்குப் போகும் போது வழியில் பஸ்ராண்டிலும், தபாற் கந்தோருக்கும் மக்கள் வங்கிக்குமிடையில் உள்ள சந்தியிலும், மணிக்கூட்டுக் கோபுரத்தின் கீழும் அவளைப் பலமுறைப் பார்த்திருக்கின்றான். இவள் யார்? இவளின் புருஷன் யார்? இவளுக்கு எத்தனை பிள்ளைகள்? அவர்கள் எங்கு இருக்கிறார்கள்? ஏன் இவளை இப்படி இந்த இளமையில் விசரியாக றோட்டில் அலைய விட்டுள்ளார்கள்? இவளுக்கு உறவினர்களென்று யாரும் இல்லையா? என தனக்குள்ளே எழும் வினாக்களுக்கு விடைகாண முடியாமல் மனதில் ஊஞ்சலாடும் பல வினாக்களுக்கு விடைகாண முயன்றிருக்கின்றான்.

அவள் திடும்... திடும்... என்று நடந்து வருவதும், உரக்கச்சிரிப்பதும், கடைக்காரர்கள் சோத்தைத் தின்னுட்டு எழவு எங்காவது படுத்துத் தொலைய வேண்டியது தானே என திட்டுவதும், சனியன் போ... போ.... என்று கடைக்குள்ளே விடாமல் விரட்டுவதும் இவள் எதையும் பொருட் படுத்தாமல் இந்த உலகத்தையே குத்தி நிமிர்த்திவிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபக்குறி கொண்ட தனது மார்புகளை குலுக்கிக் கொண்டு ஓட்டம் பிடிப்பதும் கெங்காதரனுக்குள் ஒருவித கழிவிரக்கத்தையும் அனுதாபத்தையும் அவள் பால் ஏற்படுத்தியிருந்தது.

சில நேரங்களில் இவளையும் இவளின் வெகுளித் தனமான செய்கைகளையும் ஓரிடத்தில் ஓரமாய் நின்று பார்த்துக் கொண்டிருப்பான். கடைக்காரர்களின் கேலிப்பேச்சுக்கிடையில் விரைந்து போகும் வாகனங்களுக்கு மத்தியில் அவசரமாய் தத்தமது காரியங்களுக்கு செல்பவர்களுக்கு மத்தியில் உரித்துப் போட்ட வாழைப்பழத் தோலினை எடுத்துக் கடிக்கும் இந்த ஒழுங்கற்ற உயிர்தோற்றத்தை, சித்தசுவாதீனம் பிடித்தவளை எதில் சேர்ப்பது என்று தெரியாமல் ஆழ்ந்த யோசனையில் அவன் மூழ்கிப்போவதுண்டு.

அவள் சோறு தின்று முடித்து எழுந்து விட்டிருந்தாள். விரிந்து தாறுமாறாய் கிடக்கும் இலையின் சுற்றுப்புறமெங்கும் உணவின் சோற்றுப்பருக்கையின் சிதறல்கள். ஈ வேறு மொய்க்க ஆரம்பித்திருந்தது. அதைப்பார்க்க அவனுக்கு அருவருப்பாக இருந்தது. "இரு வருகின்றேன்" என்றவன் அறைக்குள்ளே போய் அலுமாரியைத் திறந்து இறந்த மனைவியின் இரண்டு சாறிகளையும், இரண்டு சோளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் கொண்டுவந்து அவளிடத்தில் நீட்டினான். அதை ஆசையாக புன்னகைத்தபடி பெற்றுக் கொண்டவள், அவ்வளவு தான்...

கண்களில் பளபளப்பு மின்ன கெக்கரக்கே... என்ற சிரிப்புடன் அவற்றை வாரியெடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டு குதித்தாள். மறுகணம் தான் அணிந்திருந்த பழைய சோளி. நீட்டுப்பாவாடை, சேலை எல்லாவற்றையும் உரித்து எறிந்து விட்டு நிர்வாணமாய் நின்றிருந்தாள். அவள் உடுத்தியிருந்த துணிகள் எல்லாம் முன்னால் நின்றிருந்த முருங்கை மரத்தில் தொங்கியது. அவள் முழு நிர்வாணமாய் நின்றாள். மனதை ஒன்றும் பண்ணிடாத இந்த நிர்வாணம் கெங்காதரனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. உயிர்ப்புடன் இருந்து பூத்துக் குலுங்கும் உடலில் யௌவனங்கள் மறை பொருளாய் இருந்து அதன் கவர்ச்சியை வெளிப்படுத்தும் போதுதான் மனம் விகாரமாகுமோ...? சிலிர்த்துக் கொள்ளுமோ...? அவள், அவன் முன்னால் முழு நிர்வாணமாக நின்று கொண்டு அவன் கொடுத்த சோளியையும் சாறியையும் சாவதானமாய் நின்று கொண்டு அணியத் தொடங்கினாள்.

பச்சாதாபப் படுகின்ற நோக்கமே நின்று நிலைக்கும் மனதில், இரக்கம் சுமந்து அல்லாடும் பொது மனத்தின் அடியில், சீறத்துடிக்கும் பாம்பாய் காமத்தின் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுகின்ற சம்மட்டி அடியாய் இந்த நிர்வாணம் இருந்தது. கெங்காதரனுக்கு அவளை நிர்வாணமாய் பார்க்க நேர்ந்ததில் குற்ற உணர்ச்சி மேலோங்கி நின்றிருந்தாலும் அவன் மனதில் எந்த கிலேசமும் இல்லை. அவளை அங்கிருந்து நன்றாக உடுத்திக் கொண்டு போகும்படி சைகை செய்து துரிதப் படுத்தினான்.

அவளோ மேலும், மேலும் அரைநிர்வாணமாய் நின்றபடியே இளித்துக் கொண்டு உடைகளை சீர்செய்வதாய் கோரப்படுத்திக் கொண்டிருந்தாள். கெங்காதரனுக்கு மெல்ல பயம் வேறு தொற்றிக் கொண்டது. அவனுக்கு இது பெரிய தொந்தரவாகப் போயிற்று. யாரேனும் அண்டை அயலில் பார்ப்பவர்கள் வித்தியாசமாய் எடுத்துக் கொண்டால் தன்னந்தனியாய் அவன் மட்டும் அந்த வாடகை வீட்டில்... சே... சே... பெரிய தப்புப் பண்ணி விட்டோம் என்றுணர்ந்தான்.

சற்றுக் கடுமையான குரலில் அவளை அதட்டி போ... போ... கெதியா உடுத்திக் கொண்டு வெளியே போ... போ... என்று அதட்டிக் கத்தினான். அவள் உடுத்துவது போல் உடுத்திக் கொண்டு வெளியே போகாமல் போவது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தாள். கெங்காதரனுக்கு இப்போது நெஞ்சு படபடத்தது. மனதில் ஒருவித பயம் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துக் கொண்டது. தேவையில்லாமல் உதவி செய்யப்போய் வீணாக மாட்டிக் கொண்டோம் என்று தோன்றியது.

ஒருவாறு அவள் சேலையை அரைகுறையாக உடுத்திக் கொண்டு அங்கிருந்து போய் விட்டாள். வாசல் வரை வந்து அவள் போனதும் வாசல் கதவை கெங்காதரன் மூடப் போக வாசலில் ஒரு வாட்டசாட்டமான ஆள் நின்றிருந்தான். அவனைக் கண்டதும் அவள் ஓடிப்போய்விட்டாள். வாசலில் நின்றவன் கெங்காதரன் பின்னால் வந்தான்.

நெஞ்சில் திகில் அடைத்து நிற்க அவள் அங்கிருந்து போனது அவனுக்கு ஆறுதலாக இருந்தது. இப்போது வீட்டினுள் வந்தவன் கெங்காதரனை நோக்கி எரிச்சலாயும் கடுகடுப்பாயும் முகத்தை வைத்துக் கொண்டு வேட்டியைத் தூக்கி இடுப்பில் மடித்துக் கட்டி முனையைத் தூக்கி மடித்துச் செருகினான்.

எச்சிலைக் காறித்துப்பியவனாய் கெங்காதரன் அருகில் வந்தவன்... "இனிமேல் இப்படிச் செய்ய வேண்டாம்" என்றான். கெங்காதரன் எச்சிலை மென்று கூட்டி விழுங்கிய வாறே நீங்கள் யாரென்று எனக்குத் தெரியாது. பாவம் இவள் யார் பெண்ணோ? சொந்த ஊர் எதுவோ? பாவம் சோறும் வாங்கி உண்ணக் கொடுத்து இறந்த மனைவியின் இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேலையையும். கொடுத்தேன். இந்த மாதிரி ஆகும் என எனக்கு முதலில் தெரியவில்லை என்றான். வந்தவன் இவன் சொன்ன எதையும் காதல் வாங்கிக் கொள்வதாக இல்லை. "அவளா வந்தாளா? நீங்கள் கூப்பிட்டு வந்தாளா?" என்றான். அவனுக்கு இன்னும் கூட படபடப்பு அடங்கவில்லை. இவனுக்கு நெஞ்சு "திக்" என்றது. நான் தான் கூட்டி வந்து உண்ணக் கொடுத்தேன். சேலை கொடுத்து உடுத்திக் கொள்கிறாயா என்றேன்? ஓம் என்று தலையாட்டினாள். ஆனால் இப்படியாகுமென்று உண்மையில் நான் நினைக்க வில்லை தப்பு பண்ணி விட்டேன் என்று புரிந்தது. எனக்கும் பயமாகப் போய்விட்டது. யாரையும் வெளியில் போய் கூட்டிவந்து இவளை இங்கிருந்து விரட்டி விடுவோம் என்று தான் வெளியில் போனேன். நல்லவேளை நீங்கள் வந்தீர்கள். மன்னிக்கவும். அந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா...? வந்தவன் தலையைக் குனிந்து நிலத்தைப் பார்த்தான். பின்பு ஏதோ தனக்குள் முணுமுணுத்தான். என்னப்பா... முணுமுணுக்கிறாய்? அவள் உனக்கு உறவுக்காரியா? என்று கேட்டான். "பெண்டாட்டி அவள்" என்று வந்தவன் சொன்னான். என்னப்பா... பெண்டாட்டி என்றால் இப்படி நடுறோட்டில் அவளை அலையவிட்டிருக்காயே....? ஏன் அவளை நல்லதொரு மருத்துவமனையில் காட்டி அவளின் பைத்தியத்தைப் போக்க வேண்டாமா...? என்றான் அங்கலாய்ப்புடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு வருடம் சார் பார்க்காத வைத்தியம் இல்லை. கும்பிடாத கோயில் இல்லை. எடுக்காத மருந்தில்லை. இவளைக் கல்யாணம் பண்ணி எந்த சுகத்தையும் நான் அனுபவித்ததில்லை அப்போது யாழ்ப்பாணத்தில் நவாலியில் நாங்கள் குடியிருந்தோம். அரசாங்க இராணுவத்திற்கும் போராளிகளுக்குமான போர் உச்சகட்டம் அடைந்து இருந்த நேரம். திடீரென்று முழங்கிய ஷெல் தத்தம் தலை களிலேயே வீழ்ந்து விடுமோ என ஒவ்வொருவரும் ஓலமிட்டனர். மொத்த ஊராருமே முண்டியடித்து நவாலி சென் பீற்றர் ஆலயத்தின் உள்புறத்தை நோக்கி முண்டி யடிக்கிறது. எங்கும் அவல ஓலங்கள்! பயத்தின் கூக்குரல்கள்! காட்டாற்று வெள்ளமென வரும் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக யாரோ ஆலயத்தின் பிரதான கதவை இழுத்து மூடிவிட ஒன்றும் செய்ய வழியில்லாமல் நானும் மனைவியும் கைக்குழந்தையுடன் ஒரு இடத்தில் ஒதுங்கினோம். கைக்குழந்தையையும் ஏந்திக் கொண்டு எங்கு ஓடுவதெனத் தெரியாமல் இருந்தது. எங்கும் ஒரே இருள். இதற்குள் இராணுவம் முன்னேறிக் கொண்டிருப்பது குறித்து செய்திகள். கூவிக்கொண்டு வந்து 'ஷெல்' வேறு ஆங்காங்கே வெடித்துச் சிதறுகிறது.

அவளும் நானும் கைக்குழந்தையுடன் ஆலயத்துக்கு அருகில் உள்ள ஒரு பதுங்கு குழியில் மற்றை ஆட்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க முடிந்ததைக் குறித்து சிறிது மனதை ஆறுதல் படுத்துகையில் மீண்டும் இராணுவச் சிப்பாய்களின் சப்பாத்துக் காலடி ஓசையும் அவர்களின் உரையாடலும் மிகத் தெளிவாக துல்லியமாகக் கேட்டது. தங்கியிருந்த பதுங்கு குழிக்குள் இருந்தபடியே முற்றத்தில் இராணுவச் சிப்பாய்களின் நடமாட்டத்தை நன்றாக உணர முடிந்தது. பதுங்கு குழிக்குள் இருந்தபடியே பயப்பீதியில் இருந்த படியே வெளிவந்த விம்மலையும் தும்மலையும் அடக்கிக் கொண்டு ஆன்மாவின் உபாதையில் இருந்த போது கைக் குழந்தை இருட்டைத்தாங்க மாட்டாது அழுதது. இராணுவத் தினருக்கு கேட்டுவிட்டது. பதுங்கு குழியை நோக்கி நெருங்கி வரும் காலடியோசையானது பட... பட... பட்... பட்... என்றிருந்தது. பதுங்க குழிக்குள் நான்கு வேட்டுக்கள் தீர்ந்தன. இராணுவச் சிப்பாய்களின் காலடியோசைகளும், பேச்சுக் குரலும் துப்பாக்கி வெடிச்சத்தங்களும் மெல்ல மெல்லத் தேய்ந்து மறைந்து விட்டபின்பு தான் சீரான சுவாசம் எங்களுக்கு வந்தது. பதுங்கு குழியிலிருந்து பெரும் பிரயத்தனப்பட்டு வெளியில் வந்தபோது தான் மங்கிய மெழுகுதிரி வெளிச்சத்தில் பதுங்கு குழிக்குள் எட்டுப்பேர் துடிதுடித்து இறந்துள்ளனர் என்பதை நாமறிந்தோம். அப்போது தான் அவள் தன் கையிருலிந்த குழந்தையைப் பார்த்திருக்கிறாள். சன்னம் ஒன்று பிள்ளையின் பிடரிப் பக்கத்தால் ஊடுருவி குழந்தையின் உயிரையும் பறித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பது தெரிந்தது. எங்களுக் கென்று ஆதாரமாய் இருந்த குழந்தையும் இறந்து விட்ட பிற்பாடு அவளுக்கு சித்தசுவாதினமாகி விட்டது.

அத்துடன் புலப் பெயர்வு நவாலியிலிருந்து வெளியாகி கிளாலிக்கு இடம்பெயர்ந்து பரந்தனில் பின்பு அங்கிருந்து கொண்டு வந்து முல்லேரியாவில் வைத்து வைத்தியம் செய்தோம். ஒன்றுமே பலன் இல்லை. கடந்த மூன்று வருடங்களாக புத்தளத்தில் குடியிருக்கின்றேன். ஆஸ்பத்திரியில் இருந்து ஓடி வந்திட்டாள். அன்றிலிருந்து தெருவில் தான். என்ன செய்வது? எப்படியோ ஒரு நாள் சாவாள் தானே? எடுத்து புதைத்து விட்டு நிம்மதியாக இருக்கலாம் என்று பார்க்கிறேன் ஒருவழியும் காணோம். நான் என்ன செய்ய முடியும்? சொல்லுங்க சார் என்று... தனது நீண்ட கதையைச் சொல்லி முடித்தான்.

இவனிடம் எதைச் சொல்வது...? இப்போது அவளை விடப் பரிதாபமாக இவன் தெரிந்தான். பாவம் இவன் நிலை. பரவாயில்லை உனக்கு நல்லமனது இருக்கிறதே. அவள் பைத்தியம் அதற்கப்புறம் வேறு கல்யாணம் செய்யாமல் இருக்கிறாயா...? றோட்டிலை விட்டுச் சென்றாலும் அவள்மேல் ஒரு கண் வைத்துக் கொண்டிருக்கிறாய். அதுவொரு பெரிய விடயம். அதுசரி ஏன் அவள் எப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவாள்? புதைத்துப் போட்டு நிம்மதியாக இருக்கலாம் என்று சொல்கிறாய்? ஏன் அப்படி அங்கலாய்க்கிறீர்கள் என கெங்காதரனின் அடுத்த கேள்வி. "உங்களுக்கு தெரியாது சார். செத்து தொலைசா எவ்வளவோ நிம்மதி. சொன்னால் நம்பவே மாட்டீர்கள். மூன்று தரம் கூட்டிக் கொண்டு போய் கர்ப்பத்தைக் கலைச்சிருக்கேன். உங்களுக்குத் தெரியுமா சார்?" என்றான்.

"அட தெய்வமே" இந்த சித்தசுவாதீனமுள்ள பெண்ணையா...? இந்த சரீரத்தையா...? இந்த வெறும் சடலத்தையா...? அட ஈன உலகமே! இருட்டுக்குள் ஓடி மறையும் மிருகங்கள் வசிக்கின்ற பூமியா இது? என்ன தம்பி இப்படிச் சொல்கிறீர்கள்? என் தலையெழுத்து சார். எத்தின தரம் கர்ப்பத்தைக் கலைக்கின்ற இந்த "டாக்டர் மிட்ஸை" இன் காலில் விழுந்திருப்பேன். எவ்வளவு செலவு. எவ்வளவு அவமானம். எல்லாம் தாங்கியிருக்கிறேன் சார். என்னால இனியும் தாங்க முடியாது சார். வெட்கம் மானம் கெட்ட பயல்கள் சோறு வாங்கித் தருகிறேன் வருகிறாயா...? எனக்கூட்டி வந்து இந்த மாதிரிச் செய்கிறார்கள் சார். என்ன உலகம் சார் இது. மீண்டும் காறித்துப்பினான். அவனுடைய மையப்புள்ளியில் நேர்க்கோட்டில் தான் வந்து நிற்பது புரிந்து திடுக்குற்றான் கெங்காதரன். அவளின் நிர்வாணம் சுழன்று சுழன்று இவன் நெஞ்சில் உச்சந்தலையில் அறைவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலிருந்தது. அடிமனதில் எங்கோவொரு மூலையில் ஒரு பாவத்தின் கீற்று இழையாய்ப் பிரிந்து நிமிர்ந்து பறந்தது.

இப்போ அவள் பைத்தியமா அல்லது இவன் பைத்தியமா...? நானொரு அதிகப் பிரசங்கியா...? நான் ஆத்மசுத்தி உடையவனா...? இவனுக்கு எப்படி எனது பரிசுத்தத்தைப் புரிய வைப்பது...? ஒரு மனிதன் எப்படியான தருணத்தில், எந்தக் கணத்தில் குற்றவாளியாக கருதப்படுகிறான். எதிர்பாராத நேரத்தில் அபாயங்கள் காத்திருப்பது தான் வாழ்க்கையா...? நல்லது எது? கெட்டது எது? என்பதற்கான சந்தர்ப்பங்கள் ஒரு சில நொடியில் இடம்மாறித் தோற்றமளிக்குமோ...? மனதைத் தளர விடாமல் மனதையும் உடம்பையும் நன்றாகக் கட்டுப்படுத்தி இறுக்கிக் கொண்டு அவனைப் பார்த்தான் கெங்காதரன்.

தம்பி என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை. என்னை நீ தவறாகப் புரிந்து கொண்டாயா...? ஒரு நல்ல சகோதரியாக நினைத்துத் தான் கூட்டி வந்தேன்... இப்படியாகி விட்டதென பெரிதும் மனம் வருந்துகிறேன் என கெங்காதரன் சொல்ல... அவன் சட்டென "இல்லை சார் உங்களை நான் தப்பாக நினைக்கவில்லை. தப்பாகவும் சொல்லவில்லை" என்றான் அவசரமாக. கெங்காதரனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சுக்குள் தண்ணீர் வந்தது போலிருந்தது. கொஞ்சம் நிம்மதியும் கூடவே வந்தது. ஏதாவது அந்தப் பெண்ணுக்கு உதவி தேவைப்பட்டால் என்னைக் கேளு தம்பி. என்னாலே முடிந்ததைச் செய்கின்றேன் என்றான் கெங்காதரன். வந்தவன் போய்விட்டான்.

இந்த சித்தசுவாதினமற்ற அந்தப் பைத்தியம் அலைந்து திரியும் இந்தப் புத்தள நகரமும், இந்த நகரத்தெருக்களின் விசாலமும், அவள் நிர்வாணக் கோலமும், தனது சிறிய வாடகை வீடும், வந்து போய்விட்ட அந்த மனிதனின் சோககங்கலந்த முகமும், அவனின் கவலையும் இன்று ஒரு புள்ளியாய் முன்னூற்று அறுபது பாகையில் ஒற்றைப் புள்ளியில் இணைந்த துயரமாய் மனம் சிதைத்து விட, இறந்த மனைவியின் முகமும் உலகத்து இலையில் மழைத்துளியாய் விழுந்து இறந்து போய்விட்ட மகளின் நினைவும் மாறி மாறி வந்து கண்ணோரங்களில் நீர் அரும்பு கட்டியது. அறைக் கதவை அறைந்து சாத்தினான். நிசப்தமாக இருந்தது வீடு.

நன்றி - சுடரொளி
2001.4.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்துணர்வு

8

சியாமளாவை நான் முதன்முதலாகப் பார்த்தபோது அவளுக்குள் இப்படி ஒரு மென்மையும் இளகிய மனமும் அன்பின் தேடலும் இருக்குமென்று என்னால் உணர முடியவில்லை. நான் அந்த வங்கியின் கிளைக்கு மாற்றலாகி வந்த அன்றே அவள் எதற்காகவோ பக்கத்து மேசைக்காரனிடம் சண்டையிட்டுக் கொண்டு இருந்தாள். அவனும் எங்கள் ஸ்டாஃப் என்றுதான் நினைக்கிறேன். யாழ்ப்பாணத்தில் ஒரு வங்கிக் கிளையில் கஸ்சியராக இருந்தாலும் நாங்கள் எல்லோரும் ஒரு குடும்பம் போல பழகிவந்த எனக்கு இந்தப் புதிய இடமும் அவர்கள் இந்த மாதிரியாக சண்டையிட்டுக் கொண்டதும் புதிதாகவும் கொஞ்சம் வியப்பாகவும்கூட இருந்தது. சியாமளாவின் கோபமும், வார்த்தைகளும் எனக்கு பெரிய அச்சத்தைக் கொடுத்தது. இத்தனை துணிச்சலையும் அகங்காரத்தையும் வங்கியில் வேலை செய்யும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணிடமும் நான் எதிர்பார்க்கவேயில்லை. நான் அவளையே பார்த்துக்கொண்டிருப்பதை சிமாளாவும் பார்த்து விட்டாள். அவளின் பார்வையைத் தவிர்த்து நான் மனேஜர் அறைக்குள் விரைந்தேன். எனது பித்தியோக குறிப்புகளடங்கிய பைஃல்ஜப் படித்த அவர் என்னை கேஷ்சியர் டிப்பாட்மென்டுக்கு அனுப்பினார்.

சியாமளாதான் எனக்கு இன்சார்ஜ் எனத் தெரிந்து கொண்டு வெளிவந்தேன். சிமாளா கேஷ்சியர் கேபினில் உட்கார்ந்திருந்தாள்.

"ஐம் டி.பரமேஸ்வரன் இன்றுதான் டிரான்ஷரில் வந்திருக்கிறேன்."

இதற்கு முன்பு கேஷ் செய்திருக்கிறீர்கள்தானே. ஆனால் இது பெரிய வங்கி. எல்லாம் கம்பியூட்டர் மயப்படுத்தியுள்ளது. எனவே எல்லாம் வேகமாக செய்ய வேண்டும் என்றாள். நல்ல இயல்பாக பண்பாக மரியாதை கலந்த ஆங்கிலத்தில் பேசினாள். சற்று முன் சண்டை போட்டவள் இவளா? என்று எனக்கு சந்தேகமாக இருந்தது. அன்று முழுவதும் எனக்கு அவள் மிகவும் உதவினாள். தனது வேலையை சீக்கிரம் முடித்துவிட்டு எனது கவுன்டருக்கு வந்தாள். பாலன்ஸ் பண்ணத் திணறிக் கொண்டிருந்தபோது தானாகவே பணத்தை எண்ணிப்பார்த்து டோட்டல் பண்ணிவிட்டு மை காட் என்றாள். எனக்கு தலை சுற்றியது. என்ன நடந்தது? பணம் எதாவது குறைகிறதா? என கலக்கத்துடன் கேட்டேன். இல்லை பாலன்ஸ் ஆகிவிட்டது என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் நீங்கள் கேஷ் கேபின் வரும்போது ஒரு ஐம்பது ரூபா என்றாலும் குறையும் என எதிர்பார்த்தேன் என்றாள்.

நான் வாய்விட்டுச் சிரித்தேன். அதன் பின்வரும் நாட்களில் அவள் எனக்கு உதவுவாள். எனது சொந்த வாழ்க்கையைப் பற்றி எனது தாய் தகப்பன் சகோதரர்களை பற்றி நான் தங்கியிருக்கும் இடத்தைப்பற்றி எனது சாப்பாடுபற்றி பொழுதுபோக்கு பற்றி நான் இதுவரை காலமும் திருமணம் செய்யாமல் இருப்பது பற்றி எல்லாம் அக்கறையோடு விசாரித்தாள்.

பொய் பாதியும் மெய்பாதியும் கலந்து பதில் சொன்னேன். அவளைப் பற்றிக் கேட்டேன்.

என்னை பற்றி நான் சொல்வதைக் காட்டிலும் இந்தக் கிளையில் வேலை செய்பவர்களிடம் என்னை பற்றி கேட்டுப்பாருங்கள். அவர்கள் நிறையச் சொல்வார்கள். நான் நேற்று எங்கே எவனோடு சுற்றிக் கொண்டிருந்தேன். என்ன படம் பார்த்தேன் எந்த ஓட்டலில் சாப்பிட்டேன் என்பதெல்லாம் அவர்களுக்கு அத்துப்படி.

ஒரு பெண் பத்தினியா இல்லையா என்பதை இந்த பிரான்சில் வேலை செய்யும் ஆட்கள் தீர்மானிக்கும் விதம் தனிரகம். கொஞ்சம் முதலில் உரசிப் பார்ப்பார்கள். அதற்கு அந்தப் பெண் பின்வரும் விளைவுகளைப் பற்றிப் பயந்து கொஞ்சம் பேசாமல் இருந்தால் இது ஒரு மாதிரி கேஸ் என்று லேபல் குத்திவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கி எழுந்து விட்டால் பெரிய பத்தினி என்று ஒதுங்கிப் போய்விடுவார்கள்.

எதற்கு அந்த ஸ்டாப்புடன் அன்று சண்டை போட்டீர்கள் என்று நாசூக்காகக் கேட்டேன். எனக்கு வரும் கடிதங்களை யாரோ பிரித்து பார்ப்பதாக எனக்கு நெடுநாளாக ஒரு சந்தேகம். போனவாரத்தில் எனக்கு நானே ஒரு கடிதம் எழுதி நன்றாக ஒட்டித் தபாலில் போட்டேன். நான் சந்தேகித்தபடி இந்தக் கடிதமும் பிரிக்கப்பட்டு மறுபடியும் ஒட்டப்பட்டிருந்தது. தீரவிசாரித்துப் பார்த்ததில் அந்த நபர் தான் எனத் தெரிந்தது அது தான் என்னால் தாங்க முடியவில்லை. அன்று அப்படி வெடித்துவிட்டேன் என்றாள்.

“வேலை செய்வதற்காக வீட்டை விட்டு வெளியே வந்து விட்ட பெண்களிடம் சில ஒழுங்கு முறைகளையும் இந்த சமூகம் எதிர்பார்ப்பது குற்றமில்லையே...” என்று எனது அடுத்த கேள்வி. ஒழுங்கு முறைகள் பெண்களுக்கு மட்டும்தானா? பெண்களுக்கு பின்னால் உரசிக்கொண்டோ ஒட்டிக்கொண்டோ ஓடும் பஸ்சில் நின்றபடி ஏதேதோ சங்கேத பாஷையில் கொச்சையாகப் பேசும் இந்த ஆண்வர்க் கத்திற்கு கிடையாதா? அப்படித்தான் இருந்தாலும் எனது ஒழுக்கத்தை இவர்களிடம் நிரூபித்துக் கொள்ள இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது?

“உங்களில் விபச்சாரம் செய்யாதவன் யாரோ அவன் இந்த விபச்சாரியின் மீது முதலில் கல்லை எறியட்டும்” யேசுகிறிஸ்துநாதரின் வார்த்தையை அவள் சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது நான் சியாமளாவின் பேச்சினால் கவரப்பட்டு அவளையே கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டேன். குப்பை மேட்டில் அமர்ந்து கொண்டு தூய்மையைப் பற்றிப் பேசும் இந்தச் சமுகத்தின் சார்பாக பேச வேண்டாம் என்றாள்.

நான் இந்தக் குப்பை சமூகத்திற்காக பேசவில்லை என்றேன். உங்களுக்குப் புரிகிறதோ இல்லையோ வேலைக்காக வெளியே வருகின்ற பெண்கள் இந்த ஆண் ஆதிக்க ஆசியநாட்டில் எத்தனை பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது பற்றி உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையா...? என்றாள்.

எனக்குப் புதிது..... அதனால் என்றேன்.

அவள் டென்சன் குறைந்து கொஞ்சம் சிரித்தாள். சிரிப்பு வெகுநேரம் நீடித்தது. அவள் நெஞ்சில் தேக்கி வைத்திருந்த வேதனையையும் கண்ணீரையும் அந்தச் சிரிப்பின் அலைகள் எனக்கு எடுத்துச் சொல்லியது. இவ்வளவு இயல்பான மென்மையான பெண்ணின் கண்ணீர் எனக்கு அவள் மீது ஒரு நல்ல மதிப்பினை ஏற்படுத்தியது.

அவளுக்கு இன்னமும் திருமணம் ஆகவில்லையென்றும் இரு சகோதரிகளும் ஒரு தம்பியும் வயதான அம்மாவும் அவளின் வருமானத்தை நம்பியுள்ளதாகச் சொன்னாள்.

சியாமளா என்னிடம் பேசுவதிலும் பழகுவதிலும் ஒரு உண்மையிருந்தது. எதையும் இயல்பாக எடுத்துக்கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையும் ஆத்மாத்மமாகப் பேசி தனது மனதில் உள்ள கோபத்தைக் கூட வேசம் இன்றி வெளிப்படுத்தினாள். அன்பையும் அதே பரிமாணத்திலேயே யதார்த்தமாக காட்டினாள்.

என்னை அதுவரை மரியாதையாக அழைத்து வந்தவள் நான் அவளை விட இரண்டு வயது இளையவன் என்பதைத் தெரிந்து கொண்டு ஒருமையில் பேசத் துவங்கினாள். நாங்கள் இருவரும் ஒருமுறை வேலை முடிந்த பிற்பாடு ஒன்றாக நடை போட்டு கடற்கரைக்குப் போனோம். கடற்கரையில் நாங்கள் நிறைய பேசிக் கொண்டிருந்தோம். எங்கள் பேச்சு, இலக்கியம், கவிதை, காதல், இளமை வாழ்க்கை பற்றித்திரும்பியது. ஏற்கனவே அங்கு பல இளம் காதல் ஜோடிகளைப் பார்த்து என் மனம் உடைந்து போயிருந்தது. அதனால் என் கவனம் அவள் பேச்சில் இருக்கவில்லை.

சியாமளா அதை உணர்ந்து கொண்டாள்.

என்ன பரமேஸ் என்ன ஆயிற்று உனக்கு?

"இல்லை ஒன்றுமில்லை"

"ஒரு இருபத்திஎட்டுவயது இளைஞனுக்கு இந்த வயதில் இதைவிட ஒரு சோகம் இருக்க முடியாது"

"காதல் தோல்வி பெரிய சோகமில்லையா?"

அது உன்னைப் போன்றவர்களுக்குத்தான். காதல் ஒரு மாயை. அந்த மாயையைத்தான் சோகம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை சியாமளா "காதல் அது புனிதமானது." கத்தரிக்காய். சரி அப்படியெனில் நமது நட்பு ஆத்மாத்ம மானதில்லையா? புனிதமில்லையா? என்றாள். இதுவும் அப்படித்தான். ஆனால் இருந்தாலும் இதைவிட "காதல் உணர்வுகள் வேறுமாதிரியானவை உணர்ச்சி பூர்வமானது" என்றேன்.

புரிகின்றது உனது காதல் நிறைவேறியிருந்தால் உன் மனதிற்குள் நீ விடும் கண்ணீரும் சோகமும் போயிருக்கு மில்லையா" என்றாள்.

"நிச்சயமாக" என்றேன்.

"அதன் பின்பு உனக்கு வேறு கவலைகளே இருக்க முடியாதா? உன் காதலி அருகாமையும் அது கற்பிக்கும் பலவீனங்களும் அது ஏற்படுத்தும் சலிப்பும் உன்னைச் சோகப்படுத்தாதா? என்றாள். கடல் உள்ளவரை அலைஓயாது. அந்தக் கடற்கரையை வந்து மோதும் அலை கூட ஓய்ந்தாலும் காதல் நெஞ்சம் ஓய்ந்திடாது. கதிரவன் தேய்வதோ வளர்வதோ கிடையாது. அந்தக் கதிரவன் கூடத் தேயலாம். காதல் நினைவு தேயாது. வானுக்கு என்றுமே சொந்தமான நீலவண்ணம் கூட மாறினாலும் காதல் தடம் மாறாது" என்றேன்.

காதல் பைத்தியக்காரத்தனமானது. உணர்ச்சி மயமானது. அறிவின் தெளிவு பிறக்கும் போது தான் காதலின் மடமை தெரிய வரும் என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காதல் அது என்றும் சலிப்பதில்லை. தினம் அது ஒரு உற்சாகத்தில் இரு மனங்களையும் வைத்திருக்கும். நான் கனவுகளோடு யதார்த்தத்தையும் சேர்ந்தே கற்றவன் என்பதால் வாழ்கையோடு அனுசரித்துப் போக என்னால் முடியும்" என்றேன்.

"உன்னை நீயே ஏமாற்றிக் கொண்டிருக்கிறாய். தினமும் உன் காதலியை பூங்காவில், கடற்கரையில் சந்தித்து நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் அவளை நீ திருமணம் செய்து கொண்ட பிற்பாடு அவள் நாள் முழுவதும் உன்னோடு இருப்பாள். காதலிக்கும் போது மணிக்கணக்காகப் பேசும் போது இருந்த காதல் உணர்வை விட நாள் முழுக்க அவள் உன்னோடு இருக்கும் போது தோன்றும் உணர்வுகள் குறைவாகத்தான் இருக்கும்" என்றாள்.

"இருக்கலாம்"

"அப்படிக் காதல் உணர்வுகள் குறையும் போது கூடவே சலிப்பும் எற்படத்தானே செய்யும்" என்றாள்.

"சரி அதற்காக....."

"எல்லாத்திருமண வாழ்க்கையும் இப்படி இருக்கும் பொழுது குறிப்பிட்ட ஒரு பெண்ணுக்காக நீ ஏங்குவதும் அவள் இல்லாத வாழ்க்கை அர்த்தமற்றது என்றும் வாழ்க்கையே இனி இல்லாதது போல் நீ நினைப்பதும் அர்த்தமாகப்படவில்லை. சுத்த முட்டாள் தனம்" என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சியாமளா...... உனக்குக் காதலைப்பற்றித் தெரியாது. அது மனதில் ஏற்படுத்திய தாக்கமும் புரியாது." அதுதான் இந்த மாதிரியான உணர்வுகளைப் பற்றிப் புரியாமல் பேசுகிறாய். வெளியில் நின்று பார்ப்பவர்களுக்கு அதன் தாட்பரியம் தெரியாமல் தான் இருக்கும்" என்றேன். நீ சொல்வது போல் நான் வெளியில் நின்று பார்க்கவில்லை. நானும் அந்தக் காதல் உணர்ச்சிகளை அனுபவித்து இருக்கிறேன். என் பதினெட்டாவது வயதில் எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் ஒரு இளைஞன் குடியிருக்க வந்தான். விவசாய இலாகாவில் உத்தயோகம். மிக அழகான நல்லவன், அமைதியானவன். சத்தமாககூட பேசமாட்டான். கோவப்பட தெரியாது. அவனது நடத்தை எனக்கு அவன் பால் ஒரு கவர்ச்சியை ஏற்படுத்தியது. அவனது அழகும் அமைதியும் எனக்குள்ளே சிலர் உணர்சிகளைத் தூண்டி விட்டது. அவனையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். காலமெல்லாம் அவனோடு வாழவேண்டுமென்று நினைத்தேன். விளைவு காதல் உருவாகியது. அவனை நானும் என்னை அவனும் காதலித்தோம். ஆனால் அக்காதல் வந்த மாதிரியே ஓடி மறைந்தது. அவன் ஊருக்கு போய் வரும்போது புதுமனைவியுடன் வந்து சேர்ந்தான். பிறகு அவனை மறக்க முயன்றேன். "அவ்வளவு சுலபத்தில் மறக்கமுடியாதே?" என்றேன். இல்லை மறந்தேன். இயல்பாக எனக்குள்ள இசை ஆசையால் இசை வகுப்பில் சேர்ந்து கவனத்தை திருப்பி இசையை ஆர்வமாகக் கற்றுக் கொண்டபின் இசை என்னை முழுதாக ஆக்கிரமித்தது. என்னால் எல்லாவற்றையும் மறக்க முடிந்தது. மறப்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதிற்கு மகிழ்ச்சி கொடுத்தால் தேவையில்லாதவற்றை மறக்க முடியும். எல்லாம் மனதினால் முடியும். முறந்து விட்டேன்" என்றாள்.

"உன்னால் உன் காதலை மறந்திருக்கலாம். ஆனால் அது ஏற்படுத்திய பாதிப்புகளும் உணர்வுகளும் பொய் என்று சொல்லமுடியாதே" என்றேன்.

நிச்சயம் இது மாயைதான் பரமேஸ்வரன். இந்த மாயை நிஜமானதெனில் அவன் புதுமனைவியுடன் வந்து எங்கள் எதிர்வீட்டில் குடியிருந்தபோது நான் தற்கொலை செய்திருக்க வேண்டும். காதல் யதார்த்தத்தைவிட வலிமை யானதெனில் நான் அங்கேயே தொடர்ந்து இருக்காமல் அவனை கண்ணால் காணமுடியாத ஒரு இடத்திற்கு ஓடிப் போயிருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் இல்லாமல் என் காதலை என்னால் மறக்க முடிந்ததே...." என்றாள்.

"அப்படியெனில் உன் காதலில் ஆழமில்லை" என்றேன்.

"காதலில் ஆழமானது, அழமில்லாதது என்று வேறுபாடுகள் இருக்கின்றதா? காதலில் தோற்ற எத்தனையோ காதலர்கள் வாழ்க்கையில் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். உன்னால் உனது காதல் தோற்ற பின்பும் வாழமுடிந்திருக்கின்றதே...... அப்படியாகில் உன் காதல் ஆழமில்லாதது தானா.....? என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காதல் கலியாணங்களிலும் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களிலும் ஒரே மாதிரியான உணர்வுகள் கிடைக்கத்தான் செய்கின்றன. அப்படி யிருக்கையில் காதல் மட்டும் ஏன் தேவலோக உணர்வாகச் சித்தரிக்கப்படுகின்றது" என என்னையே கேட்டாள்.

சியாமளா சொல்வதை ஏற்றுக்கொள்வதா மறுப்பதா என என்னுள்ளே ஒரே குழப்பமாக இருந்தது. அவள் கூறியவற்றில் உண்மையிருந்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயக்கமாகக் கூட இருந்தது.

அன்று இரவு ஊரில் உள்ள பெற்றோருக்கு கடிதம் வரைந்தேன். நீங்கள் பார்த்து வைத்திருக்கும் பெண்ணை திருமணம் செய்ய சம்மதம். திருமணத்திற்கு ஏற்பாடு செய்யவும் என்று எழுதினேன்.

காலையில் எழுந்ததும் அதை தபால் அலுவலகத்தில் முத்திரை ஒட்டி போஸ்ற் செய்து விட்டு தெளிந்த மனதுடன் வங்கிக்கு சென்றேன். என் முகத்தின் பிரதிபலிப்பில் இருந்தே சியாமளா எனது முடிவைத் தெரிந்து கொண்டாள்.

நன்றி - ஞாயிறு தினக்குரல்
1.7.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நாள்

## 9

பாம்பு போல நெளிந்து நெளிந்து செல்லும் பாதை. பாதை ஓரங்களில் ஓங்கி வளர்ந்த சைபிரஸ் மரங்கள் அவை நல்ல நிழலைக் கொடுத்துக் கொண்டு இருந்தன. கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் பச்சைப் பசேல் என தேயிலைச் செடிகளும், இயற்கைக் காட்சியும் கண்ணுக்கு குளிர்ச்சியாகத் தெரிந்தன. அந்தக் காட்சியைப் பார்க்கும் போதெல்லாம் இறைவனின் அற்புதப் படைப்பின் அதிசயத்தை எண்ணி எண்ணி மகிழ்வான். உயர்ந்த மலைகள். அந்த தேயிலை மலையின் உச்சியிலே தேயிலைத் தொழிற்சாலை. இந்தத் தேயிலைத் தொழிற்சாலையோடு பெரிய வீதி. அந்த வீதியின் முடிவில் அந்தப் பாடசாலை. பதுளை நகரிலிருந்து கிட்டத்தட்ட பத்து கிலோ மீற்றர் தூரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ள அழகான இடம் பசறை. அங்கு தான் அவனுக்கு முதன் முதல் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. அந்தத் தேயிலைத் தொழிற்சாலையை இவன் கற்பிக்கும் பாடசாலையிலிருந்து பார்க்க முடியும். நேரம் போவதே தெரியாமல் அங்குள்ள மலைகள், குன்றுகள், ஆறுகள், பள்ளத்தாக்குகள், சரிவுகளில் அமைந்த நீரோடைகள், நீரோடையில் மலையோடு போட்டியில் வளர்ந்து நிற்கும் மூங்கில் மரங்கள், அழகான மலையில் படிபோல தொடர்ந்து தேயிலைச் செடி வளர்ந்திருக்கும் இயற்கை அழகை அள்ளிப் பருகிக் கொள்வான். அந்தத் தேயிலைத் தோட்டத்தில் நெற்றி வியர்வை சிந்தி தங்கள் அன்றாட தேவைகளுக்காக மாடாக உழைக்கும் மலைநாட்டுத் தொழிலாளர்களும் கொழுந்தெடுக்கும் பெண்களும் அவரவர் குடும்பங்களில் காணப்படும் பிரச்சனைகளும் எத்தனை எத்தனை. அவை யாவும் தொடர் கதைகளோ? மாலை மங்கும் அந்திமாலை நேரத்தில் பாடசாலையோடு ஒட்டியுள்ள அந்தப் பசும் புற்தரையில் விளையாட்டு மைதானத்தில் விளையாடும் கள்ளம் கபடம் அறியாத பிஞ்சு உள்ளங்களும் கூடைப்பந்து விளையாடும் பள்ளி மாணவிகளும்....

அந்த பாடசாலையுடன் அமைந்துள்ள ஆசிரியருக் கான குவாட்டஸ். பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களில் தன் எழுத்து வேலை, மேலதிக வகுப்பு எடுத்தல், மாரியம்மன் கோயிலிலுள்ள அறநெறிப் பாடசாலையில் படிப்பித்தல் என்பனவற்றால் இவனது நேரம் போவது தெரியாமல் போய்விடும். ஆரம்பத்தில் பசறைக்கு முதல் நியமனம் கிடைத்து வந்த போது பதுளையில் உள்ள நண்பனொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனின் வீட்டில் வந்து தங்கி பின்பு பசறைக்கு வந்து பாடசாலையில் படிப்பிக்கத் தொடங்கிய பிற்பாடு குவாட்டஸ் ஒன்றை அதிபர் அவனுக்குக் கொடுத்திருந்தார். அவனுக்கு இப்போதும் அவன் பாடசாலையில் சேர்ந்த முதல் நாள், நல்ல ஞாபகத்தில் உள்ளது. அன்று திங்கட்கிழமை யாதலால் பெல் அடித்ததும் மாணவிகள் எல்லோரும் பாடசாலையின் பொது மண்டபத்தில் கூடினார்கள். பாடசாலையின் நீலம் - வெள்ளை நிறத்திலான 'ரை'யுடன் தூய வெள்ளைக் கவுண் அணிந்து ஏறுவரிசையில் மாணவிகள் எல்லோரும் நிற்கும் காட்சி அப்பாடசாலையின் ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்கு கட்டியம் கூறிக் கொண்டிருந்தது. பாடசாலை மாணவத் தலைவியின் கணீரென்ற குரல் பாடசாலைக் கீதத்தை இசைக்க அதைத் தொடர்ந்து, மொத்த மாணவியரும் பாடினார்கள். அது தெம்மாங்கு பாடும் தென்றலோடு கலந்து மலைப்பிரதேசமெங்கும் பரவிச் சென்றது.

பாடல் முடிந்தவுடன் பாடசாலை அதிபர் ஸ்ரீராமச்சந்திரன் புதிய கணித ஆசிரியரை மற்றைய ஆசிரிய, ஆசிரியைகளுக்கும், மாணவிகளுக்கும் அறிமுகப்படுத்தி வைக்கின்றார். ஒரு நல்ல கணித ஆசிரியர் வேண்டும் வேண்டும் என குரல் கொடுத்த எமக்கு கல்வி அமைச்சு நல்லதொரு கணித ஆசிரியரை தந்திருக்கின்றது. தயவு செய்து எல்லா ஆசிரிய, ஆசிரியைகளும், மாணவிகளும் இந்தப் புதிய கணித ஆசிரியருடன் நன்கு ஒத்துழைத்து நடக்க வேண்டும். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் இங்கு கற்பிக்க வந்திருக்கிறார் என்றால் உங்கள் அதிஷ்டமே என்று கூறி அதிபர் உரையை சுருக்கமாக முடிக்கின்றார்.

காலைக்கூட்டம் முடிந்து மாணவிகள் ஒழுங்காக தங்கள் தங்கள் வகுப்புகளை நோக்கி வரிசையாகப் போகின்றார்கள். மற்றைய ஆசிரிய, ஆசிரியைகளும் புதிய ஆசிரியரை அறிமுகப்படுத்திய அதிபர் ஏற்கனவே பாட அட்டவணையின் படி இவன் பாடம் எடுக்க வேண்டிய வகுப்புக்கு அழைத்துச் சென்றார்.

எல்ா மாணவிகளும் எழுந்து மரியாதையாக Good Morning Sir என்கிறார்கள். அவனும் பதிலுக்கு சிரித்த படியே Good Morning சொல்லி அவர்களை அமரும் படி கூறி கதிரையில் அமர்ந்து கொள்கின்றான். ஏற்கனவே பட்டம் பெற்ற பிற்பாடு கணித பாடத்தில் டியூட்டரிகளில் கற்பித்ததால் சகல மாணவிகளுடன் இவனும் கலகலப்பாக பழக முடிந்தது. அதனால் கூச்ச சுபாவம் இல்லாமல் அவனால் அந்த வகுப்பில் ஆசிரிய நியமனம் கிடைத்த முதல் நாள் அந்த 13ம் ஆண்டு மகளீருடன் கலகலப்பாக பேச முடிந்தது. முதலில் ஒவ்வொருவராக எழுந்து பெயரைச் சொல்லி மாணவிகளை அறிமுகம் செய்யும்படி கேட்டுக் கொண்டான். அதன்படி மாணவிகள் தங்களை அறிமுகம் செய்து கொண்டார்கள். அறிமுகப்படலம் முடிய ஒரு மாணவி எழுந்து, Sir நாங்கள் எல்லோரும் எங்களை அறிமுகப்படுத்தி விட்டோம். நீங்கள் உங்களை அறிமுகப் படுத்துங்கள் என்று கூற, எல்லா மாணவிகளும் ஆம் ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஆமோதித்தார்கள். அந்த மாணவியின் பெயர் சியாமினி. அந்த வகுப்பை கலகலப்பாக வைத்திருப்பது மட்டுமல்ல அவள் கெட்டிகாரியும் கூட. கதிரையிலிருந்து எழுந்தான். எனது பெயர் கைலாசம் அனந்தன். நான் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவன். எனது பட்டப்படிப்பை பேராதெனியா பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டேன். இந்த ஆசிரிய நியமனம் கிடைக்கும் மட்டும் டியூட்டரிகளில் டியூசன் கொடுத்தேன் என்று சுருக்கமாகக் கூறி முடித்தான்.

அன்றைய தினமே அவன் அந்த 13ம் ஆண்டில் உள்ள மாணவிகளைப் பற்றி அறிந்து கொண்டான்.


அடுத்த மறுதினம் அந்த வகுப்பிற்குள் நுழைந்த போது வகுப்பு மிகவும் கலகலப்பாக இருந்தது. அன்றைய தினம் வட்டத்தின் இயக்கம் என்ற பாடம். முதல் நாள் குவாட்டஸில் ஓய்வாக இருந்த போது வட்டத்தின் இயக்கத்தை வடிவாக மாணவிகளுக்கு இலகுவாக விளக்கு மாறு ஆயத்தபடுத்தியிருந்தான். தாமும் கரும்பலகையில் வட்டத்தைக் கீறி அதில் விளங்கும் விதத்தில் அவற்றை விளக்கிக் கூறினான். அனந்தன், சியாமினி விளக்குகின்றதா? என மொத்த வகுப்பையும் பார்த்துக் கேட்டான். ஏனென்றால் அனந்தன் நேற்று அறிந்த பெயர்களில் சியாமினியின் பெயர்தான் நினைவுக்கு வந்தது. ஆம் சேர் விளங்குகிறது என சியாமினி விடை பகர்ந்தாள்.

சரி இங்கே வாரும். உமக்கு விளங்கியதை கரும் பலகையில் மற்றவர்களுக்கும் விளக்கப்படுத்தும் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்பிட்டு தனது கையிலிருந்து வெண்கட்டியைக் கொடுத்தான். கரம்பலகையில் அழகாக வட்டத்தைக் கீறி எழுதி மாணவிகளுக்கு தெளிவாக விளங்க வைக்கும் சியாமினியின் புத்திக்கூர்மையை மனதிற்குள் பாராட்டினான்.

**வட்ட இயக்கம்**




தணிக்கையொன்று a ஆரையுள்ள வட்டத்தின் வழியே மாறாக்கோண வேகம் w யுடன் இயங்குகிறது என வைப்போம். அதன் தொடலி வழியான வேகம் aw வும் மையம் நோக்கிய வேகம் பூச்சியமுமாகும். அத்துடன் அதன் தொடலி வழியான ஆர்முடுகல் பூச்சியமாகும். மையம் நோக்கிய ஆர்முடுகல் $aw^2$ வுமாகும்.

சியாமினி அனந்தனை விட எட்டு வயது இளையவள். நல்ல உயரம். மெல்லிய உடல். கவர்ச்சியான தோற்றம். சிவந்த மேனி. எல்லோரிடமும் இனிமையாகப் பழகும் சுபாவம். கலகலப்பான கள்ளங்கபடமற்றவள். பாடசாலையில் எந்த நிகழ்ச்சியானாலும் சியாமினி தான் முதலிடம் பெறுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழித்தினம், ஆங்கில மொழித்தினம் என்பவற்றில் அகில இலங்கை ரீதியில் பேச்சுப் போட்டி, பா-ஓதல் என்பவற்றில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவியும் கூட. அதனால் முழுப்பாடசாலையிலும் அதிபர், ஆசிரிய, ஆசிரியைகளாலும் மாணவிகளாலும் பெரிதும் மதிக்கப்பட்டாள். எல்லா ஆசிரிய, ஆசிரியை களுக்கும் அவள் மீது பற்று அதிகம்.

கணிதப் பாடத்தில் அவள் மிகவும் கெட்டிக்காரி என்பது மட்டுமல்ல, சந்தேகங்கள் இருந்தால் கேட்டுத் தெரிந்து கொள்ளும் வரை விடமாட்டாள். சேர், சேர் என்று எல்லாவற்றையும் கேட்டுத் தெளிவாக விளங்கிக் கொள்வாள். சின்னப்பிள்ளை போல கணித ஆசிரியர் மீது சொந்தம் கொண்டாடினாள். வட்டத்தில் இயக்கம் பாடத்தில் இருபத்திரண்டு கணக்குகள் அந்த ஒரு வாரத்தில் செய்து முடித்து விட்டாள். எளிமை இசை இயக்கம் பாடத்தை முதல் நாளே நன்றாக ஆயத்தமாக்கி இருந்தான் அனந்தன்.

சியாமினி தன் செம்பட்டுக் கன்னங்களில் புன்னகை பொங்கி நிற்க, சின்ன இதழ்கள் விரிய, தன் வட்டக் கருவிழி களில் மின்னலாய் வியப்புத் தோன்றி மறைய, தோளில் வழியும் இரட்டைப் பின்னல்களில் ஒன்றையெடுத்து முன்னால் போட்டபடி ஆசிரியர் நுட்பமாக விளக்கப் படுத்துவதை கவனமாகப் பார்ததுக் கொண்டிருந்தாள்.

அனந்தன் அவளை ஊடுருவிப் பார்த்தான். பின்பு தன் பார்வை அவள் மேல் பட்டதை மற்ற மாணவிகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிக் கொள்ளாதவாறு சியாமினி என்ன விளங்குகிறதா? என வினாவினான்.

அவள் ஆம் எனப் பதில் கூறினாள்.

பாடங்களில் சந்தேகம் கேட்கும் போதும் அவளது கொப்பிகளை அனந்தன் திருத்தும் போதும் அவள் பட்டும் படாமலும் முட்டியும் முட்டாமலும் நிற்பது அவளைப் பொறுத்தவரையில் தவறு என்று தெரியாமல் இருக்கலாம். ஆனால் அது அனந்தன் மனதில் பல்வேறு எண்ணங்களை வளர்த்து விட்டிருந்தது.

'ஒரு வேளை சியாமினி என்னை விரும்புகிறாளோ?' என்று கூட எண்ணுவான்.

அவளது 'சேர்' என்ற குரல் காதில் விழுந்ததுமே பதுளை துங்கிந்த தண்ணீரில் உள்ளங்கால் பட்டதும் தண்ணீரின் குளிர்மை உடல் முழுவதும் ஊடுருவுவது போல ஒரு சிலிர்ப்பு அவனுள் பரவும்.'

சில வேளைகளில் அவள் சிரிப்பாள். சிரிப்பென்றால் அவள் கண்கள் சிரிக்கும். அவள் செம்பட்டுக் கன்னம் சிரிக்கும். அவள் மூக்கு சிரிக்கும். அவள் பேசிக் கொண்டு இருக்கின்ற வாக்கியத்தின் ஒவ்வொரு சொல்லும் குதூகலித்துச் சிரிக்கும்.

'அவனின் சிறிய இதயத்தினுள்ளே சியாமினி அதிகம் நிறைந்து விட்டாள்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியத்தொழில் ஒரு புனிதமான தொழில். அந்தப் புனிதமான தொழிலுக்கு தன்னால் களங்கம் ஏற்பட்டு விடக்கூடாது. எனக்குள்ளே முளைவிட்டிருக்கும் அவள் மீதான காதலை அவளிடம் சொல்லவா? சொன்னால் ஏற்றுக்கொள்வாளா? அவள் ஏற்றுக் கொண்டாலும் ஒரு மாணவியை மனைவியாக்கினால் சமூகம் ஏற்றுக் கொள்ளுமா? பின் தொடர்ந்து இந்தப் பாடசாலையில் கற்பிக்க முடியுமா? பின்பு ஆசிரியராகக் கடமையாற்ற என்னால் முடியுமா...? என அவனின் மனம் போராடிக் கொண்டிருந்தது.

ஒருபுறம் அவன் மனது போராடிக் கொண்டிருந்தாலும் மறுபுறம் அவள் விரும்பினால், அவளின் பெற்றோர் விரும்பினால் இந்த சமூகம் என்ன சொல்லப் போகிறது? நான் எது சொன்னாலும் அதை சியாமினியின் பெற்றோரும் ஏற்றுக் கொள்வார்கள். இந்த சமூகத்திற்கு ஒரு வழிகாட்டி யாக இருந்து விட்டுப் போகின்றேன் என்று அனந்தனின் மனது எண்ணிக் கொண்டது. எனினும் மனம் ஒரு முடிவில்லாமல் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது.

அன்றொரு திங்கட்கிழமை தேவாரம் முடிய 'அசெம்பிளி' இல் நமது தமிழ் சமுதாயத்தின் எதிர்காலமே ஆசிரியர்களின் கையில் தான் உள்ளது. பள்ளிக்கூடங்கள் உலைக் களன்கள். மாணவர்கள் இரும்புத்துண்டுகள் போல. அவர்களை வேல்களாக, ஈட்டிகளாக, வாள்களாக உருவாக்கித்தர வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களின் கையிலே தான் தங்கி உள்ளது. கருங்கற்களைப் போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்பட்ட மாணவர்களைச் செதுக்கிச் சிலையாக்க வேண்டியது ஆசிரியர்களின் கடமை என்று அதிபர் பேசி முடித்தார்.

அதிபர் கூறியவற்றை நன்றாகக் கேட்டுக் கொண்டான் அனந்தன்.

கூட்டம் முடிந்து மாணவிகள் வரிசைக்கிரமமாக தங்கள் தங்கள் வகுப்பு நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். அதிபரின் அறிவுரைகளை மனதிற்குள் நினைத்துக் கொண்டு ஒரு குறையுடன் தன் தவறான எண்ணங்களுக்கு முழுக்குப் போட்டு விட்டு, என்னை நம்பியிருக்கும் மாணவிகளுக்கு நல்ல வழிகாட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் 13ம் ஆண்டுக்குள் நுழைந்தான் அனந்தன். கள்ளம்கபடம் அறியாத சியாமினி அனந்தன் ஆசிரியரை இன்முகத்துடன் வரவேற்றாள்.

'சியாமினி என்னை மன்னித்து விடம்மா...?'' என்று சியாமினியின் காலில் விழுந்து அழவேண்டும் போலிருந்தது.

அவளை தனியே அழைத்துப் போய் பேசினாலும் மற்ற மாணவிகள் தவறாக எடுத்துக் கொள்வார்களே. சிலவேளை சியாமினியே தவறாக எடுத்துக் கொண்டு மற்றை மாணவிகளுக்குச் சொல்லி விட்டால்.... விடயம் வேறுவிதமாகப் போய்விடும் என எண்ணினான்.

ஆனால் எல்லாவற்றையும் அனந்தன் தன் மனதினுள்ளே போட்டுப் பூட்டிக்கொண்டு தன் முழுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தையும் ஒன்பது புள்ளிவட்டம் என்னும் பாடத்தைப் படிப்பிப்பதில் செலுத்தினான்.

அன்று ஆசிரியர் தினம். ஆசிரியத் தொழிலின் மகத்துவத்தை உலகம் அறியச் செய்யும் நாள். சர்வதேச ஆசிரியர் தினம். அக்டோபர் ஆறு எப்போது வரும் என்று ஆவலுடன் பார்த்திருந்த பழைய மாணவர்களும் பெற்றோர், ஆசிரியர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் கல்லூரி அதிபரின் அனுமதியுடன் விழாவை ஒழுங்கு செய்திருந்தனர்.

பாடசாலைப் பொது மண்டபம் நன்றாக அலங்கரிக்கப் பட்டு பாடசாலையின் வளவில் நிற்கும் பெரிய மரங்களில் பதாதைகள் தொங்கவிடப் பட்டிருந்தன.

'அறிவுச்சுடர்', 'தங்களை உருவாக்கும் மெழுகு வர்த்திகள்', 'தியாகத் தீபங்கள்', 'அறிவுச் செம்மல்கள்', போன்ற பதாதைகள் பாடசாலையில் தொங்க விடப்பட்டு இருந்தன. காலையில் இருந்தே பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் பாடசாலையை நோக்கி படையெடுத்து வந்து கொண்டிருந்தார்கள். மாணவிகளும் மாலைகள், பூக்களுடன் வந்திருந்தார்கள். மாணவிகளுக்கு வேறாகவும் பெற்றோர், பழைய மாணவிகள், நலன் விரும்பிகளுக்கு வேறாகவும் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

அதிபரும், ஆசிரியர்களும் மேடையின் ஒரு பகுதியில் அமர்ந்திருந்தார்கள். தமிழ்த்தாய் வாழ்த்துடனும், தீபநடனத் துடனும் அன்றைய விழா ஆரம்பமாகியது. முதலில் அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசினார். பெற்றோர் சார்பில், ஆசிரியர் சார்பில், பழைய மாணவிகளின் சார்பில் என கலை நிகழ்ச்சிகளுக்கு இடையில் பேச்சுக்களும் இடம் பெற்றது.

வகுப்பாசிரியர்களை வகுப்பு மாணவத் தலைவிகள் மாலை கொடுத்து, 'பூ' கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆண்டு 13ன் முறை வந்தது. அனந்தன் பெயரைக் கூறி உப அதிபர் ஒலிபெருக்கியில் அழைக்க அனந்தன் ஆசிரியர் மேடையின் நடுப்பகுதிக்கு வந்தான். பூ, பாக்கு, பழம், மாலையுடன் வந்த சியாமினி அனந்தன் ஆசிரியரின் காலில் விழுந்து வணங்கி, எழுந்து மாலையை அனந்தன் ஆசிரிரியர் கையில் கொடுத்து பழத்தட்டையும் கொடுக்கின்றாள்.

ஒரு கன்னிப்பெண் திருமணத்தன்று மணவாளனுக்குத் தான் மாலை சூடுவாள். அவள் மாலையைக் கையில் தந்து தமிழ் சமுதாயத்தின் பாரம்பரியத்தைத்தைச் சட்டிக்காட்டி சங்ககால இலக்கியப் பெண்ணை ஞாபகப்படுத்துகிறாளா...? ஆனந்தன் ஆசிரியரின் மனதில் எழுந்த ஆசைகளுக்கு தக்க பதிலடி கொடுத்து சாவு மணி அடித்தாளா...?

விடை தெரியாத வினா எழுந்து அவன் மனதில் ஊஞ்சல் ஆடியது.

அவள் அவன் காலடியில் விழுந்தாளே....?

குருவே என்னை மன்னித்து விடுங்கள் என்று சொல்வதற்கா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியாமினி ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும்? அனந்தன் ஆசிரியர் அல்லவா சியாமினியிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

மாணவிக்கும் மனைவிக்கும் வேறுபாடு தெரியாதவன் அனந்தன் அல்லவா?

சியாமினி என் அறிவுக்கண்ணை நீ திறந்து விட்டாய். ஆகவே இன்று புனித நாள். உலக ஆசிரியர் தினம். இன்றைய தினத்திலே நீ எனக்கு உன் புத்திக் கூர்மையால் புத்தி புகட்டினாயே என் வாழ்வில் இனிவேறு எந்தவொரு மாணவிகளையும் மனதால் கூட நினைக்க மாட்டேன் என அந்த 'புனித நாள்' அன்று அந்த நிமிடமே தன் அடி மனதில் உறுதியெடுத்துக் கொண்டான் கணிதபாட ஆசிரியர் அனந்தன்.

*நன்றி - வீரகேசரி வார மலர்*
*7.10.2001*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்ய சிநேகிதன்

10

வான் நோக்கி வரிசையாக வளர்ந்து நிற்கும் தென்னை மரங்களும், கற்பிட்டியிலிருந்து கரைத்தீவு வரை அமைதியாக ஓடும் சிறு கடலும், பெயர் பெற்ற பாடசாலைகளும், பல பள்ளிவாசல்களும், கோயில்களும், வியாபார ஸ்தாபனங்களும், சிறந்த விளையாட்டு மைதானங்களும் கொண்டிருக்க அதன் பெரு நிலப்பரப்பை உப்பு வாய்க்கால் களும், எண்ணற்ற இறால் வளர்ப்பு பண்ணைகளும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்க மூவின மக்களும் ஒன்றாகச் சேர்ந்து வாழும் அழகான அமைதியான இடம் புத்தளம்.

அந்தப் புத்தளத்தில் வான் வீதி என்ற பெயர் அலங்கரிக்க, தெருவின் குறுக்கு வீதியில் செங்கட்டி வீட்டினுள் கிழக்கு வானில் உதிக்கும் முழு நிலவாய் பரீனா முகம் சிவக்க கணவனின் அந்தக் கடிதத்தைப் படித்துக் கொண்டு இருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணமாகி மூன்று மாதமே அவளுடன் வசந்தத்தைப் பங்கு போட்டுக் கொண்ட அவள் கணவன் மொஹமட் அன்சாரி ஓராண்டு பிரிவுக்குப் பின்பு தலைப்பெருநாளை மனைவியுடன் கொண்டாடுவதற்காக ஓமானிலிருந்து விடுமுறைக்கு வரப்போகும் செய்தியைத் தாங்கியிருந்தது அந்தக் கடிதம். கடிதத்தைப் பத்துத் தடவைகளுக்கு மேல் படித்துக் கொண்டிருந்தாள் பரீனா. ஆனால் வீட்டின் அப்போதைய நிலைமை சங்கடமான சூழ்நிலை. அதனால் இருபத்தயொரு வயதான பரீனாவின் முகத்தில் சற்று வாட்டத்தை ஏற்படுத்தியிருந்தது.

வெள்ளிக்கிழமை ஜூம்ஆத் தொழுகைக்கு முன்பாகி ஊர் நாட்டாமை என்ற முறையில் பள்ளிவாசலில் 'பயான்' செய்துகொண்டிருந்தார் ஜவாத் மரைக்கார். அவரது உரையின் பெரும்பகுதி உரை முடிந்து இறுதியாகச் சொன்னார்.

"ஆகவே.... அன்பார்ந்த பெரியோர்களே, மதிப்புக்குரிய நண்பர்களே, இறைவழியில் நாம் செய்ய வேண்டிய கடமைகளை இயந்திரத்தனமாக செய்யாமல், மனப்பூர்வமாக உணர்ந்து செய்திடல் வேண்டும். இயந்திரத்தனமான வணக்கத்தையும், கடமைகளையும் இறைவன் ஏற்பது மில்லை. இந்த மாதம் சிறப்பு மிக்க ரம்லான் மாதமாகும். இதன் ஒவ்வொரு நோன்பையும் உள்ளன்போடு உணர்ச்சி பூர்வமாய் நோற்க வேண்டும். மனிதர்களின் வெறும் பட்டினியைக் கொண்டு மாத்திரமே இறைவன் மகிழ்ச்சி யடைந்து விடுவான் என்று நாம் நினைத்து விடக்கூடாது. பசித்திருக்கும் இந்த நோன்பு நிலையில் ஏழை எளியவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் பசியின் கொடுமை வறுமையின் கொடுமை எத்தகைய தாக இருக்கும் என்பதை நாம் உணர வேண்டும் என்பதே இறைவனின் நோக்கமாகும். இருப்பவன் இல்லாதவனுக்குக் கொடுத்து உதவுகின்றானா என்று பரிசோதிக்கவும் நம்மீது நோன்பைக் கடமையாக்கி இருக்கின்றான் அந்தப் பேரருளாளன். இல்லாதவன் இருப்பவனிடம் கையேந்தும் நிலை வருமுன்னே இருப்பவன் மனமுவந்து தன் தகுதிக்கேற்ப உதவிகள் செய்திட வேண்டும். பிறருக்கு உதவிட வேண்டும்..."

ஜவாத் மரைக்கார் தனது சொற்பொழிவை முடித்துக் கொண்டதும் முதல் 'பாங்கு' அழைப்பைத் தொடர்ந்து முன்தொழுகை முடிந்து, இரண்டாம் 'பாங்கு' அழைப்புக்குப் பின் இமாம் 'குத்பா' ஓதி முடித்ததும் வெள்ளிக்கிழமையின் பிரதான ஜும் தொழுகையும் முடிந்தது. அதன் பின் இதர உபரித் தொழுகைகளும் முடிந்த பின் சிறிது நேரம் குர்ஆனையும் ஓதிவிட்டு தலை நிமிர்ந்த ஜவாத் மரைக்காரின் பார்வை பள்ளிவாசலின் உள் வராந்தாவில் இருந்து எங்கோ சிந்தனை வயப்பட்டு சிறுகடலைப் பார்த்தபடி இருந்த ஜெமில் மரைக்காரின் மேல் விழுந்தது. ஜவாத் மரைக்கார் ஜெமில் மரைக்காரின் சம்பந்தியும் கூட.

ஜெமில் மரைக்காருக்கு அருகே சென்று அமர்ந்தார் ஜவாத் மரைக்கார். இருவரும் சலாம் சொல்லிக் கொண்டார்கள். "என்ன பலமான சிந்தனை?" ஜவாத் மரைக்கார் கேட்டார். "ஒன்றுமில்லை. தொழுதிட்டு இப்படி கடல் காற்று வாங்க உட்கார்ந்தேன்". "அப்படிச் சொன்னால் சரியாப் போச்சா... உங்கள் முகமே சொல்கின்றதே நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமான யோசனையில் இருக்கிறீர்களென்று.... இது நிச்சயமாக நோன்புக் களைப்பு இல்லை."

ஜெமில் மரைக்காரின் மன இறுக்கம் தளர்ந்து, "ஒண்ணுமில்லையே... மகளுக்குத் தலைப்பெருநாள் இது." "ஆமா மகன் மொஹமட் அன்சாரி கூட கடுதாசி எழுதியிருக்கான். ஓமானிலிருந்து எப்படியும் இருபத்தியேழாம் நோன்பு இராத்திரிக்குள்ளால வந்திடுவோம் என்று..."

"உம்.... மகள் பரீனாவும் சொல்லிச்சு. வீட்ல எனக்கும் என் மனைவிக்கும் இது தான் பேச்சு. சிறுசுகளோட தலைப் பெருநாளுக்குன்னு ஏதாச்சும் செஞ்சாகனும்.... அது தான் எனக்கு ஒரே யோசனையாக இருக்கு..."

"இதிலே யோசனை என்ன வேண்டிக் கிடக்கு? கையிலே உள்ளதை வைச்சு சொற்பமா எதுவாச்சும் செஞ்சா பத்தாதா.....? வீண் ஆடம்பரம் ஒண்ணும் வேணாம். நானும்... வீட்ல என் மனைவி சகீனத்தும் சரி... என் பையன் மொஹமட் அன்சாரியும் சரி ஏதும் தப்பா நினைச்சுக்க மாட்டோம். அதுக்குள்ள... நான் சொல்ல வர்றது உங்கள் தகுதியைக் கூடி பெரிசு பண்ணாமல் எங்கள் வீட்டில் பெண் எடுத்தீங்க. அதுக்காக வேண்டியே அல்லாஹுக்கு நாங்கள் காலம் பூராவும் 'நோன்பு' நோற்றால் கூடத் தகும். ஆனாலும் சிறுசுகளுக்கு தலைப்பெருநாள் என்கிறதப்ப மனசு கேட்க மாட்டேங்கிறது. அதுகளின் மகிழ்ச்சிக்காகவாவது ஏதாவது செஞ்சாகனுமே..."

நம்ம புத்தளம் மண்ணுக்கு மழை குறைவு. இருந்தாலும் உப்பு வாய்க்காலில் உப்ப இழுக்கிற நேரமாய்ப் பார்த்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை இப்படி வம்புக்கு நின்னு கொட்டோ கொட்டுன்னு கொட்டினாக்கா நம்மாள என்ன பண்ண முடியும். விளைந்த உப்பு மழையில் நனைஞ்சி வீணாப் போச்சு. அதெல்லாம் நீங்க ஒன்னும் கவலைப்பட வேண்டாம். எல்லாத்துக்கும் அல்லாஹ் இருக்கிறான்.

அதுசரிதான். இருந்தாலும் பெருநாள் நெருங்கி வருதே. வீட்டுக்கு மருமகன் வந்ததும் பேசாம உட்கார்ந்திருக்க முடியுமா? சற்றே யோசனையில் ஆழ்ந்த ஜவாத் மரைக்கார் சொன்னார்.

"அதுவும் மெய்தான். ஒரு முயற்சியும் செய்யாம உட்கார்ந்து கிட்டு எல்லாத்துக்கும் அல்லாஹ் இருக்கிறாங்கிற மனிதனை அல்லாஹ் விரும்புறதில்லை. ஆனாலும் இதுக்கு மேலே நீங்க என்ன செய்ய முடியும்." உப்பு வாய்க்கால வித்துப் புடலாமான்னு தான் யோசனை பண்றேன் பதறிப் போனார் ஜவாத் மரைக்கார். "அதுமாதிரி வேலை எதுவும் செஞ்சுப் புடாதீங்க. கடையை வித்து இரால் பண்ண போட்டு கடைசியில ஒன்றுக்கும் வழியில்லாம போன காதரின் நிலைமை வரவேண்டாம். உங்களின் நிலைமை ஆண்டவனுக்கே நன்கு தெரியும். இந்த மாதிரி சந்தர்ப் பத்திலே அவன் யாருக்கும் இல்லை என்று சொல்வதில்லை. மறுபடியும் மறுபடியும் கேளுங்க நிச்சயமாக அல்லாஹ் எதுவாச்சும் வழி காட்டுவான். ஆனால் ஒன்று மட்டும் சொல்வேன். இந்த மாதிரி சடங்கு, சாத்து என்று நாங்கள் ஏதும் உங்களைக் கஷ்டப்படுத்தவில்லை. ஜவாத் மரைக்கார் எழுந்து கொண்டார். கூடவே ஜெமில் மரைக்காரும் எழுந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் காலைத் தொழுகை பள்ளிவாசலில் முடித்து விட்டு திண்ணையில் வந்தமர்ந்தார் ஜெமில் மரைக்கார் வானொலியில் தத்துவப்பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது.

"வருந்தாதே மனமே
வருந்தாதே மனமே
ஒருபோதும் அவனின்றி
ஓர் அணுவும் அசையாதே..."

பாடல் மேடு பள்ளங்களில் ஏறி இறங்கி சரளமாக ஓடியது. பாடல் வரிகளில் நன்றாக லயித்துப் போன ஜெமில் மரைக்காரின் கண்கள் பனித்துப் போயின. "மா பெரியோனே... அல்லாஹ்வே! மறை தந்த வள்ளலே என் துயர் போக்கு..." என்று மனம் கரைந்து இறைவனிடம் வேண்டினார். ஒருவாரம் ஓடி மறைந்திருக்கும் ஜெமில் மரைக்காரின் முகவரிக்கு பேருவளையிலிருந்து பத்தாயிரம் ரூபாய்க்கு மணியோடர் வந்திருந்தது. அந்த ரெஜிஸ்தர் (Register) கடிதத்தில் சுருக்கமாக ஒரு கடிதமும் ஜெமில் மரைக்காருக்கு எழுதப்பட்டிருந்தது. கடிதத்தை விரித்துப் படித்தார் ஜெமில் மரைக்கார்.

ஜெமில் அவர்களுக்கு.

நிஷாம் சலாம் செய்து எழுதிக் கொள்வது என்னவென்றால், இக்கடிதம் உங்களுக்கு மிக்க ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். என்னையும் உங்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. என் வாப்பா ஷெய்யுலாப்தீன் உங்களுக்கு பால்ய சிநேகிதன். வியாபார விடயமாக சிங்கப்பூர் போனவர், அங்கிருந்து திரும்பி வரவில்லை. அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மவுத்தாகிவிட்டார். உங்களிடம் முப்பது வருடங்களுக்கு முன்பு வாங்கிச் சென்ற நூறு ரூபாய் இப்போது எவ்வளவு பெறுமதி என எனக்கு தெரியும். உங்களிடம் அவர் கடனாக வாங்கிய நூறு ரூபாயை எப்படியும் உங்களுக்குக் கொடுக்கச் சொல்லி முப்பது வருடங்களுக்கு முன்பே எனக்கு சொல்லியிருந்தார். ஆனால் அப்போது எங்களுக்கு வசதி இல்லாதிருந்ததாலும், சிறுபையனாக இருந்ததாலும் என்னால் கொடுக்க முடியாமல் போய்விட்டது. நான் பின்பு படித்து பின் அறபு நாட்டில் வேலையொன்று பெற்றுச் சென்று விட்டேன். இம்முறை ஒரு நாற்பத்தி மூன்று நாள் விடுமுறையில் வந்த போது வீட்டில் வாப்பாவின் பழைய டைரியைப் புரட்டிப் பார்க்க நேர்ந்த போது தான் அதில் அவர் உங்களிடம் வாங்கிய காசும் உங்கள் முகவரியும் எழுதப்பட்டிருந்தது. என் சின்ன வயதில் உங்களுக்கு வாப்பா கொடுக்குமதி என்று எனக்குச் சொன்னதும் ஞாபகத்திற்கு வந்தது. அதனால் இதில் பத்தாயிரம் ரூபா அனுப்பி வைக்கிறேன்.

நாற்பத்தி மூன்று நாட்களில் முப்பத்திரண்டு நாட்கள் முடிந்து விட்டது இல்லையேல் உங்களை நேரில் வந்து சந்திக்கலாம். வசதி கிடைத்தால் அடுத்த இரண்டு வருடங்களின் பின்பு விடுமுறையில் வரும் போது நேரில் வந்து உங்களைச் சந்திக்கிறேன்.

இப்படிக்கு
நிஷாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வே! அந்த ஷெய்யுலாப்தீன் எப்போது எனக்குச் சிநேகிதமாகி இருந்தான் என்று நினைக்க நினைக்க வரமாட்டேங்குதே... என்று வாய்விட்டு புலம்பிய ஜெமில் மரைக்காருக்கு மனதிற்குள் ஒரு நிறு நிம்மதியும் கூட இருந்தது. மகளின் தலைப்பெருநாளை எப்படியும் சமாளித்துப் போடலாம் என்று.

ஜெமில் மரைக்காரின் வீட்டில் ஈதுப் பெருநாள் தடல் புடலாகி நடந்து முடிந்தது. எவ்வளவு முயற்சி செய்தும் அந்த பால்ய நண்பன் ஷெய்யுலாப்தீன் பற்றி அவருக்கு ஞாபகப்பிடி கிடைக்கவேயில்லை. ஆனாலும் மனதாலே அல்லாஹ்வுக்கு கோடி கோடியாக நன்றி செலுத்திக் கொண்டார்.

ஓமானில் இருந்து வந்த கணவன் வீடுவந்து சேர்ந்து இருவரும் வசந்தத்தைப் பங்கு போட்டுக் கொள்ளும் மகிழ்ச்சியிலும் தலைப்பெருநாள் சிறப்பாகக் கொண்டாடப் பட்ட பூரிப்பிலும் தலை கால் புரியாத சந்தோஷத்தில் திளைத்தாள் பரீனா.

பெருநாளுக்கு அடுத்தடுத்த தினத்தில் ஜவாத் மரைக்காருக்கு பேருவளையிலிருந்து கடிதம் ஒன்று வந்து சேர்ந்தது. பிரித்துப் படித்தார் ஜவாத் மரைக்கார்.

மதிப்பிற்குரிய ஜவாத் மரைக்கார் அவர்களுக்கு நிஷாம் சலாம் சொல்லி எழுதிக் கொள்வது!

நீங்கள் கேட்டுக் கொண்டபடி ஜெமில் மரைக்கார் அவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய்க்கு மணியோடர் எடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுத் தபாலில் கடந்த வாரம் அனுப்பி வைத்தேன் நீங்கள் எனக்கு அனுப்பிய பத்தாயிரம் ரூபாய்க்கான காசோலையை எனது இலங்கை வங்கிக் கணக்கில் போட்டு பட்டுவாடா செய்து கொண்டேன். நீங்கள் கேட்டுக் கொண்டபடியே ஜெமில் மரைக்கார் அவர்களுக்கு என் வாப்பா உங்களின் பால்ய சிநேகிதன் என்று கதையை வெகு பொருத்தமாக எழுதிவிட்டேன். நன்மையான செயலை முன்னிட்டு நாம் சொன்ன பொய் இது. ஆகவே அல்லாஹ் எங்களை மன்னிப்பானாக.

இப்படிக்கு
உங்கள் நண்பனின் மகன்
நிஷாம்

கடிதத்தைப் படித்து முடித்த ஜவாத் மரைக்காரின் முகத்தில் ஒரு நிறைவான புன்னகை வெளிப்பட்டதை மனைவி சகினத்தும் கண்டுகொண்டாள்.

நன்றி - நவமணி
18-4-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மண்

## 11

மீண்டும் மக்கள் ஓடத் தொடங்கி விட்டார்கள். அவர்களின் ஓட்டம் எப்போது தான் நிற்குமோ...? இந்த ஓட்டத்திற்கு முடிவே இல்லையா? உயிர் தப்பும் ஒரே நோக்கையே குறிக்கோளாகக் கொண்டு வேறு எந்தச் சிந்தனையு மில்லாது ஓடும் மனிதர்கள். வேறு எந்தச் சிந்தனையில் ஓடும் மனிதர்கள் பாரில் பிழை சொல்லுவது? உயிர் வாழ்வதற்காக மனிதன் இப்படி எத்தனை தடவைகள் ஓடப் போகிறான்? மரணம் இந்த நாட்டில் மலியப் பட்டு விட்டு. மனித நேயம் காணாமலே போய்விட்டது. காரணகாரியமின்றி பச்சைக் குருத்தில் இருந்து பழுத்தபழம் வரை ஆயுதம் ஏந்தியவர்களையும் ஆயுதம் ஏந்தாதவர்களையும் மரணம் காவு கொள்கிறது. இந்த நாட்டுக்குப் பிடித்த சாபக்கேடு தான் என்ன...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபது வருடங்களாகத் தொடர்கின்ற இந்த யுத்தத்தினால் எத்தனை ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகி விட்டன. எத்தனையாயிரம் போராளிகள் பலியாகி விட்டனர். எத்தனையாயிரம் இராணுவத்தினர் பலியாகி விட்டனர். எத்தனையாயிரம் பொது மக்கள் மரணித்து விட்டனர். எத்தனையாயிரம் பொது மக்கள் செம்மணி போன்ற பல இடங்களில் புதைக்கப்பட்டு விட்டனர். அந்த மாபெரும் இடம் பெயர்வு ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றி ஐந்தாம் ஆண்டு நடைபெற்றது. மக்கள் எல்லாவற்றையும் ஒருங்கே இழந்து, கொட்டும் மழையில் உயிர்களைக் காப்பாற்றும் ஒரேயொரு நோக்கத்தோடு பல்லாயிரம் வருடங்களாக 'தந்தையும் தாயும் குலாவி மகிழ்ந்த' சொந்த மண்ணைத் துறந்து நன்றாக வாழ்ந்து செழித்த வீடுகளை விட்டு, இரவோடு இரவாக ஐந்து இலட்சம் மக்களும் ஒரே இரவில் அகதிகளாக்கப்பட்டு, முண்டியடித்து நாவற்குழிப் பாலத்தைத் தாண்டி, தென்மராட்சி ஓடி, அங்கிருந்து கிளாலி வழியாகக் கடலைக் கடந்து வன்னி மண்ணுக்கு ஓடிப் போனார்கள்.

வன்னி மண் எல்லோரையும் வரவேற்றது. வன்னிக் காடுகள் பல கிராமங்களைக் கொண்டதாயும், விலங்குகளும் பறவைகளும் வசிப்பதற்கு உரியதாயும் அமைந்திருந்தது. வன்னியில் இருந்த மக்களும் வந்த மக்களை வரவேற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்கொடுத்து உணவு கொடுத்துப் பாதுகாத்து விருந்தோம்பி நின்றனர்.

இந்த வனங்களில் வாழ்ந்த மக்கள், வன்னி மண்ணையும் இங்கு வாழ்ந்த வாழ்க்கையையும் மறந்து போக மாட்டார்கள் என்பது சர்வ நிச்சயம்.

உயிரைக் காப்பாற்றும் நோக்கில் ஓடி வந்த மக்களோடு மக்களாக வந்து இந்த மண்ணின் வனங்களில் அடைக்கலம் புகுந்தவர்கள் நாங்கள். இப்போது கடந்த ஏழு வருடங்களாக இந்த வனங்களில் வாழ்ந்த வாழ்க்கையை விட்டு மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பிக் கொண்டிருக் கின்றார்கள். ஸ்கந்தபுரத்தில் இருந்து அக்கராயன்சந்திவரை சனநடமாட்டம் முற்றாகக் குறைந்து தெரு வெறிச்சோடிக் கிடக்கின்றது. குடியிருந்த மக்கள் மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிப் போக, மண்குடிசைகள் அழிந்து மண்மேடாகிப் போக மறுபடியும் பற்றைக்காடுகள் படர்கின்றது. சனநடமாட்டம் முற்றாகக் குறைந்து போய் விட்டது.

கடந்த ஏழு வருடங்களாக இருந்த ஆரவாரம் முற்றாக அடங்கிப் போய், மல்லாவி போகும் பாதை மௌனித்துக் கிடக்கிறது. கிளிநொச்சி நகரில் வாழ்ந்தவர்களையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி நகரை அண்டிய கிராமங்களில் வாழ்ந்தவர் களையும், இவ்வாறு வந்தவர்களின் கிளிநொச்சி வரையான நகர்வு வனத்தைத் தேடி ஓட வைத்தது.

அடுத்த வேளை உணவுக்கு வழியில்லை. மாற்றி உடுத்த உடை இல்லாமல் அநேகம் பேர் மரநிழல்களில் நின்று கொண்டு வயிற்றில் பசியுடனும் கண்களில் பயத்துடனும் தெரு நீளம் அலைந்தார்கள்.

இந்த வனங்கள் தான் ஓடி வந்த இத்தனை இலட்சம் மக்களையும் தமக்குள் இழுத்து அரவணைத்துக் கொண்டன. வன்னியில் இருந்த மக்கள் மிகவும் நல்லவர்கள். எளிமையானவர்கள். முன் பின் தெரியாது ஓடி வந்த முகம் தெரியாதவர்களுக்கும் தங்கள் குடிசையில் தங்க இடம் கொடுத்தார்கள். தங்கள் வளவுகளில் கொட்டில் போட, குடிசை போட இடம் கொடுத்தார்கள்.

இந்த மனிதர்கள் வந்த பிற்பாடு மல்லாவி போகும் பாதை கலகலப்பாக மாறியது. வீதியின் இரு பக்கமும் அடர்ந்த பற்றைக் காடுகள் கடையப்பட்டு குடியிருப்புகளாக மாறியது. காட்டு மரத்தின் கிளைகளில் சேனைகளினால் கட்டுப்பட்டு ஓலைகளில் குழந்தைகள் உறங்கின. மரங்களை ஆதாரமாகக் கொண்டு சேலைகளினால் சுற்றி அமைக்கப் பட்ட மறைப்பில் குடித்தனம் நடந்தன. மரங்களின் கீழே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளிகளின் நெருப்பில் உலைகள் கொதித்தன. பெண்கள் மரங்களின் மறைவுகளில் நின்று உடை மாற்றிக் கொண்டார்கள். வாய்க்கால்களிலும், குளங்களிலும் நின்று கூட்டமாய்க் குளித்தார்கள். புழுதி பறக்கும் தெருக்களில் குடங்களைச் சுமந்தபடி பெண்கள் தண்ணீருக்காக நடந்து திரிந்தார்கள்.

பகலில் பறவைகளின் கீச்சுக்குரலைக் கேட்டு மகிழ்ந்தார்கள். இரவில் கொடிய விலங்குகளின் தாக்குதல் களிலிருந்து தப்ப வழி தேடினார்கள். பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் மட்டுமே உரிய இடத்தில் அடர்ந்த வனத்தில் மனிதர்கள் வந்து வாழ்வதால் ஏற்பட்ட துன்பம் இது.

தலைக்கு மேலால் கூவிக்கொண்டு போகும் ஹெலிகள், கபீர் விமானங்களின் இரைச்சல்கள் எறிகணைகளின் அதிர்வுகள்...

அக்கராயன் வைத்தியசாலையில் நெருப்புக் கோள்களாய் வந்து விழுந்து வெடித்ததில் நூறுபேர் துடி துடிக்க இறந்து போன கொடுமை.... வன்னிக்குளத் தேவாலயத்தின் மீது தஞ்சமடைந்த அகதி மக்கள் மீது குண்டு விழுந்து ஒன்பது பேர் இறந்து போன துயரம்... வேதனை... உயிருக்குப் பயந்து ஓடி வரும் அகதிகளை வைத்தியசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களோ, தேவாலயங்களோ, இந்து ஆலயங்களோ காப்பாற்ற முடியாமல் போன துயரம்....

வன்னிக்கான அத்தனை வாசல்களும் முற்றாக மூடப்பட்டு இருண்ட கண்டமாக மாறிய கொடுமை. மண்டையிடி, தலையிடிக்குப் பாவிக்கும் பனடோல் கூட பதினைந்து ரூபாவுக்கும் மேலேறிய நிலைமை. குப்பி லாம்பு கொளுத்த மண்ணெண்ணெய் கூட இல்லாமல் கிடந்த அவல நாட்கள். ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் முன்னூறு ரூபாவுக்கு வாங்க வேண்டிய நிலைமை.

அநேகமான மக்கள் இருட்டிலே வாழ்ந்தார்கள். நிலவிலே மக்கள் கொஞ்சம் நிம்மதியாய் இருந்தார்கள். வாழ்க்கை பெரும் சுமையாகி விட்டது. எல்லோர் வாழ்வும் வேதனையாய் மாறியது. வெளியுலகத் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்ட, சுற்றி வளைக்கப்பட்ட மண்ணில் இருந்து கொண்டே வன்னி மக்கள் வாழ்வோடு போராடினார்கள்.

போரின் விளைவுகளுக்கு முகங்கொடுத்தபடி வாழ்வின் சுமைகளுக்கும் முகங்கொடுத்து வாழ இந்த மக்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் விதமும் வன்னி மண்ணின் வரலாற்றில் எழுதப்பட்டது. யுத்த முழக்கங்களின் நடுவேயும் வெடி-யோசைகளின் நடுவேயும் மக்களுக்கு கிடைக்கின்ற சிறு சந்தோஷங்களையும் தமக்குள்ளே பகிர்ந்து கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியில் வாழ்ந்த மக்கள் அடர்ந்த காட்டைக் குடைந்து குடியிருந்ததையும் காட்டு மரத்தின் கொப்புகளில் கட்டப்பட்ட ஓலைகளில் குழந்தைகள் ஊஞ்சலாடியதையும் கைகளில் குடங்களுடன் புழுதி பறந்த தெருக்களில் தண்ணீருக்காக அலைந்து திரிந்ததையும் எறிகணைகளின் தாக்குதலுக்குத் தப்புவதற்காக பல இரவுகள் பயத்துடன் இரவெல்லாம் பதுங்கு குழிக்குள் இருந்ததையும் எவராலும் மறக்க முடியாது.

எத்தனையோ ஆயிரம் போராளிகளின் உயிர்த்தியாகத் திற்குப் பின்னால் கிளிநொச்சி நகரம் மறுபடியும் எழுந்து நிற்கின்றது. பல கிராமங்கள் உயிர்ப் பெறுகின்றன. தோட்டங்களில் பயிர்கள் வளர்கின்றன. வன்னியை விட்டு புறப்பட முன் கிளிநொச்சியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் சென்று பார்த்த போது கண்களில் நீர்க்குளம் கட்டுகிறது. இதயம் துடிக்கின்றது. தோளில் உள் உரோமங்கள் உணர்ச்சித் தழும்பலினால் சிலிர்த்து எழுகின்றன. அங்கு எரிந்து கொண்டிருக்கின்ற தியாகத் தீயில் நெஞ்சம் உருகுகின்றது.

மரணித்த பேராளிகளின் நினைவு ஸ்தூபிகள் வரிசை வரிசையாக.... ஆம், மரணமடைந்த போராளிகளின் கல்லறைகள்... அவர்கள் அங்கு புதைக்கப்படவில்லை. விதைக்கப்பட்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் எங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பும் முன்னால் ஒருவித ஏக்கத்துடன், பாசத்துடன், துக்கத்துடன் நாங்கள் குடியிருந்த இந்த வனங்களைப் பார்க்கின்றோம். இந்த வன்னிக் காடுகளும் இந்த வன்னி மண்ணும் ஏழு வருடங்களுக்கு மேலாய் எம்மைப் பாதுகாத்தவை. நாம் சிரித்த போதும், அழுத போதும் எம்மை மௌனமாய் பார்த்திருந்தவை. இந்த மண்ணிடமும் மக்களிடமும் விடைபெற்றுக் கொள்கிறோம். மீண்டும் ஏழு வருடங்களுக்கு பிற்பாடு எங்கள் சொந்த இடங்களுக்குப் போகும் சந்தோஷத்தில் வன்னி மண்ணுக்கும் வனங்களுக்கும் கையசைக்கின்றோம்.

வன்னி மக்கள் மட்டுமல்ல, வன்னி மண் மட்டுமல்ல, வன்னிக் காடுகளும் அழகானவை தான். என் இதயத்தில் என்றும் அதற்கு நிரந்தரமான பதிவு உண்டு.

நன்றி - உதயன், கனடா
24.6.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த அரபிக் கடலைத் தாண்டி

12

ஸ்ரீலங்கன் விமானம் புறப்படப்போகும் தகவலை அறிவிக்கும் பெண்குரல்... புகைபிடிக்காமல் இருக்கும் படியும் பெல்ட்டை அணிந்து கொள்ளும் படியும் கேட்டுக் கொள்கிறேன். விமானத்தின் கூரையில் அமைக்கப்பட்டிருந்த ஒலி பெருக்கியிலிருந்து அந்தத் தேன் குரல் மிகவும் துல்லியமாக எந்தவித பிசுறும் இல்லாமல் குழைந்து இழையோடியது.

விமானத்தின் இடுப்பிலும் கழுத்திலுமிருந்து படிக்கட்டுக்கள் அகற்றப்பட்டு கதவு மூடப்பட்டதும் விமானத்தின் எஞ்சின்கள் இரைந்தன. எஞ்சின்களின் இயக்கம் பெரும் சீறலாகி எழுந்து ஆர்ப்பரித்தது. அதைத் தொடர்ந்து விமானம் நகர்ந்து ஓடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வீறலுடனும் சத்தத்துடனும் ரன்வேயைத்தேய்த்துக் கொண்டு ஓடி அப்படியே 45° கோணத்தில் எழும்பி உயர்ந்து நீலவானத்தில் பறந்து கொண்டிருந்தது.

விமானம் ஆடாமல் அசையாமல் கும்ம்ம்ம்........ என்ற ஒரு சீரான நாதத்துடன் மேக மண்டலத்தைத் தாண்டி வான வெளியில் உற்சாகமாக நீச்சலடித்துப் பறந்து கொண்டிருந்தது.

அழகான ஏர் ஹோஸ்டஸ் பெண்கள் உதடுகளில் புன்னகையை லேமினேட் செய்த வண்ணம் அங்கும் இங்குமாக நடைபோட்டுக் கொண்டிருந்தார்கள்.

இதமான மெலிதான மணம் பதப்படுத்தப்பட்ட காற்றில் கலந்து உறவாடி நாசிப் பிராந்தியத்தில் நெருடி ஒரு சந்தோஷமான சூழ்நிலையை உற்பத்தி செய்து கொண்டு இருந்தது.

எயர்ஹொஸ்டஸ் உடம்பு செழுமையாக அமைந்து சீராக வளர்ந்து உறுப்புக்கள் யாவும் ஆரோக்கியத்துடன் பரவி ஒவ்வொரு பிராந்தியமும் ஆண்கள் வட்டாரத்தை அசத்தி விமானத்தில் பயணம் செய்யும் பயணிகளின் கண்களுக்கு தூண்டில் போடக்கூடியதாக இருந்தது.

அங்குள்ள பல எயர்ஹொஸ்டஸ் மயிலிட்டி தக்காளிப் பழத்தின் சிவப்பில் செழுமையான உடற்கட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தார்கள். விமானத்தில் புதிதாகப் பயணம் செய்பவர்களுக்கு பெல்ட்டை எப்படி அணிந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் ஆபத்து நேரத்தில் என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் விமானப் பணிப்பெண்கள் செய்து காட்டிக் கொண்டிருந்தார்கள்.

பெல்ட்டைப் போடத் தெரியாதவர்களுக்கு அவர்கள் இருக்கையில் பெல்ட்டைப் போட உதவினார்கள். தன் இருக்கையில் அமர்ந்திருந்த துஷ்யந்தன் விமானத்தின் நடுப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த தொலைக்காட்சியில் ஓடிக்கொண்டிருந்த நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டு இருந்தான். அப்போது மீண்டும் விமானப் பணிப்பெண்ணின் இனிமையான குரல் "நாங்கள் இப்போது 36000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கிறோம். இன்னும் மூன்று மணித்தியாலத்தில் ஸ்ரீ லங்கா விமான நிலையத்தை அடைந்து விடுவோம். நன்றி" என்று முடிந்தது.

ஸ்ரீ லங்கா தாய்நாடு என்னும் மூன்று மணி நேரத்தில் என் இனிய அம்மாவையும் அப்பாவையும் உறவினர்களையும் என் மனதிற்கினிய சகுந்தலாவையும் இரண்டு வருடங்களின் பின் காணப்போகிறேன் என நினைத்ததுமே மனம் சிறகடித்துப் பறக்கத் தொடங்கியது.

சகுந்தலா... கடைந்தெடுத்தாற் போன்ற தேகம். தொட்டால் கன்றி விடும் வெள்ளரிப்பிஞ்சு உடம்பு. இவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணந்து கொள்ள எவன் கொடுத்து வைத்திருக்கிறானோ என எண்ண வைக்கும் தோற்றம். அந்தக் கண்ணும் சிரிப்பும் இன்னமும் இவன் மனதில் சித்திரமாய் இருக்கிறது. இருண்ட வானத்தில் ஒரு மின்னல் தோன்றி மறைவது போல் அந்தச் சிரிப்பு நெஞ்சை அள்ளும்.

ஒரு நடு மத்தியான நேரம் அவள் வீட்டில் யாரும் இல்லை. வீட்டுக்கு வந்த விருந்தினர்களுக்கு உணவு பரிமாற தலை வாழை இலை வெட்டுவதற்காக அம்மா அவனை அனுப்ப அவன் அவள் வீட்டுக்குப் போயிருந்தான். அவளும் நீண்ட காலம் வெளியூரில் தங்கிப் படித்ததால் அவனும் அவளும் சந்தித்ததே இல்லை. அவனும் அவளும் சந்தித்த முதல் சந்திப்பு அது. ஆனால் மனசுக்குள்ளே அன்று விதை எப்படி விழுந்தது என்று சொல்ல முடியவில்லை. விழுந்த இடம் என்னவோ பாறையாகி இல்லாமல் நல்ல செம்பாட்டு மண்ணாகி நல்ல மனசாக இருக்கவே விதை வேர்பிடித்து தளிர் விட்டது. பூமியைக் கீறி வெளிவந்தது.

இதுதான் சந்தோஷம். இதுதான் வாழ்க்கையின் மிகப் பெரிய கொடுப்பினை. ஆயிரம் வண்ணத்துப் பூச்சிகள் மனதிற்குள் சிறகடித்துப் பறக்க நெஞ்சம் முழுவதும் பூக்காடு ஆகும். மண்ணுக்குள் மட்டுமல்ல மனசுக்குள்ளும் ஊற்றுவரும். பொங்கிப் பிரவாகிக்கும் சிற்றலைகளாய் கரைகளில் மோதும். காற்றுள்ளவரை அலையும் உண்டு காதலும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் ஒரு இனிய மாலைப் பொழுதில் கடற்கரையில் வைத்து அவளிடம் அவன் தனது காதலைச் சொன்னபோது அவள் வெட்கத்துடன் புன்னகைத்த புன்னகையில் அவள் கன்னம் குழி விழுந்ததே. அவள் தனது கன்னக் குழிக்குள் அவனை மடக்கி விழுத்திவிட்டாள். மூர்ச்சையற்றுக் கிடந்த மரங்களில் வசந்த காலம் வந்ததுமே பசுந்தளிர் எழுந்து வருமே அப்படி அவள் இமைகள் கொஞ்சம் எழுந்தன. கடல் அலைகளைக் கரைக்கனுப்பி எதற்கோ நோட்டம் பார்த்து வரச் சொல்லிக் கொண்டு இருந்தது. அவளது தலைமுடி பறவையின் இறகுபோல இரண்டு பக்கமும் விரிந்து அவன் முகத்தில் மோதியது. அலைகளைக் கடந்து காற்று அவள் முடியை ஊடுருவி அவன் கன்னத்தை முத்தமிட்டது. அவளது முடிக் கற்றை அவன் முகத்தில் புதுக் கவிதை எழுதிக் கொண்டிருந்தது. இருவரும் இப்படி கதகதப்பான கடற்கரையில் இருக்கும் போது எத்தனை சுகமாக இன்பமாக இருக்கின்றது. கற்பனை சுகத்தில் மங்கலான வெளிச்சத்தில் ஏங்கிய உள்ளத்துடன் அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். புரியாத உணர்ச்சிகள் உணர்வுகள் இன்னதென்று உள்ளூர உணரமுடியாமல் மனதில் அர்த்தமில்லாத ஆனந்தம் இருவர் மனத்திலும் சுழன்று சுழன்று மறைந்தது.

அவனுடன் பேசும்போது இவள் கண்கள் நேருக்கு நேராகச் சந்தித்தபோது அவனது பேச்சை உன்னிப்பாகக் கவனித்தபோது அவள் முகம் பிரகாசமாகச் சுடர்விடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கென்று தானே ஒரு நல்ல காதலனை துணையைக் கண்டுபிடித்துவிட்டதால் ஏற்பட்ட சுடர். அவனது அறிவுப் பூர்வமான பேச்சில் இலயித்து அந்த இலயிப்பில் உண்டான சுடர். அவனது ஒவ்வொரு வார்த்தைகயையும் செயலையும் முகபாவத்தையும் உற்றுக் கவனித்த பெருமையில் பூரித்துக் கண்களில் பூத்த சுடர். இது சாதாரணமாய் எந்த ஆணிடமும் ஒரு பெண்ணுக்கு தோன்றிவிடக்கூடிய கவர்ச்சி இல்லை. அதற்கும் மேலே இரண்டு அன்பு நெஞ்சங்கள் இணைந்து விட்டதால் ஏற்பட்ட பெருமிதம் பார்வையில் சுடராய் ஜொலிக்கிறது.

துஸ்யந்தன் ஓமான் புறப்படுவதற்கு நான்கு தினங்களுக்கு முன்பு ஒரு மாலை கடற்கரையில் சந்தித்த போது அவள் கண்கள் அழுதழுது சிவந்திருந்தன. அவள் அவன் மார்பில் முகம் புதைத்து மௌனமாக அழ ஆரம்பித்தாள். ஆதரவாய் அவளது தலையை முதுகை ஆதரவாய்த் தடவிக்கொடுத்தான் துஸ்யந்தன். ஒவ்வொரு பெண்ணின் உயிரித்தேவை அதுதான். அந்த இதம்... அந்த கதகதப்பான உத்திரவாதம்... அந்த தடம்பதியாத தடவல்.... பாசம் குழைந்தஸ் பரிசம் ஒவ்வொரு பெண்ணின் உள்ளாசை அதுதான். பெரிதும் பெண்கள் ஆராதிப்பது அதிஸ்ப்புணரும் அந்நிகழ்வை அல்ல அவர்கள் அதிகம் விரும்புவது இந்த நேசம் நிஜம் என்னும் நினைப்பை அவர்கள் பெரிதும் பிரியப்படுவது பின் கழுத்தில் விரல் பதித்துக் கூந்தல் ஆழத்தில் செய்யும் கோதுகையை பூக்களுக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுளுக்கெடுப்பது போல விரல்களுக்குச் சொடுக்கெடுக்கும் வேடிக்கையை தனக்குரியவனின் முடி கொண்ட மார்பில் முகம் புதைத்து விழித்துக் கொண்டே உறங்கும் ஒரு மயக்க நிலையை. அந்த மனோநிலையில் மயங்கிக் கிடந்த சகுந்தலா இமைகளை விழியில் இருந்தும் தன்னை அவன் மார்பில் இருந்தும் விலக்கிக் கொள்ள முடியாமல் விலகினாள். அன்று மாலை கடற்கரையில் இருந்து வீடு திரும்பிய அவள் பாத்ரூமில் அவள் தனது கவலைகளை ஷவரில் பீறிட்டுத் துவானமாய் விழும் நீர்த்துளிகளில் கரைக்கப் பார்க்கிறாள்.

ஆனால் சோப்பு நுரை கண்ணில்பட்டு அடங்கியிருந்த கண்ணீர் மீண்டும் பெருக்கெடுத்துப் பாய்கின்றது. அவளது கண் சிவந்திருந்ததையும் அவள் முகம் வாடிப்போய் இருப்பதையும் சகுந்தலாவின் தாய் கண்டுகொண்டாள். காரணத்தை மெதுவாகக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். மனது தவித்தால் ஒருத்தி தன் தாயின் அணைப்பில்தான் அமைதிகாண முடியும்.

துஸ்யந்தன் ஓமான் புறப்படுவதற்கு இரண்டு நாளுக்கு முன்பே இவர்கள் இருவர் வீட்டிலும் இவர்களின் காதல் தெரிந்து விட்டது. இருபகுதி வீடும் நல்ல குடும்ப சிநேகிதம் என்பதால் பெரிதாக எந்த எதிர்ப்பும் இல்லை. துஸ்யந்தன் தனது காதலை தனது அம்மாவிடம் சொல்லியபோது தாயும் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டாள். துஸ்யந்தனின் தாயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையும் காதலித்து திருமணம் செய்தார்கள் என்பதால் காதலின் மென்மை, அன்பு, புனிதம், ஆழம் பற்றி நன்கு தெரியும். தாய் அன்பு என்பது கோடையில் வற்றிப் போகிற குளம் அல்ல. அது மகாவலி கங்கையைப் போல அன்பு பெருக்கெடுத்தப் பாயும் நதி என்பதை துஸ்யந்தன் தன் தாயின் அன்பில் இருந்து தெரிந்து கொண்டான்.

இன்னொரு நாள் மாலையில் இருவரும் கடற்கரையில் கடலைப் பார்த்தவாறே அமர்ந்து கதைத்துக் கொண்டிருக்கும் போது "நான் நேற்று இரவு உன்னை என் கனவில் கண்டேன்" என துஸ்யந்தன் சொல்ல "எப்படி.... எப்படி...." என சகுந்தலா கேட்க பிறந்த மேனியாய் என்று அவன் சொல்ல சீ....சீ.... என்று அவள் வெட்கித் தலைகுனிந்த போது முகம் முழுக்கத் தக்காளிப் பழ நிறம். அவள் வெட்கத்தைப் பார்த்து கரைக்குவந்த அலைகூட மீண்டும் கடலுக்குத் திரும்பிப் போய்விட்டது.

அவன் நடு இரவில் விமானம் ஏறி ஓமான் போன பிற்பாடு அவள் அன்றிரவு கட்டிலில் படுத்து நிம்மதியாய் நித்திரைகொள்ள முடியாது துடித்து ஏங்கிப் போனதை தனது முதல் கடிதத்திலேயே தெரியப்படுத்தினாள். அவனும் அவளும் அந்த இரண்டு வருடமாய் செய்திகளை கடிதத்தில் வரைந்து கொண்டேயிருந்தார்கள். இடையிடையே தொலைபேசியிலும் கதைப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஸ்யந்தன் கொஞ்சம் இயற்கை விரும்பி. இயற்கை எழிலை, தான் கண்ட காட்சிகளை ஓமான் இயற்கை அழகை ஓமானில் புதைத்து கிடக்கும் செய்திகளை அவளுக்கு நீண்ட கடிதமாக எழுதியனுப்புவான். ஓமான் நாட்டின் தலைநகரம் மஸ்கட். மஸ்கட் நகரில் இருந்து தென்மேற்கில் 1100 கி.மீ. தூரத்தில் (தொலைவில்) மூன்று பக்கம் உயர்ந்த மலைகளாலும் ஒருபக்கம் அரபிக் கடலாலும் சூழப்பட்டு உள்ள அழகான இடம் சலாலா என்ற பசுமையான நகராகும். வான் நோக்கி வரிசையாக வளர்ந்தோங்கி நிற்கும் தென்னை மரங்களும், பார்க்குமிடமெல்லாம் பச்சைப் பசேல் என கண்ணுக்குக் குளிர்ச்சியாக அழகாகப் பூத்துக் குலுங்கும் பூமரங்களும், ஓயாமல் அலை அடித்து கரைமண்ணை உள்ளிழுத்துச் செல்லும் அரபிக் பெருங்கடலும், ஒரு பெரிய கப்பலொன்று கடலுக்குள் நிற்பதைப் போல அழகாக வடிவமைக்கப்பட்ட Raysut கப்பல் துறைமுகமும், கப்பல்களும் சமிஞ்சை கொடுப்பதற்காக கட்டப்பட்ட உயர்ந்த லைட் ஹவுஸ"ம் எண்ணற்ற வெளிநாட்டுக் கப்பல்கள் பொருட்களை ஏற்றியிறங்கும் சுறுசுறுப்பும் எங்கிருந்து பார்த்தாலும் தொடர்ந்து 24 மணி நேரமும் சீமெந்து உற்பத்தி செய்து கொண்டிருக்கும் Chimeny யும் மனதை ஒரு இரம்மியமான நிலைக்கு இழுத்துச் செல்லும்.

மூன்று பக்கம் உயர்ந்த மலைகளாலும் ஒரு பக்கம் அரபிக் கடலாலும் சூழப்பட்ட இடமென்பதால் குற்றால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைச் சாரல் போல் பாலைவனச் சாரல் பொழிந்து மகிழ்விக்கும்.

வருடத்தில் ஆடி மாதம், ஆவணி மாதம் Kareef Season நடைபெறும். அப்போது Exhibition களியாட்ட விழாக்களும் நடைபெறும். இங்கு வாழை, தென்னை, பப்பாளி, மா, முருங்கை, கரும்பு போன்ற அனைத்தும் விளைவதைப் பார்க்கும் போது சிறந்த சோலையொன்றுக்குள் நுழைந்து விட்டாற் போன்று இலங்கையின் மலை நாடான நுவரெலியாவை ஞாபகப்படுத்தும். பாலைவன நாட்டில் இருப்பது போன்றே தெரியாது. இங்கு ஆயிரக் கணக்கில் ஒட்டகங்கள் வாழ்கின்றன.

சலாலா நகரில் இருந்து 40 கி.மீ. தூரத்தில் உள்ள மலையில் Propet St.Job அவர்களது சமாதி உள்ளது. இவரை எல்லா மத மக்களும் போற்றுகின்றனர். வசதி இருந்த போதும், வசதிகளை இழந்த போதும் இவர் ஒரேவிதமாய் மக்களுக்கு தொண்டு செய்தார் என்கின்றனர். பொறுமை யுடன் இவர் மக்களுக்குச் செய்த தொண்டைக் கண்டு இவரைத் துன்புறுத்திய சாத்தானே தனது தோல்வியை ஒப்புக் கொண்டதாய் அவர் செபம் செய்த இடத்தையும் அவரின் காலடிச் சுவடுகள் பதித்த கல்லறையையும் இன்றும் பாதுகாத்து வருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலாலாவில் இருந்து 70 கி.மீ. தொலைவில் உள்ள மற்றோர் இடம் மிகவும் அதிசயமானது. இந்த இடத்தில் உள்ள சுமார் 500 மீற்றர் நீளப் பாதை புவியீர்ப்பு விசைக்கு எதிராகி இயங்கிக் கொண்டிருக்கின்றது. உலகில் இதுபோன்று இரண்டு இடங்கள் மட்டுமே உள்ளதாம். இந்த குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் 300 மீற்றர் தொலைவு வரை ஒரு சரிவுப் பாதை உள்ளது அதன்பின் மேல் நோக்கிச் செல்லும் பாதை உள்ளது. இந்தக் குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் காரின் Engine ஐ நிறுத்திவிடலாம். Driver, ஸ்டியரிங், பிரேக் ஆகியவற்றை மட்டுமே Control செய்தால் போதும். கார் மெல்ல நகர்ந்து நல்ல வேகத்துடன் மணிக்கு 20 கி.மீ. முன்னேறிச் செல்கிறது. காரைப் பின்பக்கமாகத் திருப்பி வைத்தாலும் பின் பக்கத்தினால் முன்னே ஏறிச் செல்கின்றது. மிக அதிசயத்துடன் இரசிக்கலாம். எஞ்சினின் உதவியின்றிக் கார் புவியீர்ப்பு விசைக்கு எதிராகச் செல்வது எவ்வளவு விந்தையானது.

உலகிலேயே மிகக் குறுகிய காலத்தில் முன்னேறிய, முன்னேறிக் கொண்டிருக்கும் மிகத் தூய்மையான நாடு என பெயர்பெற்றது ஓமான். அதைவிடச் சிறந்ததாக நாங்கள் கருதுவது மத நல்லிணக்கமும் ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழும் இந்த நாட்டினரின் பரந்த மனப் பான்மையும், அவர்களை நல்ல வழியில் ஆட்சிபுரியும் அனுசரனை சுல்தான் கபூஸ் ஆகும். மற்ற நாட்டு மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து குடிபுகுந்தாலும் சுமையாகக் கருதாமல் வரவேற்றுத் தாங்கி நிற்கும் பரந்த மனப்பான்மையும் போற்றத்தக்கது.

இந்த ரேய்செட் சிமென்ட் கம்பனியின் சீமெந்து பல நாடுகளுக்கு கப்பல் மூலம் அனுப்பப் படுகின்றது. அருகிலேயே போர்ட் சலாலாவும் உள்ளதால் இங்கு உற்பத்தியாகும் சிமென்ட் யமன், மலேசியா, மஸ்கட், மொரீசியஸ், இலங்கை இற்கு கப்பல் மார்க்கமாக அனுப்பப்படுகின்றது. மிகவும், Latest and Modernised முறையில் Computer Operation, D.C.S. System மூலம் இயக்கப் பட்டு சுண்ணாம்புக்கல் அசைத்தல், கிளிங்கராக்குதல், பின்பு சீமெந்து உற்பத்தி என்பன தரமான முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றது. இங்கு நான்கு வகையான சீமெந்து உற்பத்தி செய்யப்படுகின்றது. Ordinary of Land, Cement, Posmix Cement, Oil well Cement எண்ணெய்க்கிணறு கட்டப் பாவிக்கப் படுவதால் இங்கு உற்பத்தியாகும் தரமான Oil well Cement பல எண்ணெய் வள நாடுகளால் நல்ல விலையில் விற்கப் படுகின்றது.

இங்கு தொழிலாளி, முதலாளி, கூலியாள் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோரும் வெவ்வேறு நாடுகளில் இருந்து இந்த சிமெந்து கம்பனிக்கு வேலைக்கு வந்தார்கள் என்பதால் எல்லோரும் மிகவும் நட்பாகப் பழகிக் கொள்வார்கள். கேரள மாநிலத்தினர் இங்கு சற்று அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதால் ஓணம் பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. அன்றைய தினம் கம்பனி மிகவும் பல வர்ண விளக்குகளால் ஜோடிக்கப்பட்டு இருக்கும். பெரிய உயர் பதவியில் உள்ளவர்களில் இருந்து சாதாரண வேலையாள் வரை எல்லோரும் தங்கள் தங்கள் குடும்பத்தினருடன் இந்த Reysut Cement Company Camp இற்கு இரவு உணவு சந்தோஷமாக தொழிலாளர்களுடன் ஒன்றாக அமர்ந்து தங்கள் தங்கள் குடும்பத்தினருடன் அமர்ந்து உண்ணும் அழகு இங்குள்ள தொழிற்சாலையின் உற்பத்திக்கும், நட்புரிமைக்கும் நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

இலங்கையில் இரயில்வே கடவையில் பிரதான வீதிகளில் 'ரயில் வரும் கவனம்' என்று போடப்பட்டிருக்கும் அறிவித்தல் பலகை போன்று ஓமானில் பிரதான அதிவேக சாலைகளில் வாகன ஓட்டுனர்களின் கவனத்திற்கு 'ஒட்டகம் குறுக்கிடும் கவனம்' என எச்சரிக்கை அறிவித்தல் பலகை போட்டிருக்கும். அவன் ஓமான் பற்றி எழுதிய செய்திகளை வைத்தே அவள் தனக்குள் ஒரு ஓமான் ஐ உருவாக்கி வைத்திருந்தாள். அதையும் தனது கடிதத்தில் எழுதி யிருந்தாள்.

பக்கத்திலிருந்து ஒரு பெண் சுங்க அதிகாரிகளுக்கு கொடுக்கவேண்டிய பத்திரத்தை நிரப்பித் தரும்படி கேட்க இவனின் சிந்தனை எல்லாம் தடைபட்டுப் போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானத்தில் வந்த பெண்கள் கூடுதலாகப் பணிப் பெண்களாக அரபி வீடுகளில் பணிபுரிந்தவர்கள் அவர்களின் சோகக் கதைகள் அவனுக்குத் தெரியும்.

தங்கள் குடும்பங்களுக்காகத் தங்களையே உருக்கும் மெழுகுவர்த்திகள் அவர்கள். கிட்டத்தட்ட பத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு சுங்கப் பத்திரத்தை நிரப்பிக் கொடுத்தான். மீண்டும் அவனின் சிந்தனை தொடர்கின்றது. இப்போது அம்மா, அப்பா, சகுந்தலா, மற்றும் உறவினர்கள் அவனை வரவேற்க கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து காத்திருப்பார்கள் என்ற எண்ணமே அவன் மனதை உற்சாகமாக வைத்திருந்தது. எழுபத்தி ஐந்து நாள் விடுமுறையில் ஓமானில் இருந்துவரும் அவன், அவன் வேலை செய்யும் Reysut Cement Company யில் தனது நண்பர்களுக்கும் அறையில் வேலை செய்யும் தனது சக எரியூட்டு இரசாயினிகளுக்கும் தனது திருமண அழைப்பிதழ் கொடுத்திருந்தான். அவனது நண்பர்கள் சந்தோஷமாக இவனை வாழ்த்தி அன்புப் பரிசுக் கொடுத்ததையும் நன்றியுடன் நினைத்துக் கொண்டான்.

விமானம் சரியாக அதிகாலை 5.30 மணிக்குத் தரை யிறங்கியபோது விமானப் பயணிகளின் முகத்தில் எல்லையற்ற சந்தோஷம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த நாட்டின் சுதந்திரக் காற்றை சுவாசித்துக் கொள்ள மனம் விரைந்தது. இரண்டு வருடங்கள் ஓமானில் இருந்து திரும்பும் எனக்கே இப்படி என்றால் 14 வருடங்கள் வனவாசம் இருந்து திரும்பிய இராமன் மனநிலை எப்படி இருந்திருக்கும்? என மனதில் எண்ணிப் பார்த்துக் கொண்டான்.

விமானம் தரையிறங்கி ரன்வேயைத் தேய்த்துக் கொண்டு ஓடி விமானத் தளத்தின் முன்னால் வந்து நின்றது. விமானத்தில் இடுப்பிலும் கழுத்திலும் படிக்கட்டுக்கள் பொருத்தப்பட்டதும் விமானத்தின் கதவு திறக்கப்பட்டது.

அழகான ஏர்யோஸ்டஸ் பெண்கள் வாசலில் நின்று கூப்பிய கரங்களுடன் வழியனுப்ப விமானத்தில் இருந்து பயணிகள் உதிரத் தொடங்கினார்கள். முன்னால் இருந்து விமான ஓட்டிகளும் கண்ரோலரும் பின்னால் இருந்து விமானப் பணிப் பெண்கள் சிரித்துச் சிரித்து பேசிய படியே வந்தார்கள். நீண்ட வரிசையில் நின்று சுங்கப் பரிசோதனையை முடித்துக் கொண்ட துஸ்யந்தன் விமானத் தளத்தின் வெளியே வந்தான்.

அங்கு துஸ்யந்தனை வரவேற்க அவனது அன்பு அம்மா, அப்பா, பப்பா, Grandma, Grand dady, சுரேஸ் மாமா, ரவி மாமா, ஜீவா மாமா, இளவா, மாமா, மாமி, ஆசை மாமி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன மாமி, சிஸ்டர் மாமி, பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், தம்பிமார், மச்சாள்மார், மச்சான் மாருடன் சகுந்தலாவும், சகுந்தலாவின் தாயும் வந்திருந்தார்கள். எல்லேரையும் பார்த்து சந்தோஷமாக கையசைத்த துஸ்யந்தனுக்கு அவர்களும் கையசைத்து வரவேற்றார்கள்.

இனிய ஒரு அமிர்தயோக வெள்ளிக்கிழமையன்று துஸ்யந்தன், சகுந்தலாவின் வெண் சங்குக் கழுத்தில் மாங்கல்யத் தாலியைக் கட்டினான். அந்த அராபிக் கடலைத் தாண்டிய அவர்களின் அன்பும் அவர்கள் காதலும் அராபிக் கடலைவிட ஆழமானது என உறவினர்கள் நண்பர்கள் எல்லோரும் புரிந்து கொண்டார்கள்.

*நன்றி - தினகரன், வாரமலர்*
*4.4.2004*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியரைப் பற்றி...



செல்வக்குமார் என்னும் பெயரில் இலக்கிய உலகிலும், T.அன்ரன் என்னும் பெயரில் பரவலாகவும் அறிமுகமாகியுள்ள அன்ரன் செல்வக்குமார் தனது 15—ஆவது வயதில் 'செவ்வந்தி' காலாண்டு சஞ்சிகையில் வெளியாகிய "புதிய பாடம்" சிறுகதையின் மூலம் (25.6.1975) இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்தவர். இதுவரையில் நானூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட கவிதைகளையும், 72 சிறுகதைகளையும், பத்து ஆங்கில சிறுகதைகளையும், பல கட்டுரைகளையும் படைத்துள்ள இவர் இன்றைய தலைமுறையின் துடிப்புமிக்க கவிஞரும், எழுத்தாளரும், நாடக நடிகருமாவார்.

இலங்கை சிமேந்துக் கூட்டு ஸ்தாபனத்தில் (புத்தளம்) Shift Burner Chemist உத்தியோகஸ்தராகக் கடமையாற்றி, Saudi Cement Company—யில் 5 வருடங்களும், Eastern Province Cement Company-யில் 5 வருடங்களும், Raysut Cement Company, Oman —இல் 2 வருடங்களும் கடமையாற்றிய இவர் தற்போது Qater National Cement Company—யில் Central Control Room—ல் புரடக்ஷன் சூப்பிரண்டென்ட்டாக கடமையாற்றுகிறார்.

சிறந்த உதைப் பந்தாட்ட ஹொக்கி வீரரான இவர் அகில இலங்கைப் பாடசாலை உதைப் பந்தாட்ட தெரிவுக் கோஷ்டியிலும், இலங்கை இளைஞர் உதை பந்தாட்ட தெரிவுக் கோஷ்டியிலும் இலங்கை இளைஞர் ஹொக்கி தெரிவுக் கோஷ்டியிலும் அங்கம் வகித்த முன்னணி வீரர் என்பதும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

—பதிப்பகத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org